வாரப் பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப்பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194A, BANDARANAIKE MAWATTE, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.

புத்தகம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 1993 புரட்டாதி திங்கள் 14-ம் நாள் (30—9—1962) ஞாயிற்றுக்கிழமை ரபி. ஆகிர் 30 | இதழ் 18



மில்க்வைற் நீலசோப்

பிரகாசமாய் சலவை செய்கிறது!

மில்கவைற சோப் தொழிற்சாலை யாழ்ப்பாணம்

# தரிசு நிலத்தில் குடியேற்றம்

## விவசாயிகள் திரண்டு சென்று காடு வெட்டுகின்றனர்

## மூதூர் முதல் எம். பி. விடுத்த வேண்டுகோளின் எதிரொலி

சினக்குடா.

தமிழ் பேசும் மக்கள் தரிசு நிலங்களில் தயங்காமல் குடியேறி விவசாயம் செய்ய வேண்டு மென்று மூதூர் முதலாவது எம். பி. ஜனாப் முகம்மதலி சினக்குடா ஆலிம் அப்பா மௌலூது விழாவில் ஒரு பகிரங்க வேண்டுகோள் விடுத்திருந்ததாகப் பத்திரிகைகளில் செய்தி வெளி வந்ததல்லவா? அந்த வேண்டுகோளுக்கிணங்க வெள்ளை மணல் எனனும் இடத்தைச் சேர்ந்த சுமார் 30 பேர் ஒன்று சேர்ந்து காடு வெட்டும் கருவிகளுடன் நாச்சிக் குடாவுக்குச் சென்று, தங்களுக்குள்ளேயே ஒரு திட்டம் வகுத்துக் கொண்டு தலைக்கு ஒரு ஏக்கரா விதம் காடு வெட்டத் தொடங்கியுள்ளார்கள் என்று சுதந்திரனுக்குத் தகவல் கிடைத்துள்ளது ஜனாப் முகம்மதலியின் பிரசங்கம் கடந்த வாரம் சுதந்திரனிலும் பிரசுரிக்கப் பட்டிருந்தது.

யுத்தகாலத்தில் நாச்சிக்குடா மிகவும் பிரபல்யமான கடை வீதிகளும் குடிசனங்களுமடங்கிய ஒரு பெரும் முஸ்லிம் கிராமமாக அழகுறத் தோற்றமளித்துக் கொண்டிருந்தது.

1942-ம் வருடம் சித்திரை மாதம் 9-ம் தேதி ஜப்பானியரின் விமானத் தாக்குதல் சினக்குடா விமானத் தளத்திலும் கப்பல்களிலும் எண்ணெய்த் தொட்டிகளிலும் பீரங்கிப் பாசறைகளிலும் வெடிமருந்துக் கிடங்குகளிலும் திருவிளையாடல் புரிந்ததினுல் சிங்கப்பூரும்ஜப்பானியர் வசம் சிக்கிவிட்டதினுல், ஊர் முனைகளையெல்லாம் போர்முனையாக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. நாச்சிக்குடா மக்களின் கடைகளையும் வீடுகளையும் காலி செய்து ஓடிவிடும்படி பிரிட்டிஷாரால் நிர்ப்பந்திக்கப்பட்டதனுல், நாங்கள் பிறந்து தவழ்ந்து வளர்ந்த தங்கப் பூமியையும் பயிர் பச்சைகளையும் வீடு வாசல்களையும் கைவிட்டு "தலை தப்பினுல் போதும்" என்று கிண்ணியாவை நோக்கி குடியேறினுர்கள் அந்த ஊர் மக்கள்.

காலக் கிரமத்தில் இக்காணிகளுக்கு மாதாந்த வாடகை செலுத்தி வந்தனர் பிரிட்டிஷார் 18 வருட

(8-ம் பக்கம் பார்க்க)

## பங்கீடு செய்ய அரிசி கையிருப்புப் போதாது

### ஜனவரி 13க்குப் பிறகு மக்கள் பட்டினிதானு?

உணவு அமைச்சின் ஓர் அறிக்கையின்படி இந்நாட்டு மக்களுக்கு பங்கீட்டு அரிசி டிசம்பர் கடைசியிலிருந்து கிடைக்குமா என்று சந்தேகிக்க வேண்டியுள்ளது.

தற்போதைய அரிசி நிலைமையின் படி பார்த்தால் 1963 ஜனவரி 13ந்தேதி வரைதான் பங்கீடுசெய்ய அரிசி போதுமானதாக இருக்குமென்று தெரிகிறது.

குறைக்கப்பட்ட 50,000 தொன் பர்மா அரிசியில் இப்பொழுது 10,000 தொன் மட்டுமே பர்மா கொடுப்பதாகத் தெரிவித்துள்ளது. அது முழுவதும் கிடைத்தாலும்கூட ஜனவரி கடைசி வரைதான் அரிசி கையிருப்பிலிருக்கும். ஒருமாதம் பங்கிடு செய்வதற்கு அரிசி தொன் 69,000 தேவைப்படும்.

### பெரியார்கள் நினைவு விழா

எல்லாம் தமிழ் இயக்கத்தினரால் ஈழப்பெரியார்கள் நினைவு விழா 30-9-62 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு வெள்ளவத்தை சைவ மங்கையர் கழக மண்டபத்தில் திரு. ப. குமாரசாமி தலைமையில் நடைபெறும். தமிழரசுத்தந்தை, டாக்டர் நாகநாதன், திரு. இராசதுரை, ஜனுப் மசூர் மௌலானு முதலானோர் உரை நிகழ்த்துவார்கள்.

வில்லுப்பாட்டு

—வயிறு வெடிக்கச் சிரிக்க வைக்கும் மட்டக்களப்பு மாஸ்டர் சிவலிங்கம் குழுவினரின் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியும் நடைபெறும். மட்டக்களப்பில் பரந்துகிடக்குப் கலைத்திறனின் சிறந்த எடுத்துக்காட்டான இக்குழுவினர், சென்ற வாரம் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் தங்கள் சிறப்பினை எடுத்துக் காட்டி எல்லோரது பாராட்டுக்களையும் பெற்றது இங்கு குறிப்பிடத்தக்கது.

## விவசாய மந்திரி நிதி மந்திரியாக இருப்பது சட்ட விரோதம்?

### சி. பி. டி. சில்வா திட்டத்துக்கு 19 பேர் ஆதரவு

விவசாய, நிதி மந்திரி திரு. சி. பி. டி சில்வாவுக்குப் புதிய தலையிடி யொன்று ஏற்பட்டுள்ளது. அதுதான் அரசியற் சட்டப்படி அவர் நிதி மந்திரியாக பதவி வகிக்க முடியா தென்பது. அவர் நிதி மட்டுமன்றி விவசாய மந்திரியுமாவர். அரசியற் சட்டத்தின்படி நிதி மந்திரி வேறு எந்த மந்திரி பதவியும் வகிக்க முடியாது. எனவே திரு சி. பி. டி சில்வா நிதி மந்திரி என்ற முறையில் விவசாய மந்திரியாகக் கடமையாற்ற முடியாது. நிதி மந்திரி பதவியுடன் சேர்த்து அவர் மற்றொரு மந்திரி பதவியையும் வகிப்பது சட்டத்துக்கு முரணுகும்.

உதவி மந்திரிப் பதவியையும் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா ராஜிநாமாச் செய்து விட்டார். ஆயினும் அவரது ராஜிநாமா அரசியல் வட்டாரங்களில் பெரும் பரபரப்பு எதையும் ஏற்படுத்தவில்லை.

உதவி மந்திரிப் பதவியை அவர் ராஜிநாமாச் செய்தாலும் கூட, மந்திரிசபை மாற்றியமைக்கும்போது புதிய மந்திரி சபையில் அவருக்கு நிச்சயம் முக்கியமான இடம் கிடைக்குமென்று அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

இனி அவர் பாராளுமன்றத்தில் பின் வரிசையில் அமர்ந்திருப்பார். இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அரசாங்கப் பாராளுமன்றக் குழுவினுள் தனது கோஷ்டியைப் பலப்படுத்த நடவடிக்கை எடுப்பார் என்று நம்பப்படுகிறது. அதே சமயத்தில் தனக்கு எதிராக சதி செய்ததாகக் கூறப்பட்ட சில எம்.பிக்களின், மந்திரிகளின் வண்டவாளங்களையும் அம்பலப்படுத்த பின் வரிசையில் இருக்கும் காலத்தை அவர் நன்கு பயன் படுத்திக் கொள்வார் என்றும் கூறப்படுறது.

புதிய நிதிமந்திரி 37 பொருட்களின் இறக்குமதியைக் கட்டுப்படுத்தியதாக அறிவிக்கப்பட்டதும், பிரதம மந்திரி நிதிமந்திரிக்கு ஒரு கடுமையான கடிதம் அனுப்பியதாக அறியப்படுகிறது. இறக்குமதி கட்டுப்படுத்த முயற்சி செய்ய முன்பு பட்ஜெட் பற்றுக் குறையை நிரப்ப அவரது மாற்றுத் திட்டமென்ன என்பதைச்சமர்ப்பிக்கும்படி பிரதமர் தனது கடிதத்தில் கேட்டிருந்தாராம்.

இந்தக் கடிதம் திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா விடுமுறையைக் கழிப்பதற்காக நூரளைக்குப் புறப்பட சில மணி நேரங்களுக்கு முன்பு அனுப்பப்பட்டதாக அறியப்படுகிறது.

இக்கடிதம் திரு. சி. பி. டி. சில்வாவுக்குப் பெரும் சங்கடத்தையும் கவலையையும் ஏற்படுத்தியதென்றும், நிதி மந்திரி பதவிக்கே கல்தா கொடுத்துவிடலாமென்று கூட எண்ணிருரென்றும் பேச்சு அடிபடுகிறது

(8-ம் பக்கம் பார்க்க)

தொய்வு ASTHMA சங்காரி

ரிச்லெட்ஸ் பெக்டோரல்



* இடைவிடாத இருமல்
* இளைப்பு
* மூச்சுத் திணறல்
* கிர்ர் புர்ர் சத்தம்
* நெஞ்சு வலி
* தொண்டைவலி




இவைகளை ஒழித்துக் கட்டுவதில் இணையற்றது. ஈளை நோயினுல் இன்னலுறுபவர்களுக்கு இது ஓர் வரப்பிரசாதம். சில டோஸ் சாப்பிட்டதுமே நிம்மதியளிக்கக் கூடிய இவ்வற்புத சஞ்சிவி.

எங்கும் கிடைக்கும்

ஏக. விநியோகஸ்தர்கள்:

வெஸ்டன் ஏஜன்சீஸ்,

63, பேங்சால் வீதி, கொழும்பு.

(போன்: 2885)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

# புனிதமான இலக்கை நோக்கிச் செல்வோர் இடையில் தயங்கக் கூடாது

## நினைவு தின விழாவில் அறப்போரணித் தலைவர் அரியநாயகம்

கூட்டாட்சி என்னும் புனித இலக்கை நோக்கி நாம் நடாத்தும் யாத்திரையின் இடையிலே பலசம்பவங்கள் ஏற்படலாம். அதை மறந்து இடையில் தோன்றும் பிரச்சினைகளுக்கு இடமளித்துவிடக் கூடாது. இதுவே அமரர் வன்னியசிங்கத்தின் பொன்னுன வாக்காகும். இதை நாம் மறந்து விடலாகாது என்று அறப்போர் அணித்தலைவர் திரு. ஆர். டபிள்யூ. வி. அரியநாயகம் கன்னியற்திவில் நடைபெற்ற அமரர் வன்னியசிங்கம் விழாவில் அமரரின் உருவப் படத்தைத் திரை நீக்கம் செய்து பேசுகையில் குறிப்பிட்டார்.

அமரர் வன்னியசிங்கம் நினைவு தினத்தை ஒட்டி தொண்டன் இராமையாவின் முழு நாள் உண்ணு விரத நோன்பும் நடைபெற்றது. அழகிய இயற்கைச் சூழல்கள் நிறைந்த பெரியகுளம் என்னும் நீர் நிலைக்கு அருகாமையில் அமைக்கப்பட்டிருந்த அரங்கில் அமரர் வன்னியசிங்கத்தின் திரு. உருவப்படம் வைக்கப்பட்டிருந்தது. இப்படத்தின் முன்னே உமிழ்நீர்கூட உட்கொள்ளாது தொண்டன் இராமையா முழு நாள் உண்ணு நோன்பினை அனுட்டித்திருந்தார். அணிக்கு அறுபதாக நூற்றிருபது தொண்டர்கள் மூவர்ணக் கொடிகளை ஏற்றி மரியாதை செலுத்தி நின்றனர். உதய சூரியனின் பொற்கதிர்கள் பூமியில் படும் நேரத்தில் பக்திப்பரவசத்துடன் அமரரின் உருவப்படம் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது.

திரு. அரியநாயகம் தொடர்ந்து பேசுகையில்,

"நீரில் தென்றல் தவழ்ந்து வர, பறவைகளின் இன்னிசை பாட்டிசைக்க, உதய சூரியனின் பொற் கிரணங்கள் பூமித்தாயை முத்தமிடும் இந்தக்காலைநேரத்தில் நந்தா விளக்காம் நாயகன் வன்னியசிங்கம் அவர்களின் படத்தை திரை நீக்கம் செய்துவைக்கும் பாக்கியம் என்னைப்பரவசமடையச் செய்கிறது.

தமிழனுடைய பண்பாட்டுக்கு எடுத்துக்காட்டான தோற்றத்தைக் கொண்டவர் வன்னியசிங்கம். இந்த உருவ ஒற்றுமை தமிழ் இனத்தின் தவப்புதல்வனுக அமைய அவருக்குக் கருவிலேயே திருவுடைத்தாய் அமைந்தது ஒரு பேராச்சரியமே.

சோல்பரி ஒற்றையாட்சித் திட்டம் ஒழிக்கப்பட்டு சமஷ்டியாட்சி உருவாக வேண்டும் என்பதுதான் அமரர் வன்னியசிங்கத்தின் இதயகீதமாய் அமைந்திருந்தது. அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் இந்த உண்மை என் மனதில் ஊர்ஜிதமானது. யாழ்ப்பாணத்தில் நான் அவரைக் கடைசி முறையாகச் சந்தித்தபோது நீண்ட நேரம் அவருடன் கதைக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அன்று நடந்த நிருவாகக்குழுக் கூட்டத்தில் நான் எழுத்து மூலம் மொழிக் கொள்கை சம்பந்தமாய் விளக்கம் ஒன்றை அவரிடம் கோரியிருந்தேன். கூட்ட முடிவில் தனிமையில் அளவளாவ இது வழி செய்தது, உண்மையில் என் வாழ்நாளில் கிடைத்த பெருங் கொடையாகவே நான் கருதி வருகிறேன். அந்த ஒப்பற்ற தலைவன் ஒற்றையாட்சிக்குப் பதிலாகக் கூட்டாட்சி அமைய வேண்டும் என்பதில் வச்சிரம் பாய்ந்த உறுதியுடன் எனக்குப் பாடஞ் சொல்லித் தந்தார்.

"கூட்டாட்சி என்னும் புனிதமான இலக்கைநோக்கி நாம் நடத்தும் யாத்திரையிலே இடையிடையே பல சம்பவங்கள் ஏற்படுவது சகசந்தான். அவற்றை ஓரளவு சமாளித்து முன்னேற வேண்டியதும் அவசியந்தான். ஆனுல் இறுதி இலக்கை மறந்து இடையில் தோன்றும் பிரச்சினைக்கு முக்கியத்துவம் கொடுத்து அந்த இடத்திலேயே நாம் தாமதித்து நின்றுவிடக் கூடாது. பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதினுல் இறுதி இலக்கை நாம் மறந்துவிடுகிருேம்.

இந்த நோய் நமது கட்சிக்குள் இருப்பதுதான் மனவேதனை அளிக்கிறது. இதைத் தவிர்க்க நாம் நிச்சயம் பாடுபடவேண்டும்" என்று அவர் கூறிய வார்த்தைகள் இன்றும் என் காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

விழா எடுப்பதும், விரதம் நோப்பதும், கோப்பாய்க் கோமானின் கொள்கையையும் சேவையையும் புகழ்வதும் மாத்திரம் நாம் செய்துவிட்டு திருப்தியடைய முடியாது. அவருக்கு நாம் உண்மையாய் இருப்பதானுல் செயலில் நாம் அவரைப் பின்பற்ற வேண்டும். இது ஒன்றை மாத்திரம் அனைவரும் உணர்ந்து கொண்டோமாயின் அதுவே அமரருக்குச் செய்யும் சிறந்த கைம்மாருக அமையும். அமரர் வன்னியசிங்கத்தின் அடிச்சுவட்டைப் பின்பற்றும் ஒவ்வொருவரும் அவர்கொண்ட உறுதியான கொள்கைக்காகப் பாடுபட வேண்டும்.

வன்னியசிங்கத்தை வாயால் புகழ்ந்து கொண்டு தமிழரசுக் கட்சியைத் தூற்றித் திரிய இன்று தொடங்கியிருக்கும் பலர் நம்மிடையே இருக்கிருர்கள். இவர்களெல்லாம் உண்மையை உணர்ந்து திருந்த வன்னியசிங்கம் நினைவு நாள் உதவுவதாக.

### நல்லூரில் அமரர் வனனியசிங்கம் நினைவு தினம்

வாழ்வில் தனக்கென வாழா பிறர்க்குரியாளனுக வாழ்ந்த ஒரு மாபெரும் தியாகியான அமரர் வன்னியசிங்கத்தின் அமரதினத்தை நல்லூர் மக்களாகிய நாம ஆதமசாந்தி தினமாக கொண்டாடுவதையொட்டி பெருமையும் அனுதாபமும் அடைகின்றோம். இவ்வாறு நல்லூரில் அமரர் வன்னியசிங்கத்தின் படிப்பகத்தில் சட்டக் கல்லூரி மாணவன் திரு.மு.ஆலாலசுந்தரம் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் மனித வாழ்க்கையில் தமக்கெனவாழும் தலைவர்களையும் அரசியல்வாதிகளையும் தான் நாம் கண்டுள்ளோம். ஆனுல் அமரர் வன்னியசிங்கத்தை எண்ணும்பொழுது எம் உள்ளத்தில் ஒருவித தியாக உணர்ச்சி உண்டாகின்றது. அவர் தமிழ் பேசும் மக்களுடன் தந்தைக்குத்தந்தையாகவும் தாய்க்குத் தாயாகவும் சேய்க்குச்சேயாகவும் தோழனுக்குத் தோழனுகவும் வாழ்ந்து மக்களுக்காகத்தன் உயிரையே தியாகம் செய்தார் என்றுல் அது உண்மை. அவரின் நினைவை, கண்ட கனவை நாம்—குறிப்பாக நல்லூர், கோப்பாய் மக்கள்—செயல்படுத்த வேண்டும் என்பதே எனது பேரவா. அவருக்காக நாம் முதல் முதலில் மணிமண்டபம் அமைக்க வேண்டும். இதுவே எங்கள் தணியாத அவாவும் கூட.

திரு. மு. பழனியப்பா பேசுகையில் எம் உள்ளத்திடையே தியாக உணர்வைத்தட்டி எழுப்பிய ஒரு தியாகி அமரர் வன்னியசிங்கம் என்றுல் பொய்யாகாது என்று குறிப்பிட்டார்.

அடுத்து திரு. செ. சண்முகலிங்கம் பேசுகையில் அவரின் நினைவு தினம் என்றதும் எம் இதயத்திலிருந்து ஒருவித பச்சாத்தாபம் உண்டா [illegible] [illegible] தமிழரசுக் கட்சியின் [illegible] பகராக இருந்தாலும், கட்சிப் பேதமற்று தமிழ் பேசும் மக்கள் எல்லோரும் போற்றும் நிலைக்த அவரின் பண்பு, தியாக உணர்ச்சி அவரை உயர்த்தி விட்டது என்று கூறினுர்.

நல்லூர் அமரர் வன்னியசிங்கம் படிப்பகத்தில், தலைவர் திரு. மு. பரமேஸ்வரன், பி. ஏ. ஆசிரியர் தலைமையில் மேற்படி நினைவு தின விழா நடைபெற்றது. கூட்ட தொடக்கத்தில் இரண்டு நிமிட நேர மௌனம் அனுட்டிக்கப்பட்டது. இறுதியில் செயலாளர் திரு. க. சண்முகநாதன் அவர்களால் நன்றியுரை கூறப்பட்டது.

### அமரர் வன்னியரின் நினைவு

#### சாம்பல் தீவு கிராமச் சபையின் அஞ்சலி

காலம் சென்ற தமிழரசுக் கட்சித் தலைவரும் கர்மவீரருமான உயர் திரு. கு.வன்னியசிங்கம் அவர்கள் அகால மரணம் எய்தியது தமிழ் பேசும் பெரும்குடி மக்களுக்கு பெரும் நஷ்டமாகும். திரு. வன்னியசிங்கம் அவர்கள் தமிழ் மொழிக்காகவும் தமிழ் பேசும் மக்களுக்காகவும்சொல்லளவில்நில்லாமல் செயலளவில் தீண்டாமை ஒழிக்க பெரும் முயற்சி செய்து வெற்றியும் கண்டார். அன்னுருக்கு நாம் அஞ்சலி செய்வது நமது கடமையென சாம்பல்தீவு கிராமச் சபை உபதலைவர் க. சி. சுப்பிரமணியம் அவர்கள் ஒரு பிரேரணையைக் கொண்டுவந்தார். அது ஏகமனதாக நிறைவேறியது. சாம்பல்தீவு கிராமசபைக் காரியாலயத்தில் கறுத்தக்கொடி ஏற்றி வைக்கப்பட்டது. சபை, 5 நிமிடம் ஒத்திவைக்கப்பட்டு மறுபடியும் தொடங்கப்பட்டது. தொடர்ந்து 1-ம் வட்டார அங்கத்தவர் இ. பேரம்பலம் திரு. வன்னியசிங்கத்தின் சேவையைப் பாராட்டியதுடன் திருமதி வன்னியசிங்கம் அவர்களுக்கு ஓர் அனுதாப செய்தியை அனுப்ப வேண்டுமெனவும் கூறினுர். மேற்படி கிராம சபை கூட்டத்துக்கு சாம்பல் தீவுக் கிராமசபைத் தலைவர் வ. நா. தம்பிராசா தலைமை வகித்தார்.

## அமரரின் நினைவு விழா

### போட்டிகளில் வெற்றி பெற்ருேர் விபரம்

அமரர் கு. வன்னியசிங்கம், அமரகவி பாரதியார் இவர்களின் நினைவு விழாவையொட்டி பேச்சுப் போட்டி, பாட்டுப் போட்டி என்பன 16-9-62-ல் மட்டுவில் வடக்கு ஸ்ரீ வேற்பிள்ளை வளர்ந்தோர் கல்வி நிலைய ஆதரவில் நடைபெற்றன. அதன் பெறு பேறுகள் பின் வருமாறு:—

#### பேச்சுப் போட்டி

மேற்பிரிவு: செல்வி க. சிவகாமசுந்தரி—1-ம் இடம். செல்வன் க. கந்தசாமி—2-ம் இடம். செல்வன் சி. வேலுப்பிள்ளை—3-ம் இடம்.

மத்திய பிரிவு:—செல்வன் த. நித்தியானந்தன் 1-ம் இடம், செல்வன் சி. கனகரத்தினம் 2-ம் இடம், செல்வன் க. தருமலிங்கம் 3-ம் இடம்.

கீழ்ப்பிரிவு:— செல்வி க. சிவயோகராணி 1-ம் இடம், செல்வன் த. இரவீந்தரன், 2-ம் இடம், செல்வி. செ. இராசேஸ்வரி 3-ம் இடம்.

#### பாட்டுப் போட்டி

மேற்பிரிவு:— தேசபக்திப் பாடல்: செல்வன் சின்னையா இராசலிங்கம் 1-ம் இடம், தெய்வீகப் பாடல்: ஆறுமுகம் பரமேஸ்வரன் 1-ம் இடம்.

மத்திய பிரிவு: தேச பக்திப் பாடல்: செல்வி த. இராசேஸ்வரி 1-ம் இடம். தெய்வீகப் பாடல்: செல்வன் சி. வேலையா 1-ம் இடம்.

கீழ்ப்பிரிவு:- தேச பக்திப் பாடல்: செல்வி. சி. சந்திரலேகா 1-ம் பரிசு தெய்வீகப் பாடல்:— செல்வன் த. இரவீந்திரன் 1-ம் பரிசு.


கீழ்ப்பிரிவு:— தேசபக்திப் பாடல்: செல்வி க. சிவயோகராணி—2-ம் பரிசு. தெய்வீகப் பாடல்: செல்வி. இ. அற்புத ராணி 2-ம் பரிசு. தேசிகப் பாடல்: செல்வி சி. தேவி 3-ம் பரிசு. தெய்வீகப் பாடல்: ப. பஞ்சரத்தினம் 3-ம் பரிசு.

சிறப்புப் பரிசுகள் பெறுவோரர்:

1. செல்வி பொ. விஜயராணி, 2. செல்வன் வெ. கந்தசாமி, 3. செல்வன் பொ. சுந்தரலிங்கம்.

### ஈழத் திராவிடர் முன்னணி

கடந்த 15-9-62-ம் திகதியன்று ஈழத் திராவிட முன்னணியின் சார்பில் அறிஞர் அண்ணுவின் 54-ம் பிறந்த தின விழா மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. அன்றைய தினம், மாலையில் பொதுச்செயலாளர் எம். ஏ. மணிமாறன், தோழர் வி. எஸ். முருகன் அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட தேநீர் விருந்து நடைபெற்றது. தேநீர் விழாவிற்கு தோழர் எம். உமர் அவர்கள் தலைமை தாங்கினுர்கள். அநேகரின் சொற்பொழிவுகட்குப் பின்னர், இறுதியாக எம். ஏ. மணிமாறனின் நன்றியுரையுடன் கூட்டம் இனிது முடிந்தது.


ராஜபீடி ஸ்பெஷல்

இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும்
எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்

ராஜ பீடி ஸ்பெஷல்
ஒன்றேதான்

புகைத்து பலனடையுங்கள்

ராஜாபீடி கம்பனி

கொழும்பு-14.

டெலிபோன்: 2739


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கே. எஸ். சுந்தரம், மூதூர்.

கே: அரிய கருத்துக்கள் அடங்கிய ஒரு புத்தகத்தை நான் வாசித்துக் கொண்டிருக்கும் போது என் உள்ளத்தைத் தொடும் பாடல் ஒன்று வானெலியில் ஒலி பரப்பப்பட்டது. இதைப் படிப்பதா? அதைக் கேட்பதா?

ப: முதலில் பாடலைக் கேளுங்கள். பிறகு புத்தகத்தை வாசியுங்கள். புத்தகம் உங்கள் கையில்தான் இருக்கிறது. அதனை எந்தச் சமயத்திலும் வாசிக்கலாம். ஆனால் வானெலிப் பாட்டைக் கேட்கத் தவறிவிட்டீர்களானல், அதனை மீண்டும் உங்களுக்காக ஒலி பரப்ப மாட்டார்களே!

ஃ

இ. காளிதாசன்,
கொட்டாஞ்சேனை.

கே: மட்டக்களப்பு முதல் பிரதிநிதி தனிக் கட்சி அமைக்கிருர் என்று ஒரு பத்திரிகை கூறுகிறதே. உண்மையா?

ப: இல்லை! நீங்கள் குறிப்பிடும் பத்திரிகை தற்கொலை செய்து கொள்கிறது. தூக்குப் போட்டுக்கொள்ள அது திரிக்கும் கயிறே அதற்குப் பயன்படுகிறது.

ஃ

த. வில்வரத்தினம், மன்னர்.

கே: சிவப்புச் சேலை வேலியில் தொங்கினலும் சரி, மரத்தில் தொங்கினலும் சரி, அதை உற்றுப் பார்க்கும்படி மனம் தூண்டுகிறதே! என்ன செய்யலாம்?

ப: சிவப்பு நிறத்துக்கு ஆசைப்பட்டு சிவப்பு சேலை உடுத்தியிருக்கும் பெண்ணை உற்றுப் பார்த்து விடாதீர்கள். உமது கன்னம் சிவப்பேறிவிடும்.

ஃ

க. கந்தசாமி, யாழ்ப்பாணம்.

மலை நாட்டில் தமிழரசுக் கட்சி ஸ்தாபிப்பதையிட்டு முன்னை நாள் பொதுச் செயலாளர் வி. நவரத்தினத்துக்கும் கட்சிக்கும் பிளவு உண்டு என்று தினசரிப் பத்திரிகைகள் கூறுகின்றன. இது உண்மையா?

ப: இல்லை! அப்படிக் கூறியாவது பத்திரிகைகள் திருப்தியடையட்டுமே!

ஃ

இதயசூரியன், இறக்குவான.

கே: தமிழரசுக் கட்சி தோட்டத் தமிழரோடு ஒத்துழைப்பதைப் பற்றி தமிழக ஆங்கில ஏடான ஹிந்து வெளியிட்ட கருத்தை இலங்கைத் தினசரியொன்றும் வெளியிட்டிருக்கிறது. பார்த்தீர்களா?

ப: பார்த்தேன்—"ஹிந்து"வின் கருத்து பெரும்பாலும் அப்பத்திரிகையின் இலங்கை நிருபரின் கருத்தே! அத்தலையங்கம் பிரசுரிக்கப்பட்டிருந்த அதே பக்கத்தில் வெளியாகியிருந்த மலை நாட்டில் தமிழரசாரின் பிரவேசம் பற்றி அந்த நிருபர் அனுப்பிய செய்தியையும் நீங்கள் வாசித்தால் உண்மை புலனகும்.

ஃ

கே: விரையா, ஸ்பிரிங்வெலி.

கே: தமிழர்களெல்லாம் ஒன்று கூடி அரசாங்கத்துடன் வாளேந்திப் போர் புரிந்தால் வெற்றி யாருக்கு?

ப: அரசாங்கத்துக்கு.

ஃ

வி. ஜி. ஆனந்தன்,
பம்பலப்பிட்டி.

கே: ஏழு மாடிக் கட்டடத்திலிருந்து வெளிவரும் பத்திரிகையொன்று 20-9-61 மாலைப் பதிப்பில் தமிழரசுக் கட்சிக்குக் கொடுக்காத மதிப்பை அந்த ஒரு பாதுகாப்பு முன்னணிக்குக் கொடுத்திருக்கிறதே, ஏன்?

ப: அது வெறும் பத்திரிகை முன்னணியாக இருப்பதுதான் காரணம்.

ஃ

செ. டொமினிக், கொழும்பு-13.

கே: உலகப் புகழ் பெற்ற இந்தியப் பிரதமரின் இலங்கை வருகையைத் திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா தடை செய்திருக்கிருரே, காரண மென்ன?

ப: அண்டப் புளுகு, ஆகாசப் புளுகு எல்லாம் உங்களிடமே அடங்கிவிட்டது போலும். சரடு திரிப்பதில் நமது அந்த உள்ளூர் தினசரி கூட இனி உங்களிடம் பிச்சை வாங்க வேண்டியதுதான்.

ஃ

மீனலோசனி, மாதகல்.

கே: குயுக்தியாரே நான் உங்களைக் காண விரும்புகிறேன். அதற்கு என்ன செய்யலாம்?

ப: இதோ என்னைப் பார்த்துக் கொண்டுதானே இருக்கிறீர்கள்.

ஃ

எம். அகமது சரீபு, கிண்ணியா.

கே: நான் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன், எனது தம்பியும் அப்பெண்ணைக் காதலிக்கிருர். எங்களிருவரிலும் யார் அப் பெண்ணை மண முடிப்பது?

ப: உங்களிருவரில் யார் அப்பெண்ணை மணமுடிப்பதென்ற பிரச்சினையே கிடையாது. உங்களில் யாரை அந்தப் பெண் காதலிக்கிருள் என்பதுதான் கேள்வி.

ஃ

என். எம். ஹமீது,
கொழும்பு-12.

கே: தி. மு. க. தலைவர் அண்ணுவின் பிறந்த நாளை இந்தியத் தமிழர் எவ்வளவோ விமரிசையாகக் கொண்டாடினர்கள், அதுபோல் ஈழத்துத் தமிழ் தந்தை செல்வாவின் பிறந்த தின விழாவை நாமும் கொண்டாடினல் என்ன?

ப: அதற்கு அவர் அனுமதிக்க வேண்டுமே!

ஃ

சந்திரசேகரன், பூண்டுலோயா.

கே: மலை நாட்டுத் தமிழருக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் செய்திருக்கும் நன்மைகள் யாவை?

ப: (1) இழந்த உரிமைகளைப் பற்றி சதா பேசிக் கொண்டிருப்பது. (2) மலையகத்தில் இதர தொழிற் சங்கங்கள் பலப்பட வழி வகுத்துக் கொடுத்தது.

ஃ

தி. அரசன், ஏழாலை.

கே: குயுக்தியாரே, கன்னடத்துப் பைங்கிளி பி. சரோஜாதேவியிடம் நமது பிரதமர், பணம் கடன் கேட்டதாகக் கனவு கண்டேன். காரணமென்ன?

ப: நாடற்றவர்களை இந்தியாவுக்கு அனுப்ப நேருவிடம் ரூ. 40 கோடி கடன் கேட்டுப் பார்த்தார்... கிடைக்கவில்லை. இப் பொழுது தேவியிடம் கேட்கிருரோ?

ஆர். எஸ். கருப்பையா, பதுளை.

கே: கண்டியில் மலைநாட்டுக் கலை விழா நடந்ததாகப் பத்திரிகையில் படித்தேன். இதில் தோட்டத் தமிழர்களும் கலந்து கொண்டார்களா?

ப: அது ஒரு சிங்களக் கலை விழா. அதற்கும் தோட்டத் தமிழர்களுக்கும் சம்பந்தம் கிடையாது. அந்த விழாவின் பின்னணியில் கொம்யூனிஸ்ட் கோர உருவமும் தெரிந்தது.

திருவாளர்
**குயுக்தியார்**
மே/பா சுதந்திரன்
தபால் பெட்டி இல. 1183
கொழும்பு-12.

ஃ

"தமிழன்பன்" மண்டூர்.

கே: நேரு பிறந்த நாளைக் குழந்தைகள் தினமாகவும், ராதாகிருஷ்ணன் பிறந்த நாளை ஆசிரியர் தினமாகவும் கொண்டாடுகிருர்களே! நம் ஈழ நாட்டுப் பிரதமர் பிறந்த நாளை, என்ன தினமாகக் கொண்டாடலாம்?

ப: வகுப்புவாதிகள் தினமாக.

ஃ

மயில்வாகனம்,
செம்பியன்பற்று.

கே: தமிழ் பேசுமினம் ஒன்று சேர்வதைத் தடுக்கும் முயற்சியிலீடுபட்ட இருவரைப் பற்றித் தங்கள் அபிப்பிராய மென்ன?

ப: பிரதமரையும், வர்த்தக மந்திரியையும் குறிப்பிடுகிறீரா?

ஃ

த. சூசைப்பிள்ளை,
திருகோணமலை.

கே: 21-9-62 வீரகேசரி பத்திரிகையில், வாசித்தேன். மட்டக்களப்பு முதல் எம். பி. புதிய அரசியல் கட்சி துவக்குகிருர் என்பதாக. இதன் மர்மம் என்னவோ?

ப: அது அப் பத்திரிகையின் ஆசை.

ஃ

வி. ராதாகிருஷ்ணன்,
நொச்சுமுனை.

கே: உலகிலே தன் கடமையைக் கண்ணியமாகவும், லஞ்சம் வாங்காமலும், செய்பவன் யார் என்பதைச் சிறிது கூறுங்கள், பார்க்கலாம்.

ப: ஆண்டவன்.

ஃ

அ. வெள்ளசாமி,
பலாங்கொடை.

கே: மலை நாட்டுத் தமிழர், என்னும் சொல் இன்னும் தமிழர்களின் நாவிலிருந்து உதயமாகின்றதே, ஏன் ஈழத் தமிழர் என்று பாகுபாடில்லாமல் கூறினல் என்ன?

ப: ஆம், அனைவரும் ஈழத் தமிழர்களே! வெவ்வேறு பிராந்தியங்களில் வசிக்கும் மக்களை அந்த அந்தப் பிராந்தியத்தின் பெயரால் அழைப்பது தற்போதைய நிலைக்கு அவசியமாகிறது.

ஃ

என். பி. சிவலிங்கம்,
தெம்மோதர.

கே: பட்டி விக்கிரமாதித்தன் படத்தில் ஒரு பெட்டிக்குள், ராஜகுமாரி இருக்கிருள். அந்தப் பெட்டி மந்திர சக்தியினல் பறக்கிறதா? தெய்விக சக்தியினல் பறக்கிறதா?

ப: இரண்டாலுமல்ல—டைரக்டரின் சக்தியால் பறக்கிறது.

ஃ

டீ. எச். எம் [illegible]ன்,
கல்கந்தை-பொகவந்தலாவை.

கே: திரு. கே. எம். பி. ராஜரத்னவின் கொள்கையையும், கட்சிப் போக்கையும், முஸ்லிம் மக்கள் உட்பட பெரும்பாலானேர் விரும்பாதிருக்கக் காரண மென்ன? அவர் தன்னுடைய சிங்கள நாட்டிற்கு நன்மையைத் தானே தேடித் தருகிருர்!

ப: நன்மையைத் தேடித் தருகிருர் என்கின்றனர், சிங்கள வகுப்புவாதிகள்—தீமையைத் தேடித்தருகிருர் என்கின்றனர் ஏனைய சிங்கள மக்கள்.

ஃ

க. சரவணபவான்,
கொழும்பு-(5)

கே: அரசாங்கத்தையே ஆதரித்துப் பழகிப் போன ஆங்கில தினசரி ஒன்று, பாடசாலைப் பிரச்சினை காலத்தில் அரசை சற்று எதிர்த்து, இப்பொழுது மறுபடியும் அரசாங்கத்திற்கு வக்காலத்து எடுக்கும் முயற்சியில் தமிழரசுக் கட்சியைத் திட்டுகிறதே!

ப: தமிழரசுக் கட்சியை எதிர்ப்பதில் இந்தப் பத்திரிகைகளுக்கும் அரசாங்கத்துக்கு மிடையே கருத்து வேற்றுமை கிடையாது.

ஃ

பெ. இரா. நாதன், அப்புத்தளை.

கே: என் வகுப்பாசிரியர் சோவியத் ரஷ்யாவில் ராக் அன் ரோல் நடனமே நடப்பதில்லை என்றும் அங்கு இப்போது மக்கள் நல்ல நடத்தை உள்ளவர்களாகவே இருக்கிருர்கள் என்றும் கூறுகிருர், இது உண்மையா?

ப: ஆம், உண்மைதான்.

ஃ

கே எம். மாணிக்கம்,
கந்தப்பாளை.

கே: தவறு செய்தவர்கள் தாங்கள் தவறியதாக நினைப்பது எப்போது?

ப: தவறு செய்யாத போது.

## மொழி காப்போம்

''ஈழத்து நாதன்''

மொழியெங்கள் வாழ்வுக்குப் பாதை—அதை
ஒழியென்று நீசொல்ல நாம்கேட்டால் நாளை
விழியற்ற குருடர்க ளாவோம்—தம்பி
விழிக்காதே நீமுந்து நம்மொழி காப்போம்.

சந்தமே உருப்பெற்று வந்த—எங்கள்
தந்தையர் சீதன மாகவே தந்த
செந்தமி ழுரிமையைக் கேளு இன்றேல்
வந்தவ ரோடுபோர் நீசெய்து மாழு.

உயிரெங்கள் தமிழுக்குத் தூசு—அதன்
துயர்போக்க உயிர் பேணும் என்றுநீ பேசு
புயலாக இன்னல்கள் சூழும்—பிறர்
தயவின்றி அவைவெல்ல வேண்டுமே நாளும்.

சிறந்தது! சிக்கனமானது! சிந்தனையூட்டுவது!




யானை பீடி ஸ்பெஷல்
காரம், மணம், குணம் நிறைந்தது.
புகைப்போருக்கு புத்துணர்ச்சியை ஊட்டும்.
யானை பீடி கம்பனி,
62, [illegible] வீதி, கொழும்பு. தொலைபேசி 7651

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தித்து வந்தவை

காலைகண்டன்

## "கூ"க்காட்டும் வரை ஓய்வு

கூக்காட்டி முடியும் வரை குழப்பாதீர்கள் என்று கூறினாராம் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம். அவர் நடத்தும் தமிழ் ஊதுகுழலுக்கு சதா பணம் இறைத்து வர வேண்டியுள்ளதாம். அரசாங்கத்தைக் கவிழ்க்க நடைபெறும் இராணுவப்புரட்சியை ஆங்கிலத்தில் "கூ" என்றழைப்பர். தான் வாதாடும் "கூ"வழக்குகள் முடியும்வரை அரசியல் விவகாரங்களில் தலையிட முடியாதென அரசியலில் ஓய்வு கேட்டுள்ளாராம் திரு. பொன்னம்பலம். அதுவரை எதுவகையிலும் தொந்தரவு செய்ய வேண்டாமென தனது பத்திரிகை ஆசிரியரைக் கேட்டுக் கொண்டுள்ளாராம். ரூ. 2500-00 ஐக் கொடுத்து 4 மாதங்களுக்கும் "இதைவைத்து ஏதாவது செய்யுங்கள். விழுங்கிவிட வேண்டாம்" என்று கண்டிப்புடன் கூறினாராம்.

யாழ்ப்பாணத் தேர்தல் வழக்கிலும் எதுவிதமான அக்கறையும் காட்டவில்லையாம். இதற்கு இரண்டுகாரணங்கள் இருக்கின்றன என்று அம்மானுக்குத் தெரிய வருகிறது.

தேர்தல் வழக்கில் அல்பிரட் துரையப்பா தோற்கடிக்கப்பட்டால் மறுதேர்தல் நடைபெறுமல்லவா? அத்தேர்தலின் போது தமிழரசுக்கட்சியார் அபேட்சகரை நிறுத்தாது விடக்கூடுமானால் அல்பிரட்டை விழுத்துவது என்று தமிழரசாரது கருத்தை சில நண்பர்கள் மூலம் அறிய அவாவுற்ருர். திரு. செல்வநாயகம் தமது கருத்தைத் தெரிவிக்கும் போது, இது விடயமாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழரசுப் பிரமுகர்களுக்கும், கட்சியின் தீர்மானத்துக்கும் கட்டுப்பட்டு நடப்பதேயல்லாமல் தனிப்பட்டவகையில், தமது கருத்தையோ அபிப்பிராயத்தையோ தெரிவிக்க மறுத்துவிட்டாராம்.

## உறவு பெரிதல்லவா?

அடுத்தபடி திருமதி துரையப்பா திரு. பொன்னம்பலத்தின் உறவினர். திரு. துரையப்பாவின் திருமணத்தில் திரு. பொன்னம்பலம் வெறுப்புற்றிருந்தவர். தற்போது பகை நீங்கி ஓரளவு சௌஜன்ய நிலை உருவாகியிருப்பதனுல், வழக்கில் திரு. அல்பிரட்டைத் தோற்கடிக்க முயற்சிக்கவில்லையாம். எக்காரணம் உண்மையோ தெரியவில்லை.

## விசேட போதனை பெற......

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை ஒரு சபையினுல் நிர்வாகிக்கப்படுகிறது. எந்த ஒரு சபையின் நிர்வாகத்துககுள்ளும் அடங்கும் உத்தியோகஸ்தர்கள் சிங்களம் படிக்க வேண்டும் என்ற நிபந்தனைக்கு அப்பாற்பட்டவர்கள்.

சீமெந்துத் தொழிற்சாலையின் உயர்தர உத்தியோகத்தர்களிற் சிலர் சிங்களம் படிக்க ஆசைப்படுகிறார்களாம். இவர்களுக்கு உயர்ந்தரகச் சிங்களம் தான் தேவைப்படுகிறதாம். விசேடமான வகையில் படிக்க முயலும் இவர்களுக்கு கொழும்பிலிருந்து அடிக்கடி சென்று சிங்கள போதனை நடத்த ஒருவரைத் தேடிப் பிடித்துள்ளனராம். பெருவாரியான பணம் அவருக்கு வேதனமாக வழங்கப்படுமாம். பிரயாணச் செலவும் கொடுக்கப்படுமாம்.

## தம்பதிகள் திண்டாட்டம்?

அன்று சனிக்கிழமை — பாடசாலைகள் விடுமுறை நாள். காலைக்கடன்களை முடித்துக்கொண்டு புறப்பட ஆயத்தமான "அவர்" முன் அவர் மனைவி சகல அலங்காரங்களையும் முடித்துக் கொண்டு போய் நின்றார். கோயிலில் விசேடபூசை காணச் செல்லுவதாகக் கூறிக்கொண்டு மனைவி கிளம்பியதைப் பார்த்து திருப்தி அடைந்தார் அவர். தாம் போக நினைத்த பாதையிலே அமைதியாகச் சென்றார்.

அவர் சென்ற இடமும் ஒரு பள்ளிக்கூடம், அவரைப் போன்ற சிலரும் அங்கே வந்திருந்தனர். சில நண்பர்களுடன் பேசிக்கொண்டிருக்கையில் மணி ஒன்று அடித்தது. எல்லோருடனும் தானும் அந்த மண்டபத்துள்சென்று ஒரு இருப்பிடத்தில் அமர்ந்துகொண்டார். தன்னைச் சுற்றி வளைத்து ஒரு முறை நோட்டம் செலுத்திய வர் தேள் கொட்டியவர் போல் துள்ளிக் குதித்தார். அவருடைய மனைவி—கோயிலுக்குச் செல்வதாகக் கூறிவிட்டுச் சென்றவள் அங்கே ஏன் வந்தாள், எப்படி வந்தாள்?

அவர் அவளைப் பார்த்த போதே அவளும் அவரைப் பார்த்தாள். வெந்தணலை மிதித்து விட்டது போல் வெதும்பினாள், விம்மினாள், செய்வதறியாது திகைத்தாள். முகத்தில் அரும்பிய வேர்வைத்துளிகளை முந்தானையால் துடைத்துக் கொண்டாள்.

எதற்காக ஒருவரை ஒருவர் தெரியாமல் அந்த அறைக்குள் சென்றார்களோ அந்தக்காரணம் அவர்களுக்கு வகைமோசம் செய்வதென்னவோ உறுதியெனினும், அரசாங்கத்தின் மதிப்புப்பெறும் "நல்ல பிரசை"களில் இருவரும் இடம் பெறுவர் என்பது மட்டும் உண்மை.

அவரும் ஆசிரியர். அவளும் ஆசிரியை. இருவரும் ஒருவரை ஒருவர் அறியாது சிங்களம் பயின்று வந்தனர். "சிங்களம் படிப்பது தீது, இனத்தைக் காட்டிக்கொடுக்கலாமா? தமிழரசுக் கட்சியால் அனுபவித்த துன்பமும் அல்லலும் போதும். ஆனல் அவர்களுக்காக வல்ல—சிங்களம் படிப்பது என்னவோ கூடாது" என்று இருவரும் அடிக்கடி போதனை மட்டும் செய்து வந்தனர். இரகசியமாகப் படித்துவந்தது மட்டும் தங்களுக்குள்ளேயே ஒருவருக் கொருவர் தெரிந்து கொள்ளவில்லை. தத்தம்மிடம் இரகசியமாகவே வைக்கப்பட்டிருந்தது.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சிங்களப் பரீட்சைக்குத் தோற்றுதற்காகவே ஒருவரை ஒருவர் தெரியாது, பரீட்சை மண்டபத்துக்கு வந்து, அருகருகே இருவரும் அமர்ந்திருக்கக் கண்டு அவதியுற்றனராம்.

## பொலிசாரின் உதவி?

யாழ்ப்பாணத்தில் வைத்து டாக்டர் நாகநாதனை தாக்கிய இரு பொலிஸ் உதவி இன்ஸ்பெக்டர்களின் மீது வழக்கு நடைபெறுகிறதல்லவா? இந்த வழக்கில் எதிரிகளாகக் கருதப்படுபவர்களான திரு. பெலப்பிட்டியா, திரு. பெரேரா ஆகியோர்களுக்கு வழக்குச் செலவுக்காக உதவி செய்யும் பொருட்டு சிலர் பொலிஸ் அதிகாரிகளிடம் நிதி வசூலிப்பதாக வதந்தி அடிபடுகிறது.

பொலிஸ் இலாகாவினுள், பொலிஸ் உயர்தர அதிகாரிகளுக்குத் தெரியாமல் எந்த ஒரு சம்பவத்துக்கும் பணம் சேகரிக்கக் கூடாது என ஒரு விதி உண்டு. இம்மாதம் 20-ம் திகதி பொலிஸ் உத்தியோகத்தர்கள் சம்பளம் பெறச் சென்ற போது அவர்களிடம் இந்த நிதி உதவி நன்கொடை "லிஸ்ட்" நீட்டப்பட்டதாம்.

## மாணவனைப் பழி வாங்குவது நல்லதல்ல

திருகோணமலையைச் சேர்ந்த வெள்ளை மணல் கிராமத்தில் இருக்கும் அரசினர் முஸ்லிம் தமிழ் கலவன் பாடசாலை, ஜனுப் பதியுதீன் மகுமூத் கல்வி மந்திரியாகிய பின்னர், அரசினர் சிங்கள முஸ்லிம் பாடசாலையாக மாறியுள்ளது. இப்பாடசாலையில் 7ம் வகுப்பில் படிக்கும் மானவன் எச். வசூர்தீன் பலதுறைகளிலும் சிறப்பான இடம் பெற்று விளங்கிவருபவன். 14 வயதுள்ள இம்மாணவன் சிங்களமும் கற்றுவருபவன். பாடசாலை வரவு ஒழுங்கிலும், பாடங்களிலும், விளையாட்டுப் போட்டிகள் ஏனைய பல போட்டிகள் ஆதியனவற்றில் முதலிடம் பெற்றும், பலசான்றிதழ்கள் பெற்றும் உள்ளவன்.

பாடசாலைக்கு வெளியே பாடசாலையுடன் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு, பாடசாலையின் பெயருக்கு மதிப்புத் தேடிக் கொடுப்பவன்.

உடல் நிலை சாதகமாகவில்லாதனுல், அண்மையில் நடைபெற்ற வட்டார விளையாட்டுப் போட்டிகளில் பங்குகொள்ள முடியாது போயிற்று. இம்மாணவன் பங்குபற்ற முடியாது போனமையினுலோ என்னமோ, பாடசாலைக்கு விளையாட்டுப் போட்டிகளில் போதியவெற்றிகள் கிடைக்கவில்லை. இதனுல் இம் மாணவனைப் பழி தீர்த்துக்கொள்ள பாடசாலை நிர்வாகிகள் முயற்சிகள் எடுத்து வருகின்றனர் என்று அம்மானுக்குத் தகவல் கிடைத்துள்ளது.

விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்ருததனுல் வகுப்புகளில் நுழையக் கூடாது என்று தலைமைஆசிரியர் உத்தரவிட்டுள்ளாராம். வித்தியாதிபதியின் பதில் கிடைக்கும்வரை பாடசாலைக்கு வரவேண்டாமெனவும் கூறப்பட்டதாம்.

இது சம்பந்தமாக, மாணவனின் பெற்ருர் கல்வி அதிகாரிகளுக்கும் பலகடிதங்கள் அனுப்பியும் இதுவரை பதில் எதுவும் கிடைக்கவில்லையாம். ஒரு ஏழை மாணவனை, திறமைகள் உள்ளவனை இத்தகைய நீய வழியில் தண்டிப்பது முறையாகாது. அம்மாணவனின் கல்விக்குக் குந்தகம் ஏற்படுத்தக்கூடாது என்று கோருகிறேம்.

## வேம்படியில் மீண்டும்......

யாழ்ப்பாணம் வேம்படியில் மீண்டும் சிங்கள வகுப்புகள் ஆரம்பித்துள்ளனர் என்ற தகவல் அம்மானுக்குக்கிடைத்துள்ளது. மத்திய கல்லூரி ஆசிரியர்களும்அங்கு சென்று சிங்களம் படிக்க எத்தனித்துள்ளனர். 'அம்மானுக்கு சிங்களம் படிப்போரைப்பற்றித் தகவல் கொடுப்பது வேம்படியைச் சேர்ந்த ஆசிரியர்களேதான்' என்று பலத்த வதந்திகளும் அடிபடுவதாகத் தெரிகிறது.

## வனிதையரின் சிங்கள மோகம்

மட்டக்களப்பைச்சேர்ந்த ஆரையம்பதியிலிருந்து இளமங்கையர் சிலர் சிங்களப் புத்தகங்களைப்பலரும்பார்க்கக் கூடிய வகையில் காட்டிக் கொண்டு பஸ்களில் ஏறி காத்தான்குடி சென்று அங்குள்ள ஒரு சிங்களவரிடம் பயிற்சி எடுப்பதாக அறிகிறேம். பஸ்களில் பிரயாணம் செய்யும் சிங்களவர்கள் இவர்களுச்கு விசேட மரியாதைகள் செய்வதை நமது அம்மான் தெரிந்து கொண்டார். சிங்களவரிடமிருந்து இப்பேர்ப்பட்ட விசேட மரியாதைகளை எதிர்பார்த்துத் தானே என்னவோ, இவர்கள் சிங்களப் புத்தகங்களை பலருக்கும் வெளிப்படையாகக் காட்டித் திரிகிறார்கள்?

அன்னைக்குத் துரோகம் நினைக்கும் ஆரணங்குகளின் பட்டியலும் நீள வேண்டுமா?

## சிங்கள வியாபாரம்

பல வழிகளில் பொருளாதாரத்துறையில் இப்பொழுது சிங்களவர்களுக்கு லாபமேற்படுகிறது. தமிழர்களுக்குச் சிங்களம் போதிக்க பலருக்கு அரசாங்கச் சலுகைகளும், சம்பளமும் கிடைக்கிறது. வேறு பலருக்கு பிரத்தியேக சிங்கள வகுப்புகளை நடத்துவதன் மூலம் வருவாய் பெருகிறது. மொத்தத்தில் தமிழ் பிரதேசங்களில் சிங்களம் பயிற்றுவோர் தொகை அதிகரிக்கிறது. பொருளாதாரப் பிரச்சினையை அலசி ஆராய்ந்து கண்டவர்கள் தாங்களே என்று தம்பட்டம் அடிக்கும் முற்போக்குவாதிகள் இந்த வகையில் ஏற்படும் பொருளாதார நெருக்கடி, எத்தன்மையான நிலையை வருங்காலத்தில் உருவாக்கும் என்பதை ஆராய முயலவில்லைப் போலும். தமிழ் பேசும் மக்களின் பொருளாதாரம் இந்த வகையில் பெரிதும் சூறையாடப்படுகிறது.

கிளிநொச்சியில் ஒரு தமிழ் பெண்மணி ஒரு புதுமுறை வியாபாரத்தை ஆரம்பித்துள்ளாராம். அரைகுறை சிங்களம் தெரிந்த ஒரு பெண்மணியை வைத்து சிங்கள வியாபாரத்தையே ஆரம்பித்துள்ளாராம். அரசாங்க உத்தியோகத்தர்கள் சிலரும் இந்த சிங்கள வியாபாரத்தில் ஈடு பட்டுள்ளனராம். கேவலம் தமிழ்ப் பெண்களே இந்த நிலைக்கு வரலாமா? சிங்கள போதனையை ஒரு பெண்—அதுவும் தமிழச்சி நடத்துவது அவமானத்திலும் அவமானம் என்று ஒரு மருமகள் அம்மானுக்கு மனமுடைந்து, வெதும்பி எழுதியுள்ளாள்.


எல்லோரும் விரும்பும்
எழில் பெற
லதா மணிப்புரி சாரி
அணியுங்கள்!!

லதா மணிப்புரி சாரிகள்;

முற்றிலும் புதிய பிளேன்; அன் ஷெர்ட் நிறங்களில்; அழகிய தங்க நூலினாலான கிழைத்தேய டிசைன்களாலும் 3" போடர் நெடுகிலும் தங்க நூலால் இழைக்கப் பட்ட டிசைன்களாலும் அலங்கரிக்கப் பட்டுள்ளன.

45" X 6 யார்

சாரிகளுக்கேற்ற பிளவுஸ் புடவைத் துண்டுகளும் உண்டு.



ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை மாலை நாலு நாற்பத்தைந்திலிருந்து ஐந்து மணி வரை இலங்கை வானெலி வர்த்தக ஒலி பரப்பில் குண்டன் மால்ஸ் ஸ்தாபனத்தார் அளிக்கும் "லண்டன் கந்தையா" நிகழ்ச்சியைக் கேட்டு மகிழுங்கள்.

எலைட் சுப்பர்லேன்
வியாபாரிகள் எல்லோரிடமும் கிடைக்கும்.
ஏக விநியோகஸ்தர்கள்:-
குண்டன்மால்ஸ் லிமிட்டெட்,
மொத்த விற்பனைப் பகுதி: 26, கெய்ஸர் வீதி,
சில்லறை விற்பனைப் பகுதி: 110&114, மெயின் வீதி,
கொழும்பு.
—Mylads/KL.546/62—


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிங்களம் படித்த தமிழரை ஏற்க மாட்டேன்

## கவிதைப் பூங்கா

## மற்றவர்க்காய்ப் பட்ட துயர்

"மஹாகவி"

போட்டர் மணி அடிக்கப் போகட்டும்
என்று சொல்லிக்
காட்டர் கொடி எடுத்துக் காட்டக்,
கனைத்த படி
ஓட்டம் தொடங்கிற் றுயிர்பெற்
றெருவண்டி

கட்டிடங்கள் கிரைக் கழனிகளாய்,
நீள் கடல் போல்
வெட்ட வெளியாய், வெறும் புல்
அளவேபோல்
நெட்டை நிலங்களிலே நிற்கின்ற
தென்னைகளாய்

மாறிவரக் கண்டு மனம் விட்
டிருக்கையிலே
காறி உமிழ்வதற்கென் யன்னற்
கதவிடுக்கில்
வேறொருவன் நீட்டும் தலைகண்டேன்—
வெள்ளை மயிர்;

பாவம், கிழவன்; பழுத்த
உடல் மீது
சாவின் வெளுப்பு; சளியோடு
வெற்றிலையின்
காவி நீர் துப்பிக் கடைவாய்
துடையாமல்,

நிற்கின்றான் மீண்டும் நிமிர்ந்தும்,
நிமிராமல்;
கற்கொண்ட நெஞ்சம் கனிவுண்
டெழுந்துகொண்
டுட்கார விட்டேன்; உவகையோ
டுட்கார்ந்தான்.

வண்டி முழுதும் சனங்கள்;
வலதுகையை
மிண்டு கொடுத்து, விழி முன்
மரச் சுவரே
கண்டபடி நின்ற என் கால்கள்
கடுத்தன.

யன்னலிலே வைத்த கரத்திற்
தலைசாய்த்துச்
சின்னக் கிழவனே சிற்றுலகை
முற்றும் மறந்
தென்ன நினைவும் இலாமற்
துயின்றிருந்தான்—.

ஆதலினால் இன்பம் அடைந்தேனே?
அப்பனே
வேதனையிற் கூட விளையும்
சுகம் உளதோ?
காதலிலும் பேரின் பம் காணல்
தகும்போலும்!

எட்டுமணி நேரம் எழுந்து நின்ற
அவ்வளவில்
கிட்டும் நிறைவு மனதில்
கிளுகிளுக்கச்,
'சிட்டெழிலூர்' என்றின்று செப்பப்
படுகின்ற,

'சிட்டுக்கா' டென்னும் என் சிற்றூரில்
வண்டிகொண்டு
விட்டுவிட வீடு விரைகின்றேன்;
மற்றவர்க்காய்ப்
பட்டதுயர் இன்பம் படைக்கும் என்று
பாடுகிறேன்.

# அரசாங்கம் முயற்சி செய்தால் எதிர்த்தே தீருவோம்

## அதிகாரியின் அறிக்கைக்கு கிராம சபைத் தலைவர் கண்டனம்

எனது காரியாலயத்தில் இப்பொழுது கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்படும் போது அவர்களின் இடத்தை நிரப்ப, சம்பளத்திற்காக சிங்களம் கற்றுத் தேறிய தமிழர் ஒருவரைத்தானும் எனது காரியாலயத்தில் பதவி ஏற்கவிடமாட்டேன். இங்கு கடமையாற்றும் எவருக்கும் சிங்களம் படிக்க கடமை விடுதலை வழங்க மாட்டேன்.

சிங்களத்தை எம்மீது திணிக்க முயலும் எந்த அரசாங்கத்தையும் தகுந்த வகையில் எதிர்த்தே தீருவோம். இவ்வாறு மயிலிட்டி கிராம சபைத் தலைவர் திரு. சு. ஸ்ரீபாஸ்கரன் உள்ளூராட்சி சேவை அதிகாரியின் சுற்று நிருபத்தைக் கண்டித்து எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:-

வடகிழக்கு மாகாணங்களிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் கருமங்கள் யாவும் தமிழில் நடைபெறுவதால் உத்தியோகத்தர்கள் சிங்களம் படிக்கவேண்டியதில்லை. எனது காரியாலயத்தில் கடமையாற்றும் எந்த ஒரு உத்தியோகத்தரும் சிங்களம் படிக்க என்று முயலுகிறார்களோ, அன்றுதொடக்கம் அவர்களைக் காரியாலயத்துள் நுழைய விடமாட்டேன்.

உள்ளூராட்சி மன்றங்களில் வேலை செய்யும் உத்தியோகத்தரின் அடிப்படைச் சம்பளம் உள்ளூராட்சி மன்றங்களால் கொடுக்கப்படுகின்றது. விசேஷ வாழ்க்கைப் படியும், வாழ்க்கைப்படியுமே அரசாங்கம் கொடுத்துதவுகின்றது. இவற்றிற்காக சிங்களத்தை எமது உத்தியோகத்தர் மீது திணிக்க முடியாது. அப்படித் திணிக்க முயலும்பட்சத்தில் எமது உத்தியோகத்தர்களின் முழுச் சம்பளத்தையும் எங்கள் உள்ளூராட்சி மன்றங்கள் கொடுத்து உதவ முன்வரலாம். இதற்காக வரிகளைக் கூட்டினாலும் தமிழ்பேசும் மக்கள் பொறுத்துக் கொள்வர்.

தமிழ்ப் பகுதிகளில் உள்ள உத்தியோகத்தரின் முழுச் சம்பளத்தையும் அப்பகுதிகளிலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் கொடுக்கும் பொழுது அரசாங்கத்திற்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்குமுள்ள தொடர்பு பலவகைகளில் துண்டிக்கப் பெற்று கால கதியில் தமிழ் பகுதிகளிலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் தனித்து இயங்க வழிகோலுவதற்கு தங்கள் திட்டம் இடம் கொடுக்குமென எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். தமிழர் மீது சிங்களத்தை எவ்வளவுக்குத் திணிக்க முயல்கிறீர்களோ அவ்வளவுக்கு மேல் தமிழர் ஒற்றுமைப்பட்டு தமது கருமத்தை தாமே செய்ய முயலும் நாளும் கிட்டிக் கொண்டே வரும்."

உத்தியோக கருமமொழிக் கொள்கையை அமுலாக்கல் பற்றிய சுற்று நிருபம் ஒன்றை உள்ளூராட்சி சேவைக் கமிசனின் தலைவர் வடக்குக் கிழக்கு மாகாணங்களிலும், புத்தளம் பெரும் பகுதியிலுமுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு அனுப்பியுள்ளார். அதன்படி உள்ளூராட்சி மன்றங்களிலுள்ள உத்தியோகத்தர்கள் இதுவரை சிங்களம் பயில வசதியில்லாவிடில் அந்த உத்தியோகத்தர்களின் பட்டியலை ஏழு நாட்களுக்குள் உள்ளூராட்சி சேவைக் கமிஷன் அலுவலகத்திற்கு அனுப்பவேண்டும். அத்துடன் சிங்கள வகுப்புகளுக்கு செல்ல உத்தியோகத்தர்களுக்கு கடமை விடுதலை கொடுபடவேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

# சிறிமா புரம் ஏன்?

திருமலையில் சிறிமாவோபுரம் தோன்றியது ஏன் எனக் கேட்டுத் திருமலை தமிழர் முன்னேற்றக் கழகம் விடுத்த துண்டுப் பிரசுரத்தை இங்கே தந்துள்ளோம். ஆனால்திருமலைநகரசபையினருடைய சம்மதமின்றியே இந்த சிறிமாவோபுரம் தோன்றியிருப்பதாகத் திருமலை நகரசபைத் தலைவர் கூறுகிறார்.

சிங்கள ஆதிக்கத்திற்கு சிங்கத் தமிழர் அடிமைகளா? ஆம் என்று கூறி ஆதிக்கமே வருக வருக என அடி பணிகிறது திருகோணமலை நகரம்.

செந்தமிழ் மக்களே சிந்தியுங்கள். காட்டிக் கொடுக்க முனைகிறது நகராண்மைக் கழகம். இந்த நிலைமை ஒட்டித் தீர்க்க வேண்டியது நல்லோர்கள் கடமை. இதை செய்வீர்களா? செய்யத் தயார் தானா? செப்புங்கள்! செப்புங்கள்!!

**திருகோணமலை வாழ் தமிழ் பேசும் மக்களே!**

இந்த நாட்டிலே தமிழ் பேசும் சமுதாயம் அரசியல் உரிமைகளற்ற அடிமைகளாக ஆக்கப்பட்டு அந்தகாரச் சூழ் நிலையிலே வாழ்ந்து வருகிறார்கள். குடி உரிமை அற்று மொழி உரிமை அற்று கோலேந்திகளின் கொடூரத்தனத்தால் கொடுமைகள் பல அனுபவித்து கூனர்களாய் குருடர்களாய் வாழ்ந்து வருகிறார்கள். இந்த ஈனத்தனமான வாழ்வு ஒழிந்து மானத்தோடு வாழ்வோம் இன்றேல் மண்ணோடு மண்ணாக செத்து மடிவோம் என மார்தட்டிக் கிளம்ப வேண்டிய நேரத்திலே, எங்களுக்காகப் பாடுபடுவோம் என்று கூறி எங்கள் வாக்குரிமைகளைப் பெற்றுச் சென்ற பிரதிநிதிகளால் நடாத்தப்படுகின்ற நகராண்மைக் கழகம் "வாக வருக சிங்கள ஆதிக்கம்! வந்தனம் கூறுகிறோம் வணங்கிப் போற்றுகிறோம். வாழ்க" என்று வாழ்த்துக் கூறுவது போல உப்பு வெளியில் இருக்கின்ற ஒரு பகுதிக்கு 'சிறிமாபுரம்' எனப் பெயர் சூட்டப்பட்டிருக்கிறது.

இன்றைய அரசியலார் தமிழ்ப் பிரதேசங்களை சிங்கள மயமாக்கப்பட வேண்டும் என்று நினைத்துச் செயலாற்றி வருகின்ற இந்த நேரத்திலே தமிழ்ப் பகுதியிலே இருக்கக் கூடிய ஒரு இடத்திற்கு சிங்களப் பெயர் சூட்டப்பட வேண்டுமா? செந்தமிழர் மானம் அடைவு வைக்கப்பட வேண்டுமா?

**காரணகர்த்தா யார்? கை தூக்கியவர் எவர்?**

இந்த நிலைக்கு யார் காரணம்? நார மன்றத்தின் முழு உறுப்பினர்களும் காரணமா? அல்லது ஓரிருவரைத் தவிர்ந்த ஏனையோரது வேலையா? இந்த இழி நிலை மாற்றப்பட வேண்டாமா? மறைக்கப்பட வேண்டாமா? நாம் இதனைக் கூறுவதிலிருந்து சிங்களத் தோழர்கள் மீது கோபப்படுவதாக யாரும் கருதவேண்டாம். சிங்கள ஆதிக்கத்தை எதிர்க்கிறோம். அதற்கு அடிகோலும் நகராண்மைக் கழகத்தை எதிர்க்கிறோம்

**செப்பவும் இல்லை செயலாற்றவும் இல்லை.**

அடக்கப்படுகிறான் தமிழன், ஒடுக்கப்படுகிறான் தமிழன், உரிமை மறுக்கப்படுகிறான் தமிழன், இப்படி இருக்கின்ற போது அவன் வாழ்கின்ற பிரதேசத்தை சிங்கள ஆதிக்கத்துக்குட்படுத்தாதீர் செந்தமிழர் வாழ்வைக் குலைக்காதீர் எனச் செப்பு முகமாக சிறிமாபுரத்துக்கு நாம் முதலில் எதிர்ப்புத் தெரிவித்திருந்தோம். 30-7-62-ம் திகதியைக் கொண்ட கடிதத்தில், சிறிமா புரத்துக்கு தமிழ்ப் பெயர் சூட்டும்படி எடுத்துக்கொண்ட முடிவினைத் தெரிவித்திருந்தோம். பதிலை நேரடியிலேனும் அஞ்சலிலாவது பெற்றுக்கொள்ளத் தயாராய் இருப்பதாகத் தெரிவித்ததும் எதுவித பதிலுமில்லை. உப்பு வெளிக் கிராமச் சபைத் தலைவர் எதிர்ப்புத் தெரிவித்திருந்தும் தமிழரசுக் கட்சிக் கிளை எதிர்ப்புத் தீர்மானம் நிறைவேற்றியிருந்தும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுப்பதாகத் தெரியவில்லை.

**தட்டிக் கேளுங்கள்—கொட்டம் அடக்குங்கள்.**

**தமிழ் பேசும் மக்களே!**

இதற்குக் காரணம் யார் என்பதை உங்கள் வட்டார உறுப்பினரிடம் தட்டிக் கேளுங்கள்! தயங்காது கேளுங்கள் சிறிமா புரத்துக்கு ஆதரவாக உள்ள உறுப்பினர்களை வீழ்த்துங்கள் வீழ்த்துங்கள் அடுத்த முறை படுதோல்வியில் ஆழ்த்துங்கள்.

**உறைகிறது தமிழ் இரத்தம்—மறைகிறது தமிழ்ப் பெருமை.**

சரித்திரப் பிரசித்தி வாய்ந்த தென்கின்றோம், திருகோணமலையை! ஆனால் அது தன்மானம் அற்றவர்களால் தகுதி நிலை குலைக்கப்படுகிறது. தமிழ்ப் பெரும் தனிப் பிரதேசமென்கிறோம். ஆனால் அது பெயரளவுத் தமிழர்களால் பெருமை குறைக்கப்படுகிறது. எனவே தமிழ் மக்களே! இந்த நிலையை நீடிக்க விடாதீர்கள். ஏகோபித்த

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டைய இலக்கியம்:

# காதலனுடன் ஓடிவிட்ட மகளுக்காக தெய்வத்தை வேண்டும் தாயுள்ளம்

## மேலான இப்பண்பு மிளிர்கின்றது குறுந்தொகைப் பாடல் ஒன்றில்

பண்டைக் காலக் காதலர் பண்பையும், காதலர்களை வெறுக்காது, அவர்களைக் காப்பாற்றத் தாயுள்ளம் தெய்வத்தை வேண்டிடும் காட்சியையும் இக் குறுந்தொகைப் பாடல்—இக் கட்டுரை—படம் பிடித்துக் காட்டுகிறது. காதலர்களை வெறுத்திடும் தாய் தந்தையருக்கு இது ஒரு போதனையாகவும் அமைந்துள்ளது.

பாலை நிலத்து வழியே வாலைக்குமரி யொருத்தி மாலை நேரத்தில் வந்து கொண்டிருக்கிறாள்! மஞ்சள் வெயில் அவள் மேனியிலே பட்டு, அங்கங்களைத் தங்கமாகக் காட்டிக் கொண்டிருக்கிறது.

அவளது நடையின் ஒயிலை மயில் கண்டு நாணும்! குயிலைப் பழிக்கவல்ல குரலழகி! கூந்தலிலே ஆற்றுக் கருமண்ணின் அழகைக் கண்டிடலாம்! துண்டு பட்ட பவளத்தை அத்தோகையின் அதரங்கள் ஞாபகமூட்டும்! — அவள் அவ்வளவு கொள்ளை — யழகு பெற்றிலங்கும் பேரழகி!

அனிச்சமலரை விட மென்மையான அழகுச் சிற்றடிகளை வைத்து நடந்து வருகிறாள்!...... "கள்ளக் காதலனை — கைப்பிடிக்க இருப்பவனைக் கண்டிடப் போகிறேன்" என்று அவள்தம் கயற் கண்கள் காட்டிவிட்டன! அவளது வேய்கரத்தின் வீச்சில், வேகமாக வருகிறாள்; "ஏதோ அவசரமான அலுவல்" என்பது தெரிகிறது — புரிந்து கொள்ளலாம்!

### தேடி வந்தாள்

வந்தவள், வளைந்து சென்ற வழியிலே திரும்பிச் சற்று நடந்து, பக்கத்தேயிருந்த குடிசைக்குச் சென்றாள்! அக்குடிசையின் கதவை மெள்ளத் தட்டியது அவளது செங்காந்தள் விரல்கள்! கதவு திறக்கப்படவில்லை, அரவமேதுந்தான் கேட்கவுமில்லை! அலுத்துக் கொண்டு மீண்டும் பலமாகத் தட்டினாள்...... கதவு திறக்கப்படவில்லை!!

அழகிய ஐந்து விரல்களிலும் ஆள்காட்டி விரலின் நுனியை மட்டும் கத்துகடல் தருகின்ற முத்தனைய பற்களுக்கிடையில் வைத்துக் கடித்தாள் – ஆமாம்! சற்றுச் சிந்தித்தாள்.

மற்றக்கணம், "ஓ......அத்தான்......! அத்தான்......!" என்று குயிற்குரலிற் கூவி, கதவையுந் தட்டினாள். அப்போதும் அது திறக்கப்படவில்லை! பார்க்க வேண்டுமே அவள் தம முகத்தை! தங்க நிறத் திங்கள் முகம் பொங்கியது; குங்குமம் போலச் சிவந்தது! அவ்வளவு கோபம் போலும்!

### மருண்டாள்— ஓடித் திரும்பினாள

அந்தவேளை, அரிவையவள் பின்னே அரவமேதுமில்லாது ஆணழகன் ஒருவன் வந்து, அவளது கண்களை உரம்—சேர் கரங்களாற் பொத்தினான்! புலியிடமகப்பட்ட புள்ளிமானைப் போலக் கிலிகொண்டு, தன்னை மறந்து அந்தப்பாலை நிலமே அதிரும்படி சத்தமிட்டு, மருண்டோடித் திரும்பினாள்!......

அங்கே? அவள் யாரைத் தேடிவந்தாளோ, அவனே நிற்பதைக் கண்டு பயம் தெளிந்தாள். முல்லை நிகர் முறுவலொன்றைக் கொட்டினாள். அதுபோது மாதவள் முகம் மலரைப் போல மலர்ந்தது.

அடுத்தகணம், 'அத்தான்' என்று கூவி அவனைத்தன் பாளைக் கரங்களாற்கட்டியணைத்தாள்! அவளை அன்போடு இறுக இணைத்தான் அந்த இளைஞன்! அவனது அகன்று விரிந்த மார்பிலே முகத்தைப் புதைத்துக் கொண்டு குழந்தையைப் போல விம்மி விம்மி அழுதாள்!

"பிறை நுதலாய்! என்ன குறை வந்து விட்டது உனக்கு? முறைதவறி என் குடிசைக்கு நீயே வந்து விட்டு, ஏன் இப்படி அழுகிறாய்? சே! நீ என்ன குழந்தையா? அழாதே ஆகவேண்டியதைச் சொல்" என்று கூறி அவள்தம் முகத்தைத் திருப்பினான்.

### காரியம் மிஞ்சிவிட்டது

அவளது கத்தி நிகர்கண்கள் இரத்தம் போலச் சிவந்தன; கண்ணீர் பெருக்கின.

"கண்ணீர்தானா கன்னியரின் கடைசி ஆயுதம்? எடுத்ததற்கெல்லாம் அழுதழுதுதான் பெண்கள் ஆகவேண்டியதக் கவனிப்பதில்லை" என்று அலுத்துக் கொண்டான்.

அத்தான் என்னைப் பறிகொடுக்கப் போகிறீர்களா? இல்லை, நம் பாலை நிலத்து மக்களின் நெறியைக் காக்கப்போகிறீர்களா? காரியம் மிஞ்சிவிட்டது......என் பெற்றோர் எனக் கேற்ற காளையைத் தேடி விட்டனராம்.

### துறைநீலன்

தங்களை மறந்து மாற்றானின் மடியில் துவண்டுகிடப்பதை விட, மாண்டுவிடுதல் நல்லது. பருந்து போலத் தூக்கிக் கொண்டோடி விடுவேனென்று கரும்பு மொழியிற் செப்பினீரே! அந்த காலம் வந்து விட்டதத்தான். திட்டுங்கள் திட்டம். இனியும் என்னால் வீட்டிலிருக்க முடியாது" என்று அழுகைக்கிடையே கூறிமுடித்தாள்.

நீட்டிய ஈட்டிக்கு நேர் நின்று நெஞ்சைக் காட்டிடவல்ல அக்காளை சற்றுச் சிந்தித்தான்—அவனது கண்களும் நெற்றியும் ஒரு முறை சுருங்கி விரிந்தன. அவனது நெஞ்சிலே ஏதோ யோசனை சிக்கி விட்டது போலும்!

"அன்னமே அஞ்சாதே! இன்றிரவே இந்த ஊரை விட்டு இரவோடு இரவாக ஓடிவிடுவோம். வேறு வழியேயில்லை......... இன்று வானில் நிலா உதயமாக நெடுநேரமாகலாம். நிலா உதயத்தில் உனது கொல்லைப்பக்கம் வந்து விடுவேன். குறித்த நேரத்தைத்தவற விடாதே; பார்த்துக் கொண்டேயிரு! நேரமாகிவிட்டது; வீட்டில் தேடுவார்கள்" என்று கூறி அவளைப்போக விட்டான்.

திட்டமிட்டதுபோல், அவளைக்கூட்டிக் கொண்டோடி விட்டான், அந்த வேல் கொண்ட வேங்கைநிகர் வீரன்! தனது மகள் இப்படி ஓடிவிடுவாளென்று அவள் தம் தாய் கற்பனைகூடப் பண்ணவில்லையே. பாவம்!

பொழுது புலர்ந்தது, பூத்தன பூக்கள். அந்தநேரத்தில் அவளதுதாய் வைகறை விட்டெழுந்தாள். பக்கத்தில், தன்னோடு படுத்திருந்த மகளைக்காணவில்லை! கொல்லைப் பக்கம் போயிருப்பாளென்றெண்ணினாள், நேரம் கடந்து கொண்டேயிருந்தது, மகளைக்காணாத தாய் கன்றையிழந்த பசுப்போலானாள். எங்கும் தேடி, இறுதியில் அழுதாள்!

"அவள், காதலனோடு இரவோடிரவாகப் போய்விட்டாள்" என்ற செய்தியை அறிந்து கொண்டாள். சற்று அவளது — சிந்தனை படர்ந்தது.......

### தாய் தெய்வத்தை வேண்டினாள்


"அவளுக்கேற்றவனை அவளே தேடிப்பிடித்துக் கூடிக் கொண்டோடி விட்டாள்! பரவாயில்லை. ஆனால், பெற்ற எனது மனம் எப்படித்தாங்கும்? பாலை நிலமென்றால் பஞ்சு மெத்தையா? எப்படி யெப்படித் துன்பப் படுகிறாளோ! வெப்பந் தாங்க முடியாமல் இலைகளை இழந்த மரங்கள்தானே அவ்வழியிலே காணப்படும்! எப்படித்தான் அவ்வழியில் நடந்து போகிறாளோ! நிழலுக்கு என்ன செய்வாள்? நீருக்கு எங்கு போவாள்? கற்களும், முட்களும் நிரம்பிய பாலை நிலத்து வழியிலே நடக்க முடியாது— கண்ணீர்விட்டுக் கதறுவாளே!"...... இப்படிச் சிந்தித்தாள்; சிந்தை நொந்தாள்.

அடுத்த கணம் தெய்வத்தை வேண்டுகிறாள் இப்படி:— "தெய்வமே! நெடிய வேல்தாங்கிய இளைஞனுடன் என் இளம் பெண் ஓடிவிட்டாள். அவள் செல்லும் வழியோ கொல்லும் குணம் படைத்தவர்கள் வாழுகின்ற பாலைநிலம். அங்கே வெயில் காயாதிருக்கட்டும்! நிழல் இருக்கட்டும்! அவள் நடந்து போகின்ற வழியிலே கற்களில்லாது, பட்டுப்போல மண் மிகுந்திருப்பதாக! நீரின்றி ஏங்குவாள்; எனவே, மழை—பெய்வதாக!"

'பெற்ற மனம் பித்து; பிள்ளை மனசு கல்லு' என்பதற்கொப்ப அந்தத்தாய் தெய்வத்தை வேண்டுகிறாள். "போனவள் தொலையட்டும்; கெட்டுப்போகட்டும்" என்று எண்ணவில்லையந்தப் பெற்ற மனம்! எனவேதான்: "தாயைப்போல் அன்புக்கோர் எல்லையுண்டோ" வென்று கவிஞர்கள் பாடுகிறார்கள்.

அந்தத்தாய் தெய்வத்தை வேண்டிடும் காட்சியை, அப்படியே பாடலாகத்தருகிறார் புலவர் கயமனார்! நீங்களும் இதைப்படியுங்கள்; சுவையுங்கள். இப்பாடல் மூலம் நம்மைப் பெற்றவளின் மனத்தையறிந்து, அந்த இத

(13-ம் பக்கம் பார்க்க)




# 'சாகா வரம் கொடம்மா-உன் சன்னிதிக்கு நான் வாறேன்'

## உள்ளங் கவர்ந்த அன்பு மகளுக்கு வரம் வேண்டிடும் அன்னை

மண்டூர் ந. டே. குணரெத்தினம்

மணம் செய்து எத்தனையோ ஆண்டுகள் கழிந்து விட்டன. மக்கட் பேறில்லாததால் மனமுடைந்திருந்தாள் மணிமொழியாள். வேண்டாத தெய்வங்களையெல்லாம் வேண்டி கடைசியில் மாரியம்மனுக்கு நேர்த்திக்கடன் செய்வதாக வேண்டிக் கொண்டாள். அவள் வேண்டுதல் பலனளித்தது.

பிறந்தது பெண்குழந்தையொன்று. தங்க விக்கிரகம் போன்ற தன் குழந்தையை மார்போடணைத்து மாரியம்மன் கோவிலை நோக்கி நடந்தாள் அத்தாய். மாரியம்மன் சிலை முன்னே மகவைக் கிடத்தி விட்டாள்.

'மாரியாயி தாயே– நீ
மனமிரங்கி தந்த பிச்சை
சாகா வரம் கொடம்மா— உன்
சன்னிதிக்கு நான் வாறேன்'

என்று மாரியம்மனிடம் வரம் வேண்டினாள். மீண்டாள் குழவியுடன் வீட்டுக்கு. குழவியைத் தொட்டிலிலே யிட்டுத் தாலாட்டுகிறாள்.

'பத்து ரூபா பட்டெடுத்து
பந்தலிலே தொட்டில் கட்டி
—என்கண்ணே
ஆட்டுங்கடி தோழிகளா
[illegible]'

[illegible] விருந்தெதன்றலும் தாயில் அரவணைப்பிலேயிருந்த குழவிக்குத் தனியே தொட்டிலிற் கிடப்பது பிடிக்கவில்லைப் போலும். அழ ஆரம்பிக்கிறது. வீரிட்டழும் குழந்தையை மேலும் தாலாட்டுகிறாள் தாய். யாரோதான் குழந்தையை அடித்து விட்டனரோவென்னும் பாவனையில் அவள் பாடல் அமைகின்றது.

### கிராமிய இலக்கியம்

கண்ணுருகி மெய்யுருகி
கண்டார் மனமுருக
என்புருகிப் பெற்றெடுத்த
இலஞ்சியத்தை
யாரடித்தார்?
தகப்பன் அடித்தாரோ
தாமரைப் பூச் செண்டாலே
பெற்றாள் அடித்தாளோ
பிச்சைப் பூச் செண்டாலே.
பாட்டன் அடித்தாரோ
பச்சைப் பிரம்பாலே
பாட்டி படித்தாளோ
பத்து விரல் பதிய.
மாமன் அடித்தாரோ
மல்லிகைப் பூச் செண்டாலே
அத்தை அடித்தாளோ
அலரிப் பூச் செண்டாலே.
கண்ணே கரு மணியே
கானகத்து வண்டுறங்கு
பொன்னே மணியே—என்
புதுமலரே கண்ணுறங்கு.

பாடல் முடிகிறது. பக்கத்தில் நின்ற, குழந்தையின் மாமனார் குழந்தையைக் குனிந்து முத்த மீந்து பயணம் சொல்கிறார். குழவியை ஈன்ற குதூகலத்துடன் இருக்கும் அவள் மீண்டும் பாடுகிறாள். குழந்தையின் மாமனார் குழந்தைக்குப் பரிசாக வாங்கி வரவிருப்பதையெல்லாம் தன் மனக்கண்முன் காண்பதாக அமைகிறது பாடல்.

சின்னச் செருப்பும்— உனக்கு
சிங்காரப் பொட்டுகளும்
வன்னக் குடை ஒன்றும்—
மாமா
வாங்கி வரப் போறாரே.
வாசச் சவர்க்காரும்
வாங்கி வரப் போறாரே
கொண்டைக்கு மாலை
கொண்டு வரப் போறாரே.

குழந்தை மீண்டும் அழ ஆரம்பிக்கிறது. குழந்தையைத் தூக்கி முத்த மீந்து பாலூட்டி மீண்டும் தொட்டிலில் இட்டுத் தாலாட்டுகிறாள் தாய்.

'கண்ணே திருக்கடலே
கற்கண்டே சர்க்கரையே
பொன்னே நவமணியே
பூங்குயிலே நித்திரை செய்.

பாடல் முடிகிறது. குழந்தையும் துயில் கொண்டுவிட அவள் தன்வேலைகளைக் கவனிக்கச் சென்று விடுகிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்மிடை உள்ள ஏற்றத் தாழ்வு

## மறைந்தொழிய வேண்டும்

## எத்தொழிலும் உயர்ந்த /தொழில் எனும் கருத்து பரவ வேண்டும்

**சாதி,** சமயம், சீதனம் போன்ற ஊழல்களில் தற்போது ஊறிக் கிடக்கும் எமது சமுதாயம், இதுபோன்ற ஊழல்களை விலக்கினலன்றி முன்னேற்றமடையாது; நமது தமிழினம் மேன்மையடையாது, காலகதியில் தனது சீரும், சிறப்பையும் இழந்து விடும் என்பதில் ஐயமில்லை.

நம்மை இன்று எதிர்நோக்கிக் காலத்துக்குக் காலம், நேரத்துக்கு நேரம், நிமிடத்துக்கு நிமிடம் ஏறிக்கொண்டே செல்லும் பொருளாதாரப் பிரச்சினைக்கு உதவியாக நிற்பவைகளில் சாதிப் பிரிவும் ஒன்று என்ருல் அதை மறுக்க முடியாது.

### சாதி என்ருல் என்ன?

சாதி என்ருல் என்ன? இச் சாதிப் பிளவு ஏன் வந்தது? என்பவற்றை நாம் உற்று நோக்கினுல் "சாதி" என்ற இச் சொல்லில் உள்ள நன்மை, தீமைகளை அறியலாம்.

"சாதி இரண்டொழிய
வேறில்லைச் சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையில்
—மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார்
இழிகுலத்தோர்
பட்டாங்கில் உள்ளபடி"

என்று பாடிப் போந்தார் நமது மூதாதைப் பாட்டி ஒளவை.

நாம் இப்போது உயர்ந்த பண்பாகப் போற்றும் சாதிக் கொள்கைப்படி—தமிழர்களுள்—உயர்ந்த சாதி பிராமணன்; ஆனுல், நான் பிராமணன் நான் உயர்ந்த சாதி என்று போற்றிப் புகழக் கூடிய அமரகவி—பாரதியார்—அதே பிராமண குலத்தில் உதித்தவர்—கூறுகிருர்:

"சாதிகள் இல்லையடி பாப்பா,
குலத் தாழ்ச்சி உயர்ச்சி
சொல்லல் பாவம்;
நீதி, உயர்ந்தமதி, கல்வி
—அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்

என்று.

ஒளவையும், பாரதியும் எடுத்துக் கூறியஇவ் விரண்டு பாடல்களிலும் மிளிர்கின்ற, நாம் காணும் உண்மை என்ன? ஒளவைப் பாட்டி கூறுகிருள்,"மேதினியில் இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்" என்று. உயர்ந்த குலத்தில் பிறந்த பாரதி சொல்லுகிருன், "சாதிகள் இல்லை; தாழ்வு உயர்வு என்று குலத்திலே சொல்லுதல் பாவம்; நீதி உயர்ந்தமதி கல்வி, அன்பு முதலியவைகள் அடங்கியவன்தான் உயர்ந்த குலத்தோன்" என்று.

ஆனுல், நாமோ வருடந்தோறும் பாரதி விழா, வள்ளுவர் மாநாடு போன்ற கோலாகலமான விழாக்களைக் கொண்டாடுகிருேம். மேடையிலே கத்துகிருேம். நடத்தையிலே—வீட்டிலே சாதி என்ற பாகுபாட்டைத் தான் கடைப்பிடிக்கிருேம்.

"சாதி" எந்தக் காரணத்திற்காக நம்மவரிடையே உண்டானது என்பதை நாம் இங்கு ஆராய்தல் நலம்.

### அந்நியரின் சூழ்ச்சி

தங்களுடைய வியாபார நோக்கத்துக்காகவும், தாங்கள் பணம் தேடவேண்டும், தங்கள் நாடு, செல்வம் கொழிக்கும் நாடாகத் திகழ வேண்டும், தங்கள் சமயம் பிரபல்யமாக வேண்டும் என்ற பலவிதகாரணங்களுக்

### நெஞ்சகத்தரசு

காக இங்கு வந்த அந்நியர்கள் எங்களிடையே சாதிப் பிளவை உண்டாக்கினுர்கள். எப்படி அந்நியனுக்குப் பந்தம் பிடித்தவன் உயர்ந்த பதவிகளை வகித்தான்; அவன் சந்ததியே உயர்ந்த சந்ததியாயிற்று. எவன் நீதியோடு வாழ்ந்தானே அவன் தாழ்த்தப்பட்டான்; அவன் பரம்பரையே தாழ்த்தப் பட்டதாயிற்று.

இலங்கையிலே தனது வியாபாரத்துக்கு—பணம் சம்பாதிப்பதற்கு—ஏற்ற பொருட்கள், வழிவகைகள் உண்டு என்பதை அறிந்தான் அந்நியன். சுதந்திரமாக இந்திய மக்களை நம்நாட்டுக்குள் புகுத்தி அவர்கள் இரத்தத்தினுல், தான் வாழ்ந்தான். அதே நேரத்தில் தனக்குப் பந்தம்பிடித்த இந் நாட்டவர் சிலரையும் வாழ வைத்தான். அந்நியனுக்குப் பந்தம் பிடித்தவன் படித்தான்; படடம் பெற்ருன்; பதவி வகித்தான். ஆனுல் பாடுபட்டவர்கள், கஷ்டப்பட்டவர்கள், இரத்தம் சிந்தியவர்கள், கல்வி அறிவற்றவர்கள் வாடினுர்கள்.

அந்நியன் சென்று விட்டான். ஆனுல் அவன்வகுத்த சாதிப்பிளவு செல்லவில்லை. அந்நியனுல் சொகுசான வாழ்க்கை வாழ்ந்தவர்கள் இன்றும் சொகுசான வாழ்க்கை வாழுகிருர்கள். அவர்கள் சொகுசான வாழ்க்கைக்கு கருவியாக அமைந்தவர்கள் கல்வி அறிவற்ற—அன்ருெருநாள் இலங்கையை வளம் பெறச் செய்ய ஆங்கிலேயனுல் இங்கு கொண்டுவரப்பட்ட—அந்த இந்தியத் தமிழர் பரம்பரையே.

இந்த நிலைமையை நாகரீக நாடு எனப் பெருமையடித்துத் திரியும் இலங்கையில்—கொழும்பு மா நகரிலே—தோட்டத் தொழிலாளர்களின் தவப் புதல்வர்கள் அடிமைபோல 'வீட்டு வேலைக்காரர்கள்' என்ற நாமத்தோடு நடமாடுவதை நாம் காணலாம்.

அந்நியன் வகுத்துச் சென்ற சாதிப் பிளவு அது.

### பண்டைய பிரிவினை

பண்டைய எம் மூதாதையர் ஒவ்வொரு வழியில் பணத்தைத் தேட முயன்றனர். அதனுல் ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்கு வசதியாக அமைந்த [illegible] பட்டனர். அதனுல் பணம் பெருக்கினர்.

நன்னீர் வசதியும், பசளையும் ஒருங்கே அமைந்து வளம் பொருந்திய நிலங்களை அண்டி வசித்தவர்கள் விவசாயத்தில் ஈடுபட்டனர். அந்தவழி அவர்களுக்கு இலகுவாகவும் வசதியாகவும் இருந்தது.

கடலைச் சுற்றி, அண்மையில் வாழ்ந்தவர்கள் மீன பிடித் தொழிலைக் கைக் கொண்டனர்.

மக்களுக்குத் தேவைப்படும் ஒவ்வொரு காரியத்தையும் ஒவ்வொரு தொழிலாக வகுத்து அதனை அம மக்களே கையாண்டனர். சேலை துவைப்பவர்கள் சேலை துவைபபதனுல் தங்கள் தொழிலை நடாத்தினுர்கள். முடிவெட்டுபவன் அதன்மூலம் தன் சீவியத்தை நடாத்தினுன். வியாபாரத்தில் நாட்டம் கொண்டவன் வியாபாரத்தினுல் பணம் சம்பாதித்தான். இப்படியே ஒவ்வொருவரும் தங்களுக்கு வசதியான வேலைகளில் ஈடுபட்டனர்.

இதனுல் சமூகம் அவர்கள் தொழில் மூலம் சாதி என்ற ஒரு மூட நம்பிக்கையை வகுத்து மக்களைப் பிரித்துக் கூறு கூருக வைத்திருக்கிறது. ஆரம்பத்தில் தொழிலினுல் ஆக்கப்பட்ட தொழில் பிரிவு, சாதிப்பிரிவாகி நாளடைவில் பல மாற்றங்களுக்கு இலக்காகி ஈற்றில் மனிதர்களிடையே தாழ்ந்தவன் உயர்ந்தவன், சிறியவன் பெரியவன், என்ற பேதத்தை உண்டாக்கியது.

"பிறப்பொக்கும் எல்லா
உயிர்க்கும்—சிறப்பொவ்வா
செய்தொழில்
வேற்றுமையான்"

என்று திருவள்ளுவரே கூறியிருக்கின்ருர்.

### மதமும் சாதியும்

மக்களின் அடிப்படையில் நாம் இதை நோக்கினுலும் மதங்களும் சாதிப் பிளவை அகற்றியே போதிக்கிறது.

சைவ சமயத்தை நோக்கினுல் "பக்ததந்தனு"ரின் கதையே தீண்டாமை மடமை என்பதற்கு ஓர் எடுத்துக் காட்டாக அமைந்திருக்கிறது.

கிறீஸ்தவ மதத்தை எடுத்தால் யேசு எளியவர்களோடு, அதாவது தாழ்த்தப் பட்டவர்களோடு தான், தமது காலத்தைப் போக்கியிருக்கிருர். அவர்களிடமே அன்புள்ளவராகத் திகழ்ந்தார்.

உலக உத்தமனும் காந்தி தீண்டாமையைக் கண்டித்தார்.

இதே உத்தமர்களை—அவர்கள் வகுத்த வழியைப் பின்பற்றும் நாங்கள் அவர்களின் முதற் கொள்கைகளைப் புறக்கணித்து; அவர்களின் பக்தர்கள்—தொண்டர்கள் என்று தம்பட்டம் அடித்துத் திரிவதில் பற்று என்ன இருக்கிறது?

இப்படியாகப் பழக்கப் பட்ட, நமது கல்வியின் நோக்கம் உத்தியோக வேட்கையாக இருக்கிறது.

உயர்ந்த சாதி என நம்மையே புகழ்ந்து திரிந்து நாம் நம்மிலும் குறைந்தவன்—தாழ்ந்தவன்—என எம்மால் கருதி நசுக்கப்பட்டவனின் தொழிலை மேற்கொண்டு அதைக் கடைப் பிடித்து வாழ வெட்கம்,அவமானம் என்ற சொற்கள் குறுக்கே நின்று எமது நாட்டிலுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தை அதிகரிக்கச் செய்கிறது.

இரண்டாவதாக, எம்மால் தாழ்த்தப்பட்ட் எமது இனத்தவன் தனது திறமையினுல் முன்னுக்கு வர எம்மிலே உயர்த்தப்பட்ட எமது இனத்தவன் முட்டுக் கட்டையாக நிற்கிருன். இதனுல் தாழ்த்தப்ட்டவர்களிடையே பீதி அதிகரிக்க, தாழ்த்தப்பட்ட மக்கள் தாழ்த்தப்பட்டவர்களாகவே வாழுகிருர்கள்.

### கவலை தீர மருந்து

மானிடராகிய எமக்குள் கவலை தீரவேண்டுமானுல் கலை வேண்டும். இக் கலைக்குத் துணையாக இருப்பது, கவிதை முதற் கானம் வரை; சிற்பமுதல் கவிதை வரை, காதலினுலே மனிதனுக்குக் கிடைக்கிறது. எனவே காதல் செய்வீர். காதல் இன்பமே இவ்வுலகத்திலுள்ள முதற் தலைமையின்பம். காதல் செய்யுங்

(13-ம் பக்கம் பார்க்க)

# சங்கப் பலகை

### மொழியும் முஸ்லிம்களும்

ஆசிரியர்: டி. எம். பீர்முகமது
வெளியிட்டோர்:

டி. எம். ஜே. சங்கம்
236/9, வெலுவனு வீதி,
தெமட்டகொடை
கொழும்பு.
விலை சதம்: 40

ஈழத்து முஸ்லிம்களின் தாய் மொழியென்ன என்ற கேள்விக்கு, பல வரலாற்றுக் குறிப்புக்களையும், இலக்கியங்களில் இருந்து நல்ல சில ஆதாரங்களையும் காட்டி, தமிழ்தான் அவர்தம் தாய் மொழி என்பதைப் பிரச்சினைக்கு இடமின்றி நிலைநாட்டியுள்ளார் ஆசிரியர், இந்நூலின் மூலம்.

இஸ்லாமிய இலக்கியங்கள் உருது மொழியிலும்,அடுத்தபடியாகத் தமிழ் மொழியிலும்தான் அதிகமிருக்கின் கின்றன. அத்தகைய தமிழ் மொழியைப் பேசிக் கொண்டு தமிழுக்கும் எங்களுக்கும் சம்பந்தமில்லையென்று கூறும் சில முஸ்லிம் நண்பர்களைச் சில இடங்களில் நன்ருகச் சாடியிருக்கிருர். அத்தகையவர்கள் தனது தாயை மறந்தவர்களாக அல்லது பைத்தியம் பிடித்தவர்களாக இருக்க வேண்டும் என்று, பிறிதோரிடத்தில் தனது மனச்சுமையைக் கொட்டித் தீர்த்திருக்கிருர்.

முஸ்லிம்கள் தமிழ் மொழிக்கு வழங்கிய இலக்கியங்களையும், ஆற்றிய தொண்டையும் விரிவாக ஓரளவு தெளிவுபடுத்தியுள்ளார்.

அரபி மொழி முஸ்லிம்களின் மத மொழியென்றும் அதைத் தாய்மொழியென்று கூறி, பிரச்சினையைக் குழப்புவது தவறு என்பதையும் ஆணித்தரமாக வலியுறுத்தியுள்ளார்.

இந்நாளில் இப்படியான கருத்துக்களை வலியுறுத்தும் இத்தகைய நூல்கள் வெளிவருவது வரவேற்கத்தக்கது.

— சங்கர்.

### செந்தாமரை

ஆசிரியை: செல்வி சுகந்தமலர்
வெளியீடு: ஆர். ஜே. ஆர். பிரிண்டர்ஸ்.

விலை: சதம் 20

இன்று நாட்டின் பல பகுதிகளிலும் இருந்து வார, மாத வெளியீடுகள் தினம் தினம் புற்றீசல்போல் வெளி வந்த வண்ணம் இருக்கின்றன. அவற்றுள் சில, நல்ல குறிக்கோளை முன் வைத்தும் வெளியாகின்றன. அநத வகையில் 'செந்தாமரை'யும் ஒன்று.

ஈழத்தில் வாழும் கலைஞர்களை நல்ல முறையில் அறிமுகப்படுத்தி வருகிறது. இம் மாத இதழில் நாடக எழுத்தாளரும், தயாரிப்பாளருமான திரு. ராஜபாண்டியன் அவர்களைச் சந்தித்த பேட்டிக் கட்டுரை வெளியாகியுள்ளது. இப்பகுதி தொடர்ந்து வெளியாகிக் கொண்டிருப்பது வரவேற்கத்தக்கது.

இந்துமதியின் 'சிரிப்பொலி' என்னும் சிறுகதை வெளியாகியுள்ளது. மேலும் 'பெண்கள் உத்தியோகம் பார்க்கலாமா?' என்னும் விவாத மேடை ஒன்று ஆரம்பமாகியுள்ளது. இது வரவேற்கத்தக்கது. பெணகள் சம்பந்தமான வேறு விடயங்களும் வருங்கால விவாத மேடையில் இடம் பெற வேண்டும்.

'கேட்டால் சொல்வேன்' என்னும் பகுதி நன்ருக உள்ளது. மூன்று தொடர்கதைகள் வெளியாகின்றன. இச் சிறிய வெளியீட்டுக்கு மூன்று

(13-ம் பக்கம் பார்க்க)




# தலை வலிக்கு

ரிஷி நேத்திர சஞ்சீவி தைலம்

**108 மூலிகைகளால் தயாரிக்கப்பட்டது**

இதனைத் தலைக்கு வைத்துவரின் குணமாகும் வியாதிகள்:

கண் எரிச்சல், கண்சிவப்பு, கண்ணீர் வடிதல் பூ விழுதல், கண் அரிப்பு, காதில் சீழ் வடிதல், காதுக்குத்து, பீனிசம், செவிடு, காது இரைச்சல், காது மந்தம், மூக்கிலிருந்து நீர் வடிதல், ரத்தம் வருதல், ஓயாத் தும்மல், நாற்ற உணர்ச்சி காணல், வாசனை உணர்ச்சி இல்லாதிருப்பது, மண்டையிடி, மண்டைக் கரப்பான், பிடரி வலி, ரோமம் உதிர்தல் முதலியவைகளைக் குணப்படுத்துவதோடு தலைமயிரைக் கறுத்த நிறத்தோடு அடர்த்தியாக வளரச் செய்யும்.

விபரமடங்கிய கேட்லாக் இனம்

**புட்டி 1க்கு ரூ. 5-75**
**அரைப் புட்டி ரூ. 3-00**

தபால் செலவு -/95

**ஞானசுந்தர வைத்தியசாலை,**
187, செட்டியார் தெரு, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்
SUTANTIRAN

1962 செப்டெம்பர் மாதம் 30-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு - 12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183


## காணிகளில் குடியேறுக!

நாட்டிலே பொருளாதார நெருக்கடி—உணவுப் பற்றாக்குறை. அரிசி இறக்கப் போதிய வெளிநாட்டுச் செலாவணியில்லை. ஆட்சியாளரின் விழி பிதுங்குகிறது. இப்போதுதான் அவர்களுக்கு உணவு உற்பத்தியில் அவசர அக்கறை பிறந்துள்ளது. "அதிக உணவு இயக்கம்" ஒக்டோபர் 12 ல் ஆரம்பமாம்.

இந்த நெருக்கடியான சமயத்தில் நெற்சாகுபடிக்காகக் காணிகளை வழங்க அரசாங்கம் முன்வந்துள்ளது. மட்டக்களப்பு, திருமலை, மன்னார் மாவட்டங்களில் காணிகள் வழங்கப்படுகின்றன.

இக்காணிகளில் குடியேற வேண்டும்—சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள்! என்று தமிழரசுக்கட்சி தமிழ் பேசும் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்தக் காணிகள் தமிழ்ப் பிரதேசத்தைச் சேர்ந்தவை, தமிழ் பேசும் மக்களுக்கே அவை சொந்தமாக வேண்டும். இல்லையேல் பாரம்பரிய பிரதேச உரிமை பறிபோய்விடும்.

குடியேற்றத் திட்டங்களில் சிங்களவர்கள் தொடர்ந்து குடியேறுகின்றனர். இது ஒரு நீண்ட காலத் திட்டம். இதனால் தமிழ்ப் பகுதி சிங்களமயமாகிறது. தமிழ் மண்ணிலே சிங்களம் வேரூன்றுகிறது, தமிழ் பேசும் இனம் சொந்த நிலத்தையே இழக்கிறது. பாரம்பரிய பூமி பறிபோன பின்னர் அவர்கள் எங்கே போவது?

இந்த அபாயம்பற்றி தமிழரசுக் கட்சி அன்றே எச்சரித்தது. இது இன்று நேற்று ஏற்பட்ட அபாயமன்று. கல்லோயாத் திட்டம் தொடங்கிய அன்றே நில ஆக்கிரமிப்பும் தொடங்கியது.

தற்போது வழங்கப்படும் காணிகளையும் சிங்களவர் வசப்படுத்த இடமளிக்கக்கூடாது. சிங்களக் குடியேற்றத்தைத் தடுத்து நிறுத்த வேண்டும். அக்காணிகளைத் தமிழ் பேசும் மக்கள் கைப்பற்ற வேண்டும். இதில் அசமந்தம் கூடாது. விழிப்பாக இருக்கவேண்டும். அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய கட்சி என்றும் தயார்.

காணிப் பிரச்சினை தமிழ் பேசும் இனத்தின் முக்கிய பிரச்சினைகளிலொன்று அவர்களிற் பெரும்பாலோருக்கு இன்று சொந்தமாகக் காணியில்லை. ஓரடி நிலம் கூட இல்லாதவர்கள் பலர் உண்டு. அவர்கள் ஆகாயத்தில் மிதப்பவர்கள். நிலமின்றேல் எப்படி பூமியில வேரூன்றி நிற்க முடியும்? தென்னிலங்கையில் வசிக்கும் அநேகரின் நிலை இதுதான். அவர்கள் தத்தம் தொழிலை மட்டுமே நம்பி உயிர் வாழ்கின்றனர்.

இது தமிழ் பேசும் இனத்திற்கு ஏற்பட்டுள்ள ஓர் அபாயம். இந் நாட்டு மண்ணிலே காலூன்றி நிற்க வேண்டும். அதற்கு நிலம் வேண்டும். எனவே வழங்கப்படும் முடிக்குரிய காணிகளில் குடியேறுங்கள்!

தமிழ்ப் பிரதேசத்திலே சனத்தொகை அதிகரிக்கிறது. வேலையில்லாத் திண்டாட்டமும் பெருகிறது. வேலை வாய்ப்புகள் இல்லை. படித்த வாலிபர்களுக்குத் தொழில் கிடையாது. பட்டதாரிகளோ திண்டாடுகின்றனர். தென்னிலங்கையிலே இனி தொழிற் செய்யும் சந்தர்ப்பங்கள் மிகக் குறைவு.

அரசாங்க ஊழியர்களுக்கும் எத்தனையோ நெருக்கடி. சிங்களம் கோரத்தாண்டவம புரிகிறது. உத்தியோக மோகம் இனிவேண்டாம். இந்த மோகம் எதிர்காலச் சந்ததிக்கு அழிவைத் தேடும். அதனை விட்டொழியுங்கள்.

வேலையில்லையெனத் தவிக்கவேண்டியதில்லை. விவசாயம் என்றும் கைகொடுக்கும். நிலையான வருமானமும் கிடைக்கும். கமச் செய்கையால் இலாபமுண்டு. நிலத்தை நம்பினவன் கைவிடப்படான். உடலுழைப்பால் அந்தஸ்தும் கூடும்.

விவசாயம், ஊழியம் செய்வதைப்போல அடிமைத் தொழிலன்று. விவசாயி பிறருக்குத் தலைவணங்காதவன். கைகட்டிச் சேவகம் செய்யாதவன். சுதந்திர புருஷன். சமுதாயத்திலே அவனுக்குத் தனி மதிப்பு உண்டு.

தமிழ்ப் பிரதேசத்திலே விவசாய முயற்சி ஓர் இயக்கமாக உருவெடுக்க வேண்டும். அதில் மக்கள் ஒவ்வொருவரும் பங்கு பற்றவேண்டும். நெற்சாகுபடியிலும் நவதானிய உற்பத்தியிலும் தீவிரமாக இறங்கவேண்டும். கூட்டுறவு முறையிலே ஆட்டுப்பண்ணை கோழிப்பண்ணை முதலிய பண்ணைகள் நடத்த வேண்டும். இவ்வாறு விவசாயம் பெருக—உற்பத்தி அதிகரிக்க தமிழ்ப் பகுதி மென்மேலும் செழிப்படையும். வரண்ட பிரதேசம் பொன்கொழிக்கும் பூமியாக மாறும். தமிழ் பேசும் இனம் சுபீட்சம் பெறும். வரப்புயர, நீருயரும்—நீருயர, குடியுயரும்—குடியுயர, நாடுயரும்.

இன்றைய இலங்கை பிறரிடம் உணவுக்குக் கையேந்துகிறது. இந்த அவல நிலை சமஷ்டி ஆட்சியில் தோன்றக்கூடாது. கப்பல் வந்தால்தான் சோறு—என்ற நிலைமை தமிழரசிலே ஏற்படக்கூடாது.

தனியாட்சி பெறும்போது வரண்ட பூமியெல்லாம் வளம்கொழிக்கும் பூமியாக இருத்தல் வேண்டும்! சமஷ்டியில் தமிழ் பேசும இனம் சுயதேவை பூர்த்தியைப் பெற வேண்டும் உணவுப் பஞ்சமே தலைகாட்டக் கூடாது. தன்னிறைவு பெற்று, எஞ்சிய உணவுப் பொருட்களை ஏற்றுமதி செய்யும நிலை பெறவேண்டும். அதற்குத் தமிழ் மண்ணில் ஒவ்வொரு அங்குலத்திலும் விவசாயம் செய்ய வேண்டும்.

சமஷ்டி ஆட்சியிலே தமிழ்ப் பிரதேசம் ஒரு தானியக் களஞ்சியமாகக் காட்சியளிக்க வேண்டுமென்பதே நம் நோக்கம்.

தமிழ்ப் பிரதேசம் விவசாய நாடு. ஆயினும் தொழிலும் பல்கிப் பெருக இடமுண்டு. விவசாயத்தையொட்டியே தொழில்கள் வளரும். விவசாயத்தோடு கைகோத்துச் செல்வதுதான் தொழில் வளர்ச்சி. தொழில் வளர்ச்சிக்கு மூலதனம் தேவை.

தமிழ் பேசும் மக்கள் தங்களின் மூலதனத்தைத் தமிழ்ப் பிரதேசத்திலேயே முதலீடு செய்ய வேண்டுமென்பது மன்னார் மகாநாட்டின் தீர்ப்பு. அதற்கேற்ப தென்னிலங்கையில் சிதறிக் கிடக்கும் தமிழ் மூலதனம் தமிழ்ப் பகுதிகளுக்குச் செல்லட்டும். மூலதனப் பஞ்சமின்றேல் வேலை வாய்ப்பும் அதிகரிக்கும், நாடும் முன்னேறும்.

பணம் படைத்த தமிழ் பேசும் பெரு மக்கள் இதனைச் சிந்திக்க வேண்டும். தமிழ்ப் பகுதிகளில் தொழில் வளர்ச்சிக்கு மூலதனப் பஞ்சம் ஏற்படக்கூடாது. அதற்கு வகைசெய்ய வேண்டியது அவர்கள் பொறுப்பு.

# 'வேற்றுமையை அகற்றியவர் அமரர் வன்னியசிங்கம்'

## யாழ்ப்பாணக் கூட்டத்தில் தமிழரசு தலைவர்

கலை, கலாச்சாரங்களினால் இணைந்து ஒன்றுபட்டிருந்தாலும், பிரதேசத்தால் வேறுபட்டிருந்த மட்டக்களப்புத் தமிழன், மலைநாட்டுத் தமிழன், யாழ்ப்பாணத் தமிழன் என்ற மனப்பான்மையை அகற்றிய பெருமை திரு. வன்னியசிங்கத்தையே சாரும்.

இவ்வாறு தமிழரசுக் கட்சித் தலைவரும், பட்டிருப்புத் தொகுதிப் பாராளுமன்றப் பிரதிநிதியுமான திரு. எஸ். எம். இராசமாணிக்கம் யாழ்ப்பாண நகரமண்டபத்தில் நடைபெற்ற அமரர் வன்னியசிங்கம் நினைவுவிழாவிற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

பிற்பகல் 4 மணிக்கு குளப்பிட்டிச் சந்தியிலிருந்து அமரர் வன்னியசிங்கத்தின் படம் ஊர்வலமாகப் புறப்பட்டு மாலை 6-30 மணியளவில் யாழ் நகரமண்டபத்தை வந்தடைந்தது. நகரமண்டபத்தில் அமரரின் படத்தை செனட்டர் திரு. ஜி. நல்லையா திரைநீக்கம் செய்து வைத்தார்.

திரு. இராசமாணிக்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

வடகிழக்கு, என்ற பேதம் ஒழிந்தமையினாலேயே நமது சத்தியாக்கிரகப் போராட்டத்தின் போது அரசாங்கத்தைப் பணியவைக்க முடிந்தது. எனவேதான் இன்று, நாம் கலை, கலாசாரங்களினாலும் பேசும் மொழியாலும் ஒன்றுபட்ட நமது மலைநாட்டுச் சகோதரர்களை ஸ்தாபனரீதியில் எம்முடன் இணைக்க முற்பட்டுள்ளோம். இதனை எத்தகைய சக்திகள் வந்து எதிர்த்தபோதிலும் நாம் இறுதியில் வெற்றி பெறுவது திண்ணம்.

மேலும் அவர் கூறியதாவது:

பலன் நோக்காது மக்களுக்குத் தொண்டு செய்ய எமக்கு வன்னியசிங்கத்தின் வாழ்க்கை வழிகாட்டியாகவுள்ளது. சுதந்திரம் பெற்ற பின் இலங்கைத் தமிழ் பேசும் மக்கள் பெரும் பான்மையினரின் அடக்குமுறைக்குள் சிக்கி அவதியுற நேர்ந்தது. தமிழ் பேசும் மக்களின வரலாறு இதனால் மாறுபட்டது. அமரர் வன்னியசிங்கம், தந்தை செல்வாவுடன் சேர்ந்து உருவாக்கிய திட்டமே இன்று நமக்கு வழிகாட்டியாகவுள்ளது. ஆட்சியாளர் தமிழ் பேசும் மக்களுக்கிழைத்த அநீதிகளை அவ்வப்போது பாராளுமன்றத்தில் உள்ளத்துணிவுடன் எடுத்துக் கூறியவர் அமரர் வன்னியசிங்கம். தியாகத் திருவுருவமாக அவர்கள் வாழ்ந்த காரணத்தால் ஒரு அரசியல் முன்னோடியாக விளங்கினார். நாம் விடுதலை பெற வேண்டுமானால், எம் மத்தியில் வன்னியசிங்கம் போன்ற தியாகத் திருவுருவங்கள் ஆயிரமாயிரமாக உருவாக வேண்டும்.

அடுத்துப்பேசிய தமிழரசுத்தந்தை திரு. செல்வநாயகம் கூறியதாவது: காலஞ்சென்ற திரு. வன்னியசிங்கம் அவர்களை எனக்குச் சிறுவயது முதல் தெரியும். அவர் ஆற்றிய தொண்டுகளில் மிகப் பெரியது திண்டாமை ஒழிக்க எடுத்துக் கொண்ட முயற்சியேயாகும். உயர்ந்த வைதிகக் குடும்பத்தில் பிறந்த அவர் ஹரிஜனங்களின் வீடுகளுக்குச் சென்று அவர்களுடன் ஒன்றாக உணவருந்தி, தமது வீட்டிற்கும் அழைத்து அவர்களுக்கு உணவு கொடுத்துத் தீண்டாமையை ஒழிப்பதற்கு, முற்றிலும் புதிய பல முறைகளைக் கையாண்டுள்ளார். 1958—59ம் ஆண்டுகளில் நமது ஆட்சி தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தை நடத்திய போது முன்னின்று முழுமனதுடன் உழைத்தவர் திரு. வன்னியசிங்கம்.

மட்டக்களப்புப் பிரதிநிதி திரு. செ. இராசதுரை கூறியதாவது:

திரு. வன்னியசிங்கம் எப்பொழுதும் நெருக்கடிகளுக்கும், அபாயங்களுக்கும் மத்தியில் நின்று விளையாடும் ஒரு மனிதர். சுருங்கக் கூறின் அமரர் வன்னியசிங்கம் ஒரு செயல் வீரர். இராமருக்கு இலட்சுமணன் போல, தந்தை செல்வாவுக்கு அமரர் வன்னியசிங்கம் உறுதுணையாக விருந்தார்.

செனட்டர் திரு. ஜி. நல்லையா, திருவாளர்கள் அ. அமிர்தலிங்கம், மு. பாலசுந்தரம் ஆகியோரும் பேசினர். முடிவில் மாஸ்டர் சிவலிங்கம் கோஷ்டியினர் வில்லுப் பாட்டு நிகழ்ச்சியும் இடம் பெற்றது.

### ஓய்வு பெறும் தலைவருக்கு பாராட்டு

#### அ. எ. வி. சங்க செயற்குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது

அரசாங்க எழுது வினைஞர் சங்கத்தின் சிருஷ்டி கர்த்தாவும், சங்கத் தொடக்க காலத்திலிருந்து சங்கத் தலைவராக இருந்து வந்தவருமான திரு. சிவா அவர்கள் எங்களைவிட்டுப் பிரியும் இந் நேரத்தில் அவர் எங்கள் சங்கத்தை உருவாக்குவதற்கும், வழி நடத்துவதற்கும் ஆற்றிய பெரும்பணிககு இச்சங்கம் தனது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது. என்றும் அவர் நலமே வாழ்ந்து, தமிழ் பேசும் மக்களுக்கும், தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களுக்கும் தொடர்ந்து சேவைபுரிய வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறோம்.

மேற்கூறிய தீர்மானம் 23-9-62 அன்று நடைபெற்ற அரசாங்க எழுது வினைஞர் சங்க செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டது. அன்று நிறைவேற்றப்பட்ட மேலும் ஒரு தீர்மானம், கூறுவதாவது:—

1962 ஜனவரி திங்கள் ஐந்தாம் நாள் நடைபெற்ற ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்தில் பங்குபற்றிய தன் விளைவாக தோழர் என். டி. நடராசா அவர்கள் சேவையிலிருந்து நீக்கப்பட்டிருப்பதை பத்திரிகை வாயிலாக அறிந்து இச்சங்கம் தனது ஆழ்ந்த அனுதாபத்தையும் வருத்தத்தையும் தெரிவிக்கிறது. காரணமற்ற முறையில் பழிவாங்கும் போக்கைவிட்டு, மீண்டும் அவர்களை சேவையில் சேர்த்துக் கொள்ளும்படி ஆட்சியாளரை இச்சங்கம் வன்மையாக வற்புறுத்துகிறது.

சங்கத்தின் பழைய தலைவர் ஓய்வு பெறுவதால், புதிய தலைவராகப் பொது வேலைத் திணைக் களத்தைச் சேர்ந்த திரு. மோ. தம்பிமுத்து தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

### விவசாய...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் அவர் இதுசம்பந்தமாக அவரது சகா மைத்ரிபால சேனநாயக்காவுடனும், அவர் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ள சமசமாஜக் கட்சியுடனும் சம்பாஷணை நடத்தினரென்றும் தெரிகிறது.

அதற்குப் பிறகுதான் திரு சி. பி. டி. சில்வா தனது மாற்றுத் திட்டத்தை மந்திரி சபையில் சமர்ப்பித்தாரென்று கூறப்படுகிறது. நெற்சாகுபடி செய்பவர்களும், உற்பத்தியாளர்களும் தாங்களாகவே முன்வந்து அரிசி பங்கீட்டுப் புத்தகங்களை அரசாங்கத்திடம் கொடுத்துவிடத் தூண்டும் ஒரு திட்டந்தான் அது. இத் திட்டம் சம்பந்தமாக இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லையென்று தெரிகிறது.

#### 19 பேர்களின் உறுதி

இந்த மாற்றுத் திட்டத்தை அங்கீகரிக்கச் செய்வதில் திரு சி. பி. டி. சில்வா கோஷ்டியைச் சேர்ந்த திருவாளர்கள் மைத்திரிபால சேனநாயக்கா, ஹியூ பர்னாந்து, ஜோர்ஜ் ராஜபக்ஸ, மற்றும் 15 எம். பி. க்கள் உறுதியாக இருக்கின்றனராம்.

### தரிசு நிலத்தில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காலமாக வாடகைப் பணம் செலுத்தி வந்த பின்பு, சென்ற இரண்டு வருடங்களுக்கு முன்பு இக்காணிகளின் பெறுமதித் தொகை ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்டது எனத் தெரிகிறது.

சுமார் நூறு ஏக்கருக்குக் குறையாத இக்காணிகளில் இப்போது பெரும்பாலான முஸ்லிம் மக்கள் குடியேறுவதற்காகக் காடு வெட்டித் திருத்தி வருகின்றனர் என்று அறியப்படுகிறது.

குடத்திலிட்ட ஒளிபோன்றிருந்த திரு. முகம்மதலி எம். பியின் பேச்சு, இப்போது குன்றிலிட்ட தீபம் போல் இப்பகுதி மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த விழிப்பை ஏற்படுத்தியதில் "சுதந்திரன்" பத்திரிகைக்கும் பங்கு உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரிகாலயத்துள் அமைக்கப்படும் முன்னணி

## முழுப் பூசனிக்காயைச் சோற்றில் மறைக்கலாமா?

வட்டுக் கோட்டைக்கு வழி என்ன என்று கேட்க, "துட்டுக்கு எட்டு கொட்டைப் பாக்கு" என்ற பதில் கொடுப்பதைப் போல, செய்திகளைத்தற்போது திரித்துக் கூறுகிறது என்ற சுதந்திரனின் குற்றச் சாட்டிற்கு ஒரு விளக்கமாகத் தங்கள் முற்பிறப்புக் கதைகளை அவிழ்த்து விட்டுள்ளது, மழுப்பிலும், திரிப்பிலும் முன்னணியில் நிற்கும் ஒரு தினசரி.

செய்தியைத் திரித்தது பிழை, என்பதனைச் சுதந்திரன் தெளிவாக எடுத்துக் காட்டியது. ஆனால் பிழையை ஒத்துக்கொள்ளும் கண்ணியம் பூஜ்யம் என்பதாலோ என்னவோ, முழுப் பூசனிக்காயைச் சோற்றில் மறைக்க முயலுவதுபோல, செய்த பிழையைச் சென்ற காலச் சரிதத்தைக் கூறியாவது மழுப்பலாம், வாசகர்களை ஏமாற்றலாம், என்ற பரிதாபகரமான முயற்சியில் இறங்கியுள்ளது. ஆனால் தன் பொட்டுக்கேட்டை மேலும் வெளிடபடுத்தியுள்ளது.

### இந்தத்தலைப்பு ஏன்?

செய்தியுடன் சம்பந்தமில்லாத 'இராசதுரை பதவியை மறுத்தது ஏன்?' என்ற தலைப்பு, உதவிச் செயலாளராகப் பிரேரிக்கப்பட்டதைச் செயலாளராகப் பிரேரிக்கப்பட்டது என்ற திரிப்பு, உதவிச் செயலாளராகப் பிரேரிக்கப்பட்ட ஆறு பேர்களில் ஒரு பெயரை மட்டும் தேர்ந்தெடுத்த விந்தை, இவற்றிற்கு விளக்கம் கொடுக்கப்படவேயில்லை.

தவறு நடப்பது இயல்பு. காந்திமகான் கூடத் தவறு செய்துள்ளாராம். உண்மை தான். ஆனால் அவர் தாம்விட்ட தவறைஉணர்ந்ததும், ஒப்புக்கொண்டு. வருத்தம்தெரிவிக்க என்றுமே தயங்கியதில்லை. தவறை ஒப்புக்கொண்டால், மறுப்பு கொடுக்கப்பட்டும் அதனைப் பிரசுரிக்க வேண்டாமா? அதுவும் தவறு?

பிழையான செய்தி 2-9-62-ல் வெளியாகியது. ஆனால் இன்றுவரை அச் செய்தி திருத்தப்படவில்லை. சுதந்திரனின் குற்றச்சாட்டுக்கு ஒரு பதில் எழுதிய போதுங்கூட தங்கள் தவறை பெருந்தன்மையோடு ஒப்புக் கொளவில்லை. அப்படியானால் மேற்படி கூற்று வேண்டுமென்றே செய்யப் பட்டது என்று தானே கருதப்படவேண்டும்.

அந்தத் தினசரியின் பழைய சரித்திரம் பற்றிக் கூற நாங்கள் விரும்பவில்லை.

பல கறையான்கள் அயராது உழைத்து ஒரு புற்றெடுத்தன- ஆனால் கஷ்டப்பட்டு உழைத்த கறையான்களை அகற்றிவிட்டு அதனுள் ஒரு பெருச்சாளி குடி புகுந்தது. பலனை அனுபவிக்க முயலும் வேளையிலேயே அதற்குள் ஒரு கருநாகமும் புகுந்துவிட்டது.

இடையில் புகுந்த பெருச்சாளியோ குட்டக் குட்டக் குனியும் தன்மையது. பட்டதை எல்லாம் தாங்கிக் கொண்டு 'கொர்' 'கொர்' என்று கத்திக்கொண்டிருக்கும். ஆனால் கருநாகமோ எந்த வேளையிலும் விஷத்தைக் கக்கிவிடக்கூடியது. அந்நாகத்தின் ஆட்டத்தில் மதிமயங்கிக் கிடப்பவர்கள் அதனுள் இருந்து வெளிவரக்கூடிய விஷத்தின் தன்மையை அறியாதவர்கள் போலும். இதுதான் இத்தினசரியின் தற்போதய நிலை.

எனவே உள்ளதை உள்ளபடி கூறிச் சிறப்பாக இருந்த நிலை இன்று மாறித் "தமிழரசுக் கட்சியை 6 மாத காலத்தில் முடிப்பேன்" என்று சூளுரைத்த ஓர் ஆசிரியரின் ஆதிக்கத்தின் கோர நிலை அங்கு உருவாகி, பத்திரிகை தரம், மணம், குணம், யாவற்றையும் இழந்திருக்கிறது என்பது கண்கூடு. அந்த ஆசிரியரோ தனக்கு வேலை பெற்றுத்தந்த ஆரும் கட்சியின் கையாட்களுக்குச் செஞ்சோற்றுக் கடன் தீர்க்கின்றது. பத்திரிகை அரசாங்கத்தின் ஊதுகுழல் ஆகியுள்ளது. அரிசி வெட்டை ஆதரித்து தலையங்கமே எழுதியிருந்தது!

### திருத்த வேண்டும் திருந்த வேண்டும்

இப்படியான நேரத்தில் இதே பத்திரிகையில் அடுத்தடுத்து தமிழரசுக்கட்சி சம்பந்தமான செய்திகள் திரித்துக் கூறப்பட்டு வருகின்றன எனவே தான நாம் இது விஷமத்தனமாக-ஏதோ ஒரு காரணத்திற்காகச் செய்யப் படுவது என்று கூறுகிறோம்.

அத்தினசரியின் ஆதரவை தமிழரசுக் கட்சியினர் எதிர் பார்க்கவில்லை. உள்ளதை உள்ளபடியே கூறவேண்டும் என்று தான் கேட்கிறோம். தவறுகள் நடக்கலாம் தவறு, தவறெனத் தெரிந்ததும் திருத்தப்பட வேண்டும் என்கிறோம்.

இன்று சரியோ, பிழையோ த. அ. கட்சியில் பெரும்பாலான தமிழ் பேசும் மக்கள் நம்பிக்கை வைத்துள்ளனர். அந்தக் கட்சிச் செய்திகளை வேண்டுமெனத் திரித்

## விஷமப் பிரச்சாரத்தை அம்பலப்படுத்துகிறார் எம். பி.

பாராளுமன்ற உறுப்பினர் திரு. இராசதுரை கிழக்கிலங்கை பாதுகாப்பு முன்னணியை நிறுவ திருமலைக்கு வந்திருந்தார் என்று திரு. வில்வராஜ் என்பவர் கூறியதாக ஒரு செய்தியை வீரகேசரி வெளியிட்டிருந்ததல்லவா? இது சோடினை செய்யப்பட்ட ஒரு கட்டுக் கதை என்பதைத் திருமலை பாராளுமன்ற உறுப்பினர் திரு. என். ஆர். இராசவரோதயம் சுதந்திரனுக்கு ஓர் அறிக்கையில் தகுந்த ஆதாரங்களுடன் நிரூபிக்கிறார். தான் தெரிவிக்கும் கருத்துக்குத் திரு. இராசதுரை இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் தமது அறிக்கையில் திரு இராசவரோதயம் குறிப்பிடுகிறார்.

திரு. இராசவரோதயம் தமது அறிக்கையில் மேலும் கூறுவதாவது:—

ஓர் ஆங்கில மாலைப் பத்திரிகை திருமலையில் கிழக்கிலங்கை மக்கள் பாதுகாப்பு முன்னணியை ஏற்படுத்தியதுபற்றி பெரிதான வர்ணனைகளை வெளியிட்டிருந்தது. இது தமிழரசுக் கட்சி மலையகத்தில் கிளைகளை நிறுவும் திட்டத்தை முறியடிப்பதற்காகப் பத்திரிகைகள் நடத்தும் பிரசாரத்தின் ஒரு பகுதியே!

மட்டக்களப்பு முதலாவது பாராளுமன்ற உறுப்பினர் திரு. இராசதுரை திருமலைக்கு வந்திருந்தபோது அவரைத் தாம் சந்தித்ததேயில்லை என்று மேற்படி பத்திரிகைகளின் கற்பனைக் கட்சியின் தலைவரெனக் கருதப்படும் திரு. தா. வில்வராஜ், நான் புல்மோட்டைப் பகுதி சென்று திரும்பியதும் என்னைக்கண்டு, சில தமிழ் தினசரிகளில் தம்மைப் பற்றி வெளியான செய்திகள் முழுப் பொய்யானவை என்று என்னிடம் கூறினர். இக்கூற்றை மெய்ப்பிக்க கையொப்பமிட்ட உறுதிப் பத்திரமும் அவர் என்னிடம் அளித்துள்ளார்.

### தோல்வியிலேயே முடியும்

தங்களுடைய விஷமத்தனங்களுககுத் தம்மை ஒரு கருவியாகப் பாவிக்கவோ, தங்கள் அவல ஆசைகளை நிறைவேற்றவோ எந்த ஒரு தினசரிப் பத்திரிகையாளர்களும் முயன்றால் அது தோல்வியிலேயே போய் முடியும் என்று திரு. வில்வாரஜ் என்னிடம் கூறினர்.

வீரகேசரி பத்திரிகையின் திருகுதாளங்களுள் ஒன்றெனவே இந்தபுரட்டும் தோன்றுகின்றது. 'ஈழநாடு' யாழ்ப்பாணத்தில் வெளியாவதனால் தங்களுடையவிற்பனவு பாதிக்கப்படுவதை உணர்ந்த வீரகேசரி, விற்பனையைக் கூட்டி, இழந்த செல்வாக்கை மீண்டும்பெற முயன்று, அதிலும் வெற்றி கிடையாத போது உண்டுபண்ண நினைக்கும் சூழ்ச்சித் திட்டங்களுள் இதுவும் ஒன்றாக இருக்கலாம்.

### காரணம் யாதோ?

பெரிதாகக் கருதப்பட்ட ஒரு செய்தியை, வீரகேசரித் திருமலை நிருபர் தமது பத்திரிகைக்கு அனுப்பாத காரணம் யாதோ? 'ஈழநாடு' பத்திரிகையில் வெளியான ஒரு பழைய செய்தியை அப்பத்திரிகையிலிருந்து பிரதி பண்ணிப் பிரசுரிக்க வேண்டிய அவசியம் வீரகேசரிக்கு

### திரு. வில்வராஜ் மறுப்பு அடுத்த வாரம்

எழவேண்டியதன் மர்மம் என்ன? வீரகேசரிக்கும் ஈழநாட்டுக்கும் திருமலையில் நிருபர் ஒருவராக இல்லாமலிருந்த போதிலும், இவ்விரு பத்திரிகைகளின் நிருபர்களும் அங்கு ஒன்றாகத் தானே கடமையாற்றுகிறார்கள்? ஆகவே வீரகேசரிக்கு இந்த தகிடுதித்தம் ஏற்பட்டதற்கான காரணத்தை யிட்டுஆச்சரியப்படவேண்டியிருக்கிறது. ஒரு தினசரியில் வெளியாகிய செய்தியை பிரதி பண்ணி வெளியிடுவதன் மூலம், சுயகௌரவத்தையும், திறமையையும் வீரகேசரி ஏன் இழக்கவேண்டும்?

இச்செய்தியுடன் சம்பந்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து உண்மையை அறிந்து கொள்ளப் போதிய அவகாசமிருந்தும், 'வீரகேசரி' 'ஈழநாடு' பத்திரிகையிலிருந்த செய்தியை அப்படியே எடுத்துப் போட மூன்று காரணங்கள் உண்டு.

அவைகளாவன:—

1. 'வீரகேசரி மட்டுமல்ல யாழ்ப்பாணத்திலிருந்து வரும் ஒரு தினசரியும் இத்தகைய செய்தியைப் பிரசுரித்துள்ளதுதானே' என்று சால்ஜாப்புக் கூறுவதற்கு வீரகேசரி இடம் வைத்துக் கொள்வது.

2. யூ. என். பியினரின் ஊதுகுழலான ஒரு தமிழ் ஏட்டை நாட்டில் உலவ விட்டுவரும் ஆசிரியருடன் கூட்டுச் சேர்ந்து வீரகேசரி தன் காரியாலயத்துள் உருவாக்க முயலும் ஒரு புதிய அரசியற்கட்சிக்கு ஆதரவும், விளம்பரமும் கொடுத்தல்.

3. எனது நண்பரான திரு. செ.இராசதுரை அவர்களின் அரசியல் செல்வாக்கை நாசமாக்குதல்.

### இருட்டடிப்பு

திருகோணமலையில் கடந்த 9. 9. 62ல் விவேகானந்த சபையினரால் ஒழுங்கு செய்யப்பட்ட பாராட்டு விழாவொன்றில் திரு. செ. இராசதுரை கலந்துகொண்டார். இந்த விழாவில் சோதிடர் திரு. கே. வேலுப்பிள்ளை அவர்களுக்குப் பாராட்டு வழங்கப்பட்டது. இந் நிகழ்ச்சி சம்பந்தமான செய்தியையோ, படங்களையோ வீரகேசரி வேண்டுமென்றே வெளியிடாமல் இருட்டடிப்புச் செய்தது.

இந்த இருட்டடிப்பைக் கொண்டும், திரு. இராசதுரை திருமலைக்கு வந்ததன் உண்மையான காரணத்தை மறைத்து பொய்யான செய்தியை விஷமமாகத் திரித்து வெளியிட்ட உண்மை அம்பலமாகிறது.

சம்பவம் நடைபெற்று இரு வாரங்களுக்குப் பின்னரே, (இன்று) 23. 9. 62ல் மேற்படி செய்தியையும் படத்தையும் வீரகேசரி பிரசுரித்திருக்கிறது.

கடந்தவாரம 'சுதந்திரன்' இச்செய்தியையும், படத்தையும் வெளியிட்டிருந்ததனால், வீரகேசரி மேற்கொண்டும் ஒளிப்பு மறைப்புச் செய்ய முடியவில்லை. எனவே தானும் செய்தியையுய, படத்தையும் வெளியிட்டது.

துக் கூறினால் முன்னர் மற்றொரு தினசரிக்கு ஏற்பட்ட நிலைமைதான் ஏற்படும். பத்திரிகை முன்னேறாது. இன்று நடப்பது போல் மேலும் மேலும் வீழ்ச்சியடையும். "தினத்தந்தி" பாணியைப் பின்பற்றித் தலைப்புகளை உண்டு பண்ணியோ, மதிப்பிலும் வாசகர்கள் (அத்தாட்சி பெறாத) தொகையிலும் முன்னணியில் நிற்கிறோம் என்று இத்தனைகாலமாக எந்தப் பத்திரிகையிலும் வராத தற்புகழ்ச்சி வசனங்களைப் பிரசுரித்தோ மக்களைக் கவர முடியாது. மதிப்பிலும் சிறப்பிலும், முக்கியமாக வாசகர் தொகையிலும் வீழ்ச்சியடைந்து கொண்டிருக்கும் இத்தினசரி மீட்சி பெற வேண்டுமானால் உள்ளதை உள்ளபடியே கூறவேண்டும்.

ஒரு சில பிரமுகர்களைக் காக்காய் பிடிப்பதற்காக செய்திகளைத் திரிக்கும் "மஞ்சள் பத்திரிகை"க் கொள்கையை அனுஷ்டித்தால், பத்திரிகையின் வீழ்ச்சி தவிர்க்க முடியாததாகி விடும் என்பதை மட்டும் கூறி வைக்க விரும்புகிறோம்.

## சிறிமாபுரம் ஏன்?

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்ப்பைக் காட்டுவீர்! எம் தமிழன் பெருமையை நிலை நாட்டுவீர்!!

சிறிமாபுரம் மாற்றப்படட்டும்! செந்தமிழ்ப் பெயர் சூட்டப்படட்டும்!!

## சிறிமாவோ புரத்துக்கும் நகரசபைக்கும் சம்பந்தமில்லை

திருகோணமலை நகரசபை எல்லைக்குள் ஒரு பகுதிக்கு சிறிமாவோபுரம் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது பற்றி, திருகோணமலை நகரசபையில் கடந்த மாதாந்தக் கூட்டத்தின் போது கேள்விகள் கேட்கப்பட்டன.

சிறிமாவோ புரம் என்ற பெயர் சூட்டப்பட்டதற்கும் நகரசபைக்கும் எதுவித சம்பந்தமும் கிடையாது என்றும், பெயர்ப் பலகை அமைக்கவோ. அது சம்பந்தமான வேறு சம்பவங்களுக்கோ நகரசபை எந்தவிதமான அதிகாரமும் வழங்கவில்லை. பணமும் கொடுக்கவில்லை என்றுப் நகரசபைத் தலைவர் கூறினர்.

திருமலை நகரசபை உறுப்பினரான திரு. இ. சோமசுந்தரம் நகரசபைத் தலைவரிடம் முன்னறிவித்தலுடன் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் மேற்கண்டவாறு தலைவர் பதிலளித்தார்.




சி. சி. சி.

தாவர உரப்பசளைக் கலவைகள்

அதிக விளைச்சலுக்கு உத்தரவாதமளிக்கிறது

எமது உரப்பசளைக் கலவைகளின் உதவியால் பெருந் தொகையான நல்ல விளைச்சலைப் பெறுவதற்கு நீங்கள் திடமாக நம்பியிருக்கலாம்.

இலவச விளக்கப் பிரசுரத்திற்கு தயவு செய்து எழுதுக:-

கொழும்பு கொம்மேர்ஷியல் கம்பனி. லிமிட்டெட்,

[பெரிய பிரித்தானியாவில் இணைக்கப்பட்டது. அங்கத்தவர் பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ளது.]

பசளைப் பகுதி
அக்லண்ட் ஹவுஸ்,
யூனியன் பிளேஸ்.
கொழும்பு-2.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிக்குமரி

அல்லப்பிட்டி
**க. வ. ஆறுமுகம்**

மன்னார் மாநாட்டு மலர் சிறுகதைப் போட்டியில் இரண்டு கதைகள் பரிசு பெற்றன. அவற்றை மலரில் வெளியிட்டிருந்தோம். பிரசுரத்துக்குகந்த கதைகளில் முதலாவதாக 'நவம்' எழுதிய 'பலாத்காரம்' 16-9-62 இதழில் பிரசுரமாகியது. 'கவிக்குமரி' இவ்வரிசையில் இரண்டாவதாகப் பிரசுரிக்கப்படுகிறது. இனி, தொடர்ந்து போட்டிக் கதைகளே வெளிவரும்.

"ஈழம் தமிழ்த் திருநாடு- இது, எங்கள் உயிரெனச் சங்கே நீ ஊது... ஈழம்" ஆகா என்ன இனிமை! எத்தனை மதுரமான குரல்! பாலோடு தேனைக் கலந்தது போன்று இணைந்து கனியும் 'வயலின்' இசை மெய்சிலிர்க்க வைத்தது. "ஈழம் தமிழ்த் திருநாடு?" ஈழத்தின் இன்றைய தமிழ் பிரதேசங்களாகிய வடக்கு கிழக்கு பகுதியே நிச்சயமில்லை என்றிருக்கும் இக்கால நிலையில் இப்படியும் ஒரு பாட்டு! இதை எந்தப் பாரதிதாசன் பாடினரோ!— பாட்டு கம்பீரமாகத் தொடர்ந்தொலித்தது.

"யாழைக் கொடியில் பொறித்தோன்-
கலை யாவும் துருவி நுணுகிக் குடித்தோன்
ஈழத் தமிழ்முதல் மேதை-
உயர் இராவணன் எங்கள் குலத்தின் மூதாதை..."

துள்ளி எழுந்தேன். 'அட இது மிகப் பெரிய விஷயமாச்சே!— மிகுதியையும் தெளிவாகக் கேட்டறிய வேண்டும்' என எண்ணியவனாய் பாட்டு வந்த திக்கை நோக்கிச் சில அடிகள் வைத்தேன். என்ன ஆச்சரியம்! பாட்டே நின்று விட்டதே!

'வயலின்' தந்திகளைச் சுண்டிச் சுண்டிப் பார்க்கும் 'ணங் ணங்'என்ற ஒலி இடையிடை சிறிது நேரம் கேட்டது. பின்னர் அதுவும் நின்றுவிட்டது. "அட தெய்வமே இந்த அளவில்கூட ஒரு தமிழனும் நிம்மதி பெறக்கூடாதென்பது உன் எண்ணமா?" என்று வாய் திறந்தே 'முணுமுணு'த்தபடி சென்று படுக்கையில் சாய்ந்தேன். கண்கள் அயர மறுத்தன. காதுகளில் அப்பாட்டொலி மீண்டும் மீண்டும் கேட்டது. மனம், 'அப்பாட்டின் மிகுதி என்ன பொருளுடையதாயிருக்கும்? இதை எந்தப் புலவன் பாடினன்? இதுவரை படித்துக் கேட்டு நான் அறியாத பாட்டாயிருக்கிறதே! சிலவேளை இந்தப் பெண் தான்......சீ ஒருபோதுமிருக்காது. செல்வச் செழிப்பில் செவ்வாழைக் குட்டிபோல் வளர்ந்து, பருவ மேடையில் இளமை குதிபோடும் பதினெட்டு இருபது வயதுப் பெண்ணுக்கு ஆடவரலாம் பாடவரலாம், பிற கலைத்துறைகளும் கைகூடலாம். இதில் அதிசயம் ஒன்றுமில்லை. இவ்விதம் ஆராய்ச்சிப் பொருளை அழகிய கவிகளில் அமைப்பது அத்தனை சுலபமான காரியமா என்ன? இவ்விதம் ஆலோசனையில் தொடர்ந்தது.


சத்தியாக்கிரகத்திற்கு நிதி சேர்ப்பதற்காக வீடு வீடாகச் சென்று அலுத்துச் சலித்து இரவு ஒன்பது மணி போல் வீடு வந்து அவசரமாக உணவை முடித்துக் கொண்டு படுக்கையில் விழுந்த என் சோர்வும் களைப்பும் எங்கு சென்று மறைந்தனவோ தெரியாது.

அவர்கள் அடுத்த வீட்டுக்காரராயினும் பணக்காரர். மனத்தின் பண்பில் நம்பிக்கையற்றிருக்கும் நான், எதற்காயினும் சரி அவர்களோடு தொடர்போ அறிமுகமோ வைத்துக்கொள்வதில்லையென முடிவு செய்திருந்தேன். அதை இதுநாள்வரை காப்பாற்றியும் வந்துவிட்டேன். அவர்கள் இக்கிராமத்திற்கு குடிவந்து இரண்டு மாதங்கள் வரையிருக்கும். ஒருநாளாவது நான் அவர்கள் முற்றத்திற்குப் போனதோ எவருடனாவது பேசியதோ இதுவரையில்லை. இந்தலெட்சணத்தில் நாளைக்குத் 'திடு'மென அவர்கள் வீட்டுக்குப்போய் எடுத்த எடுப்பிலே "உங்கள் வீட்டில் இராத்திரி ஒரு பாட்டுப் பாடக் கேட்டேன், அதை முழுதும் கேட்க முடியவில்லை. அது மிகவும் நல்ல பாட்டு. தயவு செய்து அப் பாட்டை ஒருமுறை பாடி— சரியாய்ப் போச்சு—இல்லை இல்லை—அந்தப் பாட்டை ஒருமுறை பார்க்கக் கொடுப்பீர்களா? அது யார் இயற்றிய பாட்டு" என்று கேட்பதென்றால் என்னென்று முடியும்? இது எனக்குப் பெரிய காரியமாக இருக்கலாம்; அவர்களுக்கு அற்பபொழுது போக்கு விஷயமாக இருக்கலாம். "இத்தனை காலம் வராத, பழகிப்பேசி அறியாத ஒருவன், இது சாக்காகப் பழக்கம் பிடித்து ஏதோ உதவி கேட்க வந்திருக்கிறன்" என்று அவர்கள் பணக்கார மனம் ஏளனமாய் நினைத்தால்!— நினைத்தால் நினைக்கட்டுமே! நான் அவ்வித எண்ணத்துடன் போனல்தானே வெட்கம். அவர்களும் தமிழர்; நானும் தமிழன், இந்தத் தொடர்பு கூட இல்லையென்றல் அது கூட அவர்கள் விஷயத்தில் சரிப்பட்டுவராதே!

ஐம்பத்தெட்டிள் அவல நிலையில் பல்லாயிரக்கணக்கான மூலதனம் கொண்ட வியாபார நிலையங்களைக் கொழும்பில் சிங்கள இன வெறிக்கு கொள்ளை கொடுத்துவிட்டு எஞ்சியவற்றேடு தம் ஒரே மகள், மனைவி தாய் மூவரையும் அழைத்துக் கொண்டு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தவர் அவர். "தமிழரசுக் கட்சியால்தான் இந்த வினை எல்லாம்" என்று வாய் ஓயாமல் திட்டுவது, அக்கட்சியின் கொள்கைகள் குறித்து விதண்டாவாதம் பண்ணுவதுதான் வாய்ப்புக் கிடைத்த நேரமெல்லாம் அவர் வேலை. இதை நான் நன்ருகக் கேள்விப்பட்டிருந்தேன். பாதியும் இதையிட்டுத்தான் அவர்களோடு பழகிக்கொள்ள என் மனம் இடம் கொடுக்கவில்லை. இந்த இடத்திலிருந்து இப்படி ஒரு பாட்டு வந்ததே அதிசயந்தான்! — என் கண்ணிமைகள் சோர்ந்தன.

"ஈழம் தமிழ்த்திருநாடு!—இது
எங்களுயிரெனச் சங்கே நீ
ஊது...ஈழம்"

மீண்டும் மீண்டும் அமுதகானம்! "அப்பப்பா! எவ்வ



ளவு கனிவு! இனிமை! தெய்வீக இசை!— இது அற்ப விஷயமா?" என் அம்மா என்னை அருட்டியிருக்க வேண்டும். திடுக்கிட்டு எழுந்தேன். 'என்னடாப்பா அற்பமும் கொஞ்சமும்; கனல் மெத்திப்போச்சுபோய் தலையிலே அள்ளி ஊத்து, பொழுது வந்த தேசத்தைப் பார்! உனக்கு இன்னும்தான் எழும்ப மனமில்லை. நடேசு வந்து கூப்பிட்டுக்கொண்டு போகுது இப்ப வருகுதாம் வெளிக்கிட்டாம்" இவ்விதம் சொல்லியபடி அம்மா அடுக்களைக்குள் போய்க் கொண்டிருந்தார்.

எனக்கும் அப்பொழுது தான் நினைவு வந்தது. இன்னும் இரண்டு நாட்கள்தான் இருந்தன எங்கள் தொகுதியின் சத்தியாக்கிரக முறைக்கு இதற்குள் 'நிதி' முழுவதும் சேகரித்து விட வேண்டும். சத்தியாக்கிரகம் செய்ய வர இருப்பவர்களை தயார்படுத்தி நடந்துகொள்ளும் முறைகள் பற்றிச் சொல்லிக் கொடுத்து இன்னும் எவ்வளவோ விஷயங்கள் மிகவிரைவாகச் செய்து முடிக்க வேண்டியிருந்தன. நேற்றும் அதற்கு முதல் நாளும் தூரமான இடங்களில் 'நிதி' சேகரிப்பதை முடித்துக் கொண்டோம். இன்று நம்து ஊரிலுள்ள வீடுகளுக்குத்தான் போக வேண்டிய வேலை.

அடுத்த வீட்டுக்காரரின் நினைவு எனக்குடனே வந்தது. அவர்களிடம் "போவதா விடுவதா" என்பது பற்றி முன்னரே பிரச்சினை ஏற்பட்டு "எப்படிப்பட்டவராணலும் சரி எவரையும் கழித்து வைப்பதில்லை. இது எல்லாருக்கும் உரிய பொது விஷயம். யார் வந்தார்கள் கேட்டார்கள் என்பதற்கிடமின்றி எல்லாரிடமும் போக வேண்டும்" எனத் தீர்மானம் செய்திருந்தோம்.

அவர்கள் வீட்டுக்குப் போவதை நினைக்க ஒரு வித உளைச்சலாய்த்தான் இருந்தது. ஆயினும் அவர்கள் வீட்டுச் சூழ்நிலை மன நிலைகளை அறிய வேண்டுமெனப் புதிதாக ஒரு ஆசையும் பிறந்தது.

வீட்டின் முதல்வர் தொழில் நிலையத்திற்கு கிளம்புமுன் அவர்கள் வீட்டுக்குப் போக வேண்டும் என்ற காரணத்தால், முதலில் அவர்கள் வீட்டுக்குத்தான் சென்ருேம். இருபுறமும் இரண்டு பெரிய தமிழரசுக் கொடிகளுடன் அவருடைய புதிய 'கார்' புறப்பட ஆயத்தமாக நின்றது. இதைப் பார்த்ததும் என் நெஞ்சை அழுத்திக்கொண்டிருந்த பெரிய பாரம் ஏதோ நழுவியது போன்ற உணர்ச்சி. "ஓகோ மனிதர் மாறிவிட்டார் போலிருக்கே" என மனத்தே சொல்லிக் கொண்டேன். கேற்றைத் திறந்து கொண்டு உள்ளே சென்ருேம். தூய வெள்ளை உடையும் நீறு பூத்த நெற்றியும் சந்தனப் பொட்டுமாய் கையில் சாவிக்கொத்துடன் அவ்வுயர்ந்த சிவந்த பெரிய மனிதர் தம் காரை நோக்கி வந்துகொண்டிருந்தவர் எங்களைக் கண்டதும் "ஓ வாருங்கள் தம்பி வாருங்கள்!" என்று கை கூப்பி வணக்கம் செய்துவிட்டு தம் வீட்டை நோக்கித் திரும்பினர். நாங்களும் பதிலுக்கு கை கூப்பினேம். அதைஅவர்பார்த்தும் பார்க்காத மாதிரியில் வீட்டின் படிகளில் ஏறும்போதே "சரோ! சரோ!" என்று குரல் கொடுத்துக்கொண்டே பின் தொடர்ந்து வந்த எங்களை இருக்குமாறு வேண்டி ஆசனங்களைச் சுட்டிக் காட்டினர். உட்கார்ந்துகொண்டே அவர்கள் வீட்டை ஒருமுறை நோட்டம் விட்டேன். அடேயப்பா! எங்கும் ஒரே புத்தக மயம். சுவர் முழுதும் உலகப் பேரறிஞர்கள் இனத்தலைவர்கள் தியாகிகள் ஞானிகள் தெய்வங்களின் படங்களால் நிரைக்கப்பட்டிருந்தன. இது ஒரு வர்த்தகரின் வீடென்று உண்மை தெரியாத எவருமே நினைக்க முடியாது. ஒரு அறிஞருக்கோ கலைஞருக்கோ சொந்தமானதுபோல்தான் அவ் வீடு இருந்தது.

"கூப்பிட்டீர்களா ஐயா" என்ற ஓசையுடன் வீட்டின் நடுவாக ஊடறுத்து பின் கட்டுக்குச் செல்லும் அறை வாசலில் தொங்கிய வேலைப்பாடமைந்த திரையை ஒதுக்கி எங்களை ஒருமுறை பார்த்துவிட்டு அப்பேசும் பொற் சித்திரம் மறைந்து விட்டது. அந்த மனிதரும் இதைக்கவனித்தார். ஆனல் எதுவும்சொல்லவில்லை எதிர் புறத்தில் இருந்த எனக்கு தோலட்டையிட்டு சிறந்த முறையில்கட்டப்பட்டிருந்த அப்புத்தகத்தின் மேல் 'தங்க மூலா'மில் "திருக்குறள்" என்று பெரிதாய் அச்சிட்டிருந்தது தெளிவாகத் தெரிந்தது.

அவர் மகளின் கையில் இப்புத்தகம் இருந்ததை என் வீட்டில் இருந்தே பல முறை நான் பார்த்திருக்கிறேன். அப்போதெல்லாம் நான் இப்புத்தகத்தை "ஆங்கிலம் மூலம் சிங்களம்" படிக்கும் புத்தகமாயிருக்கலாம் என்று நினைத்திருக்கிறேன். எதையும் ஆராயாது செய்யும் முடிவு எவ்வளவு தவறு என்று என் மனத்துள் நொந்து கொண்டேன்.

ஒரு தட்டில் பலவித சிற்றுண்டிகள், பழங்கள், மற்ரென்றில் ஆவி மூலம் தம் வாசனையைப் பரப்பிக் கொண்டிருந்த கோப்பிக் குவளைகள். இவற்றை எங்கள் முன் வைத்துவிட்டு தன் தந்தை பக்கமாய் ஒதுங்கி நின்று கொண்டாள் அப் பெண்கள் நாயகம்.

அண்மையில் சிறிது நிதானமாக அப்பெண்ணின் முகத்தைப் பார்க்கும் வாய்ப்பை நான் இழந்து விடவில்லை. தெய்வீகக்களை சிந்தி வடியும் முகம். துறுதுறுப்பும் தூய்மையும் நிறைந்த பெரிய கண்கள். முறுவலிப்பதுபோல் தோன்றும் செவ்விய அதரங்கள். சிறிது எடுப்பான ஆனல் ஒழுங்கான மூக்கு. பசிய புல்லில் பனியிருப்பது போன்ற பருவக் கோலம்.

பிரபல ஓவியர் அச்சுதன் அவர்களின் கை வண்ணத்தால் அமைந்த 'குமரித் தெய்வத்தின் படம்' ஒன்று எங்கள் வீட்டில் இருக்கிறது. என்றும் கன்னியாகவும் உலக உலகமனைத்தின் அன்னையாகவும் ஒரு தெய்வம், அதைப் பார்த்தவுடன் இவ்விரு உணர்வும் தோன்ற வேண்டும். இதில் தம் ஒப்பற்ற வல்லமையை எல்லாம் காட்டியிருக்கிறர் அவ்வோவியர் திலகம் அந்த அன்னையின் முகச்சாயலை இப்பெண்ணின் முகத்தில் கண்ட போது அச்சமும் ஆனந்தமும் ஒருங்கே எழுந்து என் மனத்தை ஏதோ செய்தன.

"சாப்பிடுங்கள் தம்பி!" என்று அப்பெரியவர் எங்களைப் பார்த்துக்கூறினர். எல்லாவற்றிலும் கொஞ்சம் எடுத்து, கோப்பியையும் சாப்பிட்டு முடித்தோம்.

(அடுத்த இதழில் முடியும்)

**ஆனந்தா லேகியம்**

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

ANANDA MEDICAL HALL · TRADE MARK · ஆனந்தா · 174, SEA STREET, COLOMBO

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும், மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினல் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

**ஆனந்தா வைத்தியசாலை,**

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'தடுப்புக் காவலில் நாம்' 10.



# அன்பு மகள் அன்பரசிக்கு,

தடுப்புக் காவல் நிலையம்,
பனுகொடை,
ஹோமகம.
2—5—1961

என் செல்வ மகள் அன்பரசி!

இன்று வேதனைக்குள் ஓர் குதூகலம். உன்னை, உன் அம்மாவை, உன் தம்பியை, உன் அப்பாச்சியை, உன் அம்மம்மாவை ...... எல்லோரதும் சுகமும் கூறியபடி கடிதத் தூதுவன் ஒருவனை உன் அம்மா அனுப்பியிருந்தார். உன் அம்மா நாலு நாட்களுக்கு முன் தபாலிலிட்ட மடல், இரகசியப் பொலீஸ் பகுதியினரின் பரிசீலனைக்குப் பிற்பாடு இன்று வந்து என் கரமடைந்தது.

எனக்கு மடல் வந்தது போலவே வேறு சிலருக்கும் அவர்களது இல்லத்திலிருந்து மடல்கள் வந்திருந்தன. மூலைக்கு மூலை நின்றபடி கடிதங்களைப் படித்துப் படித்து மகிழ்ந்தோர், வீட்டு நிலையறிந்து வேதனையடைந்தோர்... பிரிவு வேதனையும் அதனிடையில் மடல் கண்ட மகிழ்வும்...இப்படியாகக் காணப்பட்டனர்.

உன் அருமை அம்மா விவாகப்பதிவு செய்தபின்பு எழுதிய முதல் மடல் என் நினைவுத் திரையில் அழித்தெழுதாச்சித்திரமாகியுள்ளது. அன்புப் பிணைப்புப் பேசும் மடல் அது. அம்மடலை விட இன்று என் கரமடைந்த மடல் மகிழ்வை யள்ளி அள்ளித் தந்தது.

—"உங்கள் செல்வங்கள் அன்பரசியும் அன்பழகனும் நலமே, மகிழ்வே உள்ளார்கள். ஆகாயக் கப்பலின் சத்தம் தினமும் கேட்டதும், அப்பா ஆ... அப்பா ஆ...... என அன்பரசி கையை யுயர்த்திக் காட்டிக் கத்துகிருள். நீங்கள் ஆகாய விமானத்தில் கைதாகிக் கொண்டு சென்றதை யான் கூறியபிற்பாடு, தினமும் இதைச் செய்கின்ருள். உங்கள் புகைப்படத்தைப்பார்த்து 'அப்பா ஆ' என்று கூப்பிடுகின்ருள்...... பாவம்! மகளின் அன்பையும் பாச உணர்வையும், பிஞ்சு உள்ளம் தன் அப்பாவைப் பிரிந்துள்ளமையையும் எண்ணக் கண்ணீர் வழியத்தான் செய்கின்றது. என்ருலும், —'மணி! எல்லாம் நன்மைக்கே! இந்தத் தடுப்புக் காவல் நாட்டுக்குச் செய்யும் கடமை, எதையும் தாங்கு மிதயம் வேண்டும்'— என நீங்கள் வரைந்த முதல் மடலின் உபதேசமே கொஞ்நம் ஆறுதல் தருகின்றது. உங்கள் மடலைப் பல முறை படித்தேன், படிக்கிறேன். மடல் வந்த பிற்பாடு உங்களது நிலைமை, சேமம் என்பன கேட்டு அமைதியடைந்தேன். நீங்கள் கைதான பிற்பாடு இங்கே (யாழ்ப்பாணத்தில்) பலவிதமாகப் பேசிக் கொண்டனர். எங்கே உள்ளீர்கள்? சிறைச்சாலையிலா? வேறுநாட்டிலா?......... என்றெல்லாம் எண்ணக்கூடியதாகப் பேசிக் கொண்டார்கள். சாப்பிடும் நேரமெல்லாம்...... உங்கள் உணவு எப்படியோ என்று எண்ணக் கவலையாயுள்ளது. ஆகவே அடுத்தமடலில் உணவைப் பற்றி விபரமாக எழுதுங்கள். உங்கள் மணி, உங்களது உறுதியில் சிறிதாவது கொண்டவளாகத் தானே இருப்பாள். உங்களிடம் படித்தபாடத்தில் முதன்மையானது பண்புடைமையும் உறுதியும் தானே! ஆகவே, நாடு வாழ, எதிர்காலம் சுபீட்சம் காண, உங்கள் பங்கும் செயலாகிறது என எண்ணி— அப்படிப்பட்ட ஒருவரின் மனைவி என்றும் எண்ணிப் பெருமையுமடைகிறேன். நாங்கள் மூவரும் உங்கள் எண்ணம் சூழ, வாழ்கிருேம்"..........

இப்படியாக உன் அம்மாவின் மடலமைந்திருந்தது.

உன் அம்மா ஓர் ஆசிரியை அல்லவா? தமிழைக் கற்றவளல்லவா? அந்தப் பண்பு எழுத்தாகி, என்னை மகிழ்வில் ஊஞ்சலிட உதவிற்று. யான் இங்கிருந்தாலும், உனக்கோ தம்பிக்கோ வாழ் வளிக்க உன் அம்மாவால் முடியுமே! ஏதோ மாதாமாதம் ஆசிரியையானதால் சம்பளம் வருமே,...... இதனுல் பொருளாதார நிலை என்னை வருத்தவில்லை.

பிரிவுக் கொடுமை என்ற அக்கினியை, உன் அம்மாவின் மடல் என்ற 'ஐஸ்கட்டி' குளிரவைக்கிறது. ஒரு கடிதத்திற்கு உள்ள பலத்தை இன்று நன்கு உணர்ந்தேன்.

கணவனுக்கு விதவிதமான உணவு செய்து கொடுத்து மகிழ்வது மனைவியரின் ஆவலாகும். அதனுலேயே, இங்குள்ள உணவைப் பற்றிக் கேட்டுள்ளார். ஆகவே, இன்று உன் அம்மாவுக்கு எல்லாம் விபரமாக எழுத வேண்டும்.

உன் அம்மாவுக்கு எழுதிய மடலில் எல்லாம் விரிவாக, இரகசியப் பொலீஸ் பகுதி பார்வையிட்டு அங்கீகரிக்கக் கூடியதாக, அரசியலை விடுத்து எழுதவுள்ளேன். தடுப்புக்காவலின் உணவு நிலையைப்பற்றி யான் உனக்கும் விரிவாக எழுதவில்லையல்லவா?

இப்போது எமது உணவு அறை எமதுமேல் மாடிக்குக் கீழாகும். காலை, மத்தியானம், இரவு ஆகியநேரங்களில் உணவுக்கு மணியடித்ததும், கீழிறங்கிச் சாப்பிட முடியும். அச்சாப்பாட்டு இடத்தைச் சூழ வரவும், துவக்குத் தாங்கிய பொலீசார் காவல் புரிவர்.

சில நாட்கள் மட்டுமே எமக்குத் தேவையான உணவு, கொழும்பு கிறின்லன்ட் ஹோட்டலிலிருந்து, 'வான்' வழி கொண்டு வந்தனர். இப்போதெல்லாம், எமது மேல்மாடிக்குக் கீழே சமையலறையும் ஏற்படுத்தப்பட்டு விட்டது. சமையலுக்கும், சாப்பாடு பரிமாறவும், வெலிக்கடைச் சிறையிலிருந்தும் இளங்கைதிகள் பத்துப்பேர்வரை வந்துள்ளனர். அவர்களில் பெரும்பான்மையோர் சிங்களப் பையன்கள். இரண்டு மூன்று பேர் தமிழ்ப்பையன்கள். இத்தமிழ்ப்பையன்கள் இந்திய நாட்டைச் சேர்ந்த மலையகத் தமிழ்ப்பையன்கள். இத்தமிழ்ப்பையன்கள் சமைப்பதையோ, உணவு பரிமாறுவதையோ யான் காணவில்லை. இவர்கள் தினமும் மலகூடம் சுத்திகரிக்கும் தொழிலைச் செய்கின்றனர்.

அதிகாலையில்— அதாவது காலை ஆறுமணியளவில் நாங்கள் படுத்திருக்கும் இடத்திற்குக் கோப்பி வரும். இது அதிகாலைக் (Bed Coffee) கோப்பியாகும்.

கோப்பிவரவே நித்திரையும் கலையும். நித்திரையால் எழுந்ததும் மத்திய அறை சென்று கொஞ்சம் எண்ணெய் எடுத்துத் தலையில் இட்டு வாரிக்கொண்டு, பல் துலக்கி ஸ்நானஞ் செய்து முடிக்க ஏழுமணியாகிவிடும். இடைநேரங்களிலும் ஸ்நானஞ் செய்வர். இந்த இடைநேரத்தில் சிலர் யோகாப்பியாசம் கூடச் செய்வர். என் அறைக்கு அடுத்த அறையிலேயே சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் தங்கிவரும் அறை. அவ்வறையில் கந்தையா வைத்தியநாதன் அவர்கள் தான் தேகாப்பியாசம் செய்வதுடன், வேறு சிலருக்கும் பழக்குகின்ருர். மன்னுர் கைலாயபிள்ளை, பருத்தித்துறைப் பிரதிநிதி துரைரத்தினம் ஆகியோர் யோகாப்பியாசம் செய்து வருகின்றனர். இதனிடையில் காலை ஆராதனைக்கு மணியடிக்கும். எங்கே நின்ருலும் அவ்விடத்தில் நின்றபடி இரண்டு நிமிட ஆராதனை. மறுமணி ஒலிமூலம் ஆராதனை முடிக்கப்படும்.

காலை 7-30 வரையில் மணியடித்ததும் காலைச்சாப்பாட்டுக்காக கிழிறங்கிச் சாப்பாட்டு மண்டபத்தை நாடுவோம்.

பாண், வெண்ணெய், பருப்பு, சம்பள் என்பவற்றுடன் விரும்பியோருக்கு இவ்விரண்டு முட்டைகளும் தரப்படும். முட்டையைப் பொரித்தோ, அவித்தோ, அரை அவியலாகவோ பெறலாம். சில வேளைகளில் மட்டும் இடியப்பம் தரப்படும்.

## புதுமை லோலன்

இவற்றுடன் வாழைப்பழமோ, அன்னுசிப்பழத்துண்டோ, பப்பாசிப்பழத்துண்டோ கொடுக்கப்படும். தேநீரும் கொடுபடும். காலைச்சாப்பாடு முடிந்ததா? பத்து மணியளவில் இரண்டு மூன்று நாட்களாக அரிய நாயகம் அவர்களுடைய, புதிய ஆராய்ச்சி நிரம்பிய பேச்சுக்களும் சம்வாதங்களும் நடக்கின்றன.

மூன்று நாட்களுக்கு முன்பு பாரதத்தின் கதா பாத்திரங்களைப் பற்றிய புது ஆராய்ச்சி சூடுபிடித்தது. அரிய நாயகம் அவர்களுக்குப் பதில் கொடுக்குமுகமாக வவுனியாப் பிரதிநிதியும், பருத்தித்துறைப் பிரதிநிதியும் பேசிய பிற்பாடு வட்டுக்கோட்டைப் பிரதிநிதி பேசிமுடித்தார். வட்டுக்கோட்டைப் பிரதிநிதி பேசியபேச்சில், தெய்வத் தன்மையைச் சேர்த்துப் பார்க்கும் போது மட்டும் வலுவடைவதைக் காண முடியும்.

எனவே, அரியநாயகம் ஆரம்பத்தில் குறிப்பிட்ட கருத்தையும் நினைவுறுத்தி, தெய்வத் தன்மையை நீக்கி விட்டுப் பார்த்தால்...என யான் பேசத் தொடங்கினேன். கோபம் வதனத்தில் கோடிட அமிர்தலிங்கம் அவர்கள் திரும்பவும் கூறியதையே கூற ஆரம்பித்தார். வாதப் பிரதிவாதத்தின் போது எதிர்வாதத்தையும், பலவகைப்பட்ட கருத்துக்களையும், தனக்கு ஏற்புடைத்தாகாத கருத்துக்களையும் கூடக் கேட்டேயாக வேண்டும். அதை விடுத்து ஒருபோதும் தனது நியாயமே நியாயமானது, அதையே யாபேரும் வரவேற்க வேண்டுமென எண்ணலாமா? அப்படி அமிர்தலிங்கம் எண்ணக் கூடியவரல்ல எனினும், ஆத்திரமுடன் ஏன் பதற்றமடைந்து பேச வேண்டும்? ஆச்சரியப்பட்டேன்! நாமெல்லாம் என்ன மகாத்மாக்களா? சாமான்ய மனிதர்கள் தானே! அதன் பிற்பாடு இந்த வாதப் பிரதிவாதத்தின் போது,—ஒரு நூல் வாசிப்பது நல்ல பொழுதாகும் என்று தீர்மானித்தேன் —அன்றைக்குப் பின்பு சிலர் இப் பேச்சுக்களில் கலந்து கொள்ளாதே விட்டு விட்டனர். அரியநாயகம் அவர்க[illegible] கந்தையா வைத்தியநாதன் அவர்கள் பகவத்கீதை பற்றிப் பேசி வருவதாகவும் கூறினர். பின்பு கதிரவேற்பிள்ளை அவர்களும் பேசியதாகக் கூறினர்.

இப் பேச்சு நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, பத்து மணியளவில் தோடம் பழம் கரைத்த நீர்கொண்டு வந்து தருவர்.

பன்னிரண்டரை அல்லது ஒரு மணி வரையில் மத்தியான உணவுக்கு மணியடிக்கும்.

சோறு, மூன்று காய் கறிகள் வரை, மீன் என்பன தரப்படும். இடைக்கிடை இறைச்சியும் தரப்படும். மரக்கறி உணவுகள் மட்டும் சாப்பிடுவோர் பிறிதான மேசையில் சாப்பிடுவர். அவர்களுக்குத் தயிரும் கொடுப்பர். வெள்ளிக்கிழமைகளில் எல்லோருக்கும் அதிகமாக மரக்கறிகளே. உணவு சம்பந்தப்பட்டமட்டில் தேவையானவற்றை உரியவர்களிடம் தெரிவித்து ஆவன செய்வதில் அடிக்கடி ஊர்காவற்றுறைப் பிரதிநிதி கந்தையா அவர்கள் ஈடுபடுவார்.

மத்தியானச் சாப்பாடு முடிந்ததா?

கொஞ்சம் ஓய்வு. நான் கொஞ்ச நேரம் உறக்கம் போடுவேன். பின்பு, வாசிப்பு, அல்லது 'ட்ருவ் போட்' விளையாட்டு...இப்போது 'கரம் போட்' இரண்டும் தந்துள்ளனர். 'கரம் போட்' விளையாட்டு எனக்குப் பிடித்தமான விளையாட்டாகும். இவ் விளையாட்டில் அதிக தேர்வுமுண்டு. ஆகவே நால்வர் கூடியோ, அல்லது இருவரோ கூடி விளையாடுவோம். மாலையாயதும் தேநீருக்கு மணியடிக்கும். பிஸ்கற்றுடன் தேநீர், அல்லது பாணுடன் தேநீர் கிடைக்கும். பின்பு கரமோ, ட்ருவ்ற்ஜே, கடதாசிக் கூட்டமோ, கலந்துரையாடலோ நேரத்தைக் கழியச் செய்யும்.

இரவு ஆகும். சிலர் எழுதுவர், சிலர் படிப்பர், சிலர் கரம் போன்றவை விளையாடுவர், சிலர் வானெலி கேட்பர், சிலர் கதைத்து ஒடு தகரச் சிரிப்பர்.

மணியடித்ததும், இரவுச் சாப்பாடு சோறு சாப்பிட விரும்புவோர் சோறு சாப்பிடலாம். மற்றையோருக்குப் பாண், வெண்ணெய், ஜாம், பழம் என்பன கிடைக்கும். பாணுக்குரிய உருசி வகைகளும் கிடைக்கும். சில வேளைகளில் இடியப்பம், தோசை, சப்பாத்தி என்பன மாறிக் கிடைக்கும்.

பின்பு இரவு பத்து மணியளவில் பால் கொடுப்பர். பால் பாலாக இருக்காது. அதன் உருசியை ஒரு முறை சுவைத்தோர், பின்பு சுவைக்க விரும்பமாட்டார்கள்.

வெள்ளிக்கிழமைகளில் பாயாசமும் கொடுப்பர்.

நல்ல உணவாச்சே, சீவசத்துள்ள உணவுகள் கொடுக்கின்றனரே என எண்ணத் தோன்றும். சிங்களப் பையன்கள் சமைப்பதனுல், சமையல் தமிழ்ச் சமையலாயமையாது. சிங்களச் சமையலாகவே அமையும். மீன் குழம்பு, தேங்காய்ப் பால் இல்லாது சமைப்பது சிங்கள மக்களின் வழமை. அதே போல் சமைத்தால் எப்படியமையும்? அதனுலே ஆக்குகின்ற தன்மையினுலே உருசி கெட்டு விடுகின்றது. அதை விட சோம்பலாக, மேன்மாடியே கதியென்று இருந்து விட்டுச் சாப்பிடுவதனுல்,— வேலை செய்து விட்டுச் சாப்பிடும் மகிழ்வைக் காண முடிவதில்லை.

உன் அம்மா, என் அம்மா சமைத்த உணவுகளைச் சுவைத்த எமக்கு இவ்வுணவுகள் உருசியை எப்படித் தர முடியும்?

கூட்டிலே கிளியை அடைத்து விட்டுப் பாலும் பழமும் பனிரசமும் கொடுத்தால்...கிளி மகிழவா செய்யும்??

அரசாங்கம் காரணம் கூற முடியாது, அவசரகால நிலையின் கீழ் கைதாக்கி வைத்துள்ளனர். உணவு கொடுக்க வேண்டியது கடமைதானே! வீட்டிலே சாப்பிடும் சம்பலும் சோறும், இத்தனை உணவுகளுடன் சமமாகுமா?

அன்பு! 27-4-62-ல் மட்டக்களப்பு வழக்கறிஞர் சாம். தம்பிமுத்துவும், 28-4-61-ல் வவுனியாவில் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட ஆசிரியர் வின்சென்றும் கைதாகி எமது தடுப்புக் காவல்குடும்பத்துடன் வந்து சேர்ந்தனர். 1-5-61-ல் சாவ

(13-ம் பக்கம் பார்க்க)


**சுதந்திரன் சந்தா விபரம்**

இலங்கை—இந்தியா உட்பட

**வருடச் சந்தா ரூபா.10-00**

இன்றே உங்கள் சந்தாப் பணத்தை அனுப்பி சந்தாதாரராகப் பதிவு செய்து கொள்ளுங்கள்!

ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் அச்சு வேலைகள் எவையாக இருந்தாலும் சரி— அவை கவர்ச்சிகரமாகவும் உங்களுக்குத் திருப்தி அளிக்கும் முறையிலும் செய்து தரப்படும்.

பாடப் புத்தகங்கள், மலர் வெளியீடுகள், சஞ்சிகைகள், துண்டுப் பிரசுரங்கள், அழைப்பிதழ்கள், வர்த்தக ஸ்தாபனங்களுக்குரிய சகல வேலைகள் யாவும் கச்சிதமாகத் தயாரிக்கப்பட வேண்டும் என்று விரும்புபவர்களுக்கு இதே அதற்கு உரிய இடம்:

**சுதந்திரன் அச்சகம்,**

தபால் பெட்டி 1183.
194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த,
கொழும்பு-12.

தந்தி: சுதந்திரன் போன்: 3411


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




# பாலச்சந்தர் அளித்த புதுமைப் பரிசு

"அவனு இவன்" படத்தைப் புதுமுறையில் தயாரித்தளித்த டைரக்டர் திரு. பாலச்சந்தர் மேல் நாடுகள் செல்வதை ஒட்டி, எஸ். பி. கிறியேஷன்ஸ் கலை நுணுக்கத் தொழிலாளர்கள் ஒரு விருந்துபசாரம் அளித்தனர்.

தம்முடைய புதுமுயற்சிகளுக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்த கலைஞர்களை மனமாரப் பாராட்டிய பாலச்சந்தர் கலை உலகில் புதுமுறைகளைப் புகுத்துவதை ரசிகர்கள் ஆதரிக்கவில்லையானாலும், தான் தொடர்ந்து புதுமைகளைப் புகுத்தப் போவதாக வாக்களித்தார். "அவனு இவன்" படத்தை உருவாக்க தம்முடன் உழைத்த 13 கலைஞர்களை கௌரவிக்கு முகமாக அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வோர் காகித உறையைக் கொடுத்து அவற்றை தத்தமது வீடுகளுக்குச் சென்ற பின்னர் திறக்கும்படி கேட்டுக் கொண்டார்.

"படம் வெற்றி அளிக்காத காரணத்தால் நான் எதிர்பார்த்திருந்தபடி உங்களை கௌரவிக்க முடியவில்லை. என்னுல் இயன்றசிறு பரிசுகளைக் கொடுத்துள்ளேன். குறை நினையாது ஏற்றுக் கொள்ளுங்கள்.

"உங்கள் ஆதரவு எனக்கு இருக்குமானுல் எண்ணற்ற புதுமைகளை, எத்தகைய எதிர்ப்புக்களும், தோல்விகளும் ஏற்பட்டாலும் தயங்காது செய்து முடிப்பேன் என்று உறுதிகூறுகிறேன்" என்று திரு. பாலச்சந்தர் கூறினுர்.

### அதிர்ச்சி

காகித உறைகளைப் பெற்ற கலைஞர்கள் பரபரப்புக் கொண்டு ஓடோடி வீடு சென்று உறைகளைப் பிரித்துப் பார்த்ததும் சொல்லொணு அதிர்ச்சியுற்றனர். கூடித உறைகளுக்குள்ளே பாலச்சந்தரின் கையொப்பமிட்ட "செக்" குகள் காணப்பட்டன. ஆனால் தொகை மட்டும் குறிப்பிடப்படவில்லை. "கலைஞர்களின் மதிப்பை என்னுல் ஊகிக்கமுடியாது, உங்களுக்கு நீங்கள் புரிந்த பணிக்கு எவ்வளவு தொகை சரியெனப் படுகிறதோ அதைக்குறித்து எடுத்துக் கொள்ளுங்கள்" என்று கருத்துத் தெரிவித்தார் பாலச்சந்தர்!

மவுண்ட் ரோட்டிலிருக்கும் "ஸ்டேட் பாங்க் ஓவ் இந்தியா" வுக்கான செக்குகள் அவை. இதுவரை அவை பணமாக மாற்றப்படவில்லை.

### ஜுபிடர் சோமு

இதே போன்ற வெற்றுச் "செக்"கை முன்பு இரண்டு முறை ஜுபிடர் பிக்சர்ஸ் உரிமையாளர். காலஞ்சென்ற திரு. சோமசுந்தரம் இரு கவிஞர்களுக்கு அளித்துள்ளார்.

மனோகரா படத்துக்கு "வசந்தவிழா" என்னும் பாடலையும், கதாப்பிரசங்கத்தையும் அமைத்த உடுமலை நாராயணகவிக்கும், "தங்கப் பதுமை" படத்தில் 'சிங்காரம் கெட்டுச் சிறைப் பட்டபாவிக்கு" என்ற பாடலை எழுதிய மறைந்த கவிஞர் பட்டுக்கோட்டை கலியாண சுந்தரத்துக்கும் வெறும் கையொப்பத்துடன் கூடிய செக்குகளை திரு. சோமசுந்தரம் முன்பு வழங்கியிருக்கிறார்.


# சினிமா (16) சங்கம்

திரைப்பட ரசிகர்களின் ரசிக ஞானத்தை வளர்ப்பதற்காகவும், அறிவு விருத்திகளுக்கானவற்றைச் செய்வதற்காகவும் சினிமா(16)சங்கம் ஆரம்பமாகிறது. சினிமா சம்பந்தமான சஞ்சிகைகளைக்கொண்ட நூல்நிலையம் ஒன்றை ஆரம்பிக்கவும், படங்களைப்பற்றிய பேச்சுக்கள், கருத்தரங்கங்கள் நடத்தவும் இச்சங்கம் முயலுமெனத் தெரிகிறது.

இச்சங்கத்தின் அமைப்புக் கூட்டம் ரேயல் கல்லூரி மண்டபத்தில் 29-9-62 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவிருக்கிறது. சிலோன் என்டர்டெயின்மென்ட் ஸ்தாபனத்தைச் சேர்ந்த திரு எஸ். என். பாலசுப்பிரமணியம், திரு. நீல் பெரேரா ஆகியோர் இச்சங்கத்தின் அமைப்பாளர்களாக வுள்ளனர்.

வெளிநாட்டுத் தூதுவராலயங்களுடன் தொடர்பு கொண்டு இச்சங்கத்திற்கு ஆகிய உதவிகளைக் கோரிய தன் பேரில், தங்கள் முழு ஆதரவையும் அளிப்பதாகக் கூறியுள்ளனர் என்று தெரிய வருகிறது.

சினிமா (16) சங்கத்தினையிட்டு மேலதிகயான தகவல்கள் அறிய விரும்புபவர்கள் கொள்ளுப்பிட்டியிலுள்ள, சிலோன் என்டர்டெயின் மென்ட்ஸ் ஸ்தாபனத்தைச்சேர்ந்த திரு. எஸ். என். பாலசுப்பிரமணியம் அவர்களுடன் தொடர்பு கொள்ளலாம்.


மொடர்ன் தியேட்டர்சார் தயாரிக்கும் "கவிதா"வில் கவர்ச்சியாகத் தோன்றும் ராஜசுலோசன.

# திலிப் குமாரின் 'கங்கா ஜமுனு' 24 லட்சம் ரூபாய் வருமானம்!

இந்தி நடிகர் திலிப் குமார் தயாரித்த சொந்தப்படம் தான் 'கங்கா ஜமுனு'. இப்படத்தில் அவருடன் தமிழ் நாட்டு நடிகை வைஜயந்திமாலாவும் சேர்ந்து நடித்தார்.

இப்படத்தை வெளிநாடுகளில் காட்டுவதன் மூலம், 24 லட்சம் ரூபாய் வருமானம் கிடைத்துள்ளது.

செக்கோஸ்லோவாக்கியாவில் நடைபெற்ற சர்வதேச பட விழாவில், 'கங்கா ஜமுனு'க்குப் [illegible] கிடைத்திருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.


விக்ரம் புரொடக்ஷன்சாரின் "தென்றல் வீசும்" படத்தில் கல்யாண் குமார்.

# நவராத்திரியும் சிவாஜியும்

## ஒன்பது இரவுகளில் ஒன்பது வேடங்கள்

தமிழகத்தில் நவராத்திரி என்றுல் ஒரே குஷி தான். குழந்தைகளுக்குக் கொண்டாட்டம், வயோதிபர்களுக்குத் திண்டாட்டம். வீடுகளில் கொலுவைப்பார்கள். அழகான பொம்மைகள் அலங்காரமாக வைக்கப்படும். சங்கீதமும் நடனமும் ஒரே கும்மாளமாகத்தானிருக்கும். சின்னஞ்சிறுசுகளின் பாடு பெரும்பாடாகிவிடும். அவர்களுடைய கொட்டத்தை அடக்க முடியாமல் வயோதிபர்கள் திண்டாடாமல் வேறு என்னதான் செய்யமுடியும்.

இத்தகைய நவராத்திரிக்கும் சிவாஜி கணேசனுக்கும் என்ன பொருத்தம் என்று கேட்கிறீர்களா?

சிவாஜி வீட்டில் பெரிய கொலு வைப்பார்கள். சிவாஜியின் குழந்தைகள் சாந்தி, தளபதி உட்பட பலரும் சந்தோஷமாக ஆடிப்பாடுவார்கள். சிவாஜியின் தாயாரும், மனைவியும், குடும்பத்தின் ஏனையோரும்கூட ஒரே குதூகலத்தில் மிதப்பார்கள்.

ஆனுல் அத்துடன் முடிந்துவிடவில்லை.

லட்சுமி பிக்சர்ஸார் "நவராத்திரி" என்ற கதையை படமாக்கப் போகிறுர்கள். அப்படத்தில் பிரதானமான பாகத்தில் சிவாஜி கணேசன் தோன்றப் போகிறுர்.

இப்படத்தின்திரைக்கதை வசனம் டைரக்ஷன் ஆகிய பொறுப்புகளை ஏ.பி. நாகராஜன் ஏற்றுள்ளார.

### ஒன்பது இரவுகளில்... ஒன்பது வேடங்கள்

சிவாஜி கணேசன் நவரசங்களையும் வெளியிடக்கூடிய வகையில் 'நவராத்திரி'யில் தோன்றுவார். வீட்டை விட்டு ஓடிப்போகும் ஒரு பெண், ஒன்பது நாட்களும் ஒன்பது வகைக் குணங்களுள்ள அற்புதராஜன், அதர்மன், கருணுகரன், கோவன், சாந்தப்பன், வீரன், நோயாளன், சிங்காரன், ஆனந்தன் ஆகிய ஒன்பது பேரைச் சந்திக்கிருள். ஒவ்வொருவனும் முறையே அற்புதம், அச்சம், கருணை, கோபம், சாந்தம், வீரம், அருவருப்பு, சிங்காரம், பெருநகை ஆகிய ஒன்பது குணமுடையவர்கள். இத்தகைய குணசித்திரப் பாகங்கள் முழுவதையும் சிவாஜி கணேசனே ஏற்றுள்ளார். வீட்டை விட்டோடும் பெண்ணுக சாவித்திரி தோன்றுகிறுர்.

மிக்க குறுகிய காலத்திற்குள் இப்படத்தைத் தயாரித்துத் திரையிட லட்சுமி பிக்சர்ஸ் ஸ்தாபனத்தார் திட்டமிட்டுள்ளனராம்.


"அழகு நிலா"வில் என்னைச் சந்தியுங்கள் என்கிறுர் மாலினி.

# 'மந்திரவாதி' சாமிநாதன் மறைந்தார்

சினிமா நடிகர் எம். ஆர். சாமிநாதனைத் தெரியாத சினிமா ரசிகர்கள் இருக்க மாட்டார்கள். மந்திரவாதியாக நடிப்பதில் பெயர் பெற்றவர் சாமிநாதன். அவர் சென்ற வாரம் காலஞ்சென்று விட்டார்.


ஆயிரம் தலை வாங்கி அபூர்வ சிந்தாமணி, ராஜகுமாரி ஆகிய படங்களில் மந்திரவாதியாக நடித்துப் புகழ் அடைந்தார். அதைத் தொடர்ந்து பல படங்களில் மந்திரவாதி வேடம் ஏற்று நடித்தார்.

கண்ணகி, பானை பிடித்தவள் பாக்கியசாலி முதலிய படங்களிலும் அவர் நடித்து இருந்தார்.


இறக்கும் பொழுது சாமிநாதனுக்கு வயது 57.

# தேவரும் எம். ஜி. ஆரும்

தேவர் பிலிம்ஸ் ஒன்றன்பின் ஒன்றுக 100 நாட்களுக்கு மேல் ஓடும் வெற்றிப் படங்களை எம். ஜி. ஆர். சரோஜாதேவி ஜோடியுடன் எடுத்து வருகிறுர். இப்படங்கள் எம். ஜி. ஆர். ரிலீசாக வெளிவருகின்றன. இவற்றில் முதற் படம் தாய் சொல்லைத் தட்டாதே.


ஓரவிழிப் பார்வையும் கோலக் குறு நகையும் சிந்தி நிற்கும் குமரிதான் குசலகுமாரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாவையே பால்வடியும் உன் வதனம் "பார்த்தால் பசிதீரும்" என்பார். வேதனையைக் காட்டி என்மனதை வேக வைப்பதும் ஏனோ?

சினிமாஸ் திரைகளுக்கு விரைவில் வருகிறது.
ஏ. வி. எம்மின் "பார்த்தால் பசிதீரும்"

கடிதக் கட்டுரை

# அன்னைத் தமிழ் பூவிழந்தாள் பொட்டிழந்தாள் புகழிழந்தாள்

## இந்நிலையில் தன்னலங்கருதி சிங்களம் படிப்பதா?

அன்பின் அண்ணா!

உங்கள் கடிதம்: என் இதயத்தில் வேல் கொண்டு சொருகியதால் ஏற்பட்ட வேதனையைப் போலாக்கி விட்டது. இன்று நம்மினம் இருக்கும் நிலையில் நீங்கள் இப்படி எழுதிவிட்டீர்களே! இளையவன் நான் என் இதயத்தில் கிளர்ந்ததை எழுதாமல் என்னால் இருக்கமுடியாது போய்விட்டது. இத்துடன் எம் உறவு அற்றுப் போனாலும் போகட்டும். 30 லட்சம் மக்களைவிட உன் உறவு அவ்வளவு பெரிதல்ல. "சிங்களம் படியடா தம்பி" என்று எழுதியிருக்கிறாயே, எவ்வளவு நெஞ்சழுத்தம் உனக்கு. சேவலம் அழிந்து போகும் பணத்திற்காக, நிலையற்ற பதவிக்காக, அன்னைத் தமிழை விற்கப் பார்க்கிறாயே. நீ வாழவிரும்புகிறாய்; சுயநலமியாக வாழ்ந்து கொள், வஞ்சகப்பட்டியலில் முதலிடம் பெற்று.

தள்ளாத வயதிலும் தமிழுக்காக- தலைகொடுக்க முன்வந்திருக்கும் தங்கக் கிழவனைப் பார்த்தாயா? அவருக்கேன் இந்த வேலை. அரசாண்டநாம்- ஆளப்படுவோராக- அநியாய ஆட்சியாளரால் அவலநிலை அடைந்துள்ளோம். அன்னைத் தமிழ் அழகிழந்தாள்- பூவிழந்தாள், பொட்டிழந்தாள்- புகழிழந்தாள். நாம் அடக்குமுறை கட்சாளானோம், நலிந்தோம் மெலிந்தோம், வன்மையிழந்தோம், ஆண்மையிழந்தோம், செயலிழந்து கிடக்கிறோம், எம்உடன் மலையக சோதரர்கள் சிதறிக் கிடக்கின்றனர். இந்த இழி நிலை மாற- எம்மவரை ஒன்றுபடுத்த- ஓர் புதிய சகாப்தம் உருவாக்க- பிரிவினையில் ஒற்றுமைகாண- சமஷ்டி முறையில் அமைந்த கூட்டாட்சி நிறுவ- அல்லும் பகலும் அயராது பாடுபட்டு வருகிறார். கல்லெறிக் குள்ளானார்- கண்டனக் குரலுக்குள்ளானார்- யாருக்காக?

கடந்த கலவரங்களைச் சற்றுத் திரும்பிப்பார் அண்ணா திரும்பிப்பார். கற்பிழந்த கன்னியர்கள் — கணவனை யிழந்த பெண்கள்- சேய்களை யிழந்த தாய்மார்- பொருளிழந்தோர் இன்னும் எத்தனையோ! திரும்பிப்பாரண்ணா! யாரால் இவ்வளவு கெடுதி ஏற்பட்டது? நீ பதவிக்காகப் படிக்கிறாயே அந்தச் சிங்களத்தால்- அந்தச் சிங்கள வெறிபிடித்த- சித்தங்கலங்கிய பேயரசால்.

அண்ணா!

கடந்தகால சிங்கள வெறியாட்டங்களினால் கணவனையிழந்து, கையிற் குழந்தையுடன் கண்ணீரும் கம்பலையுமாய் கதிகலங்கி நிற்கும் அந்தக் கன்னித்தமிழ் கன்னியர்கள் என்முன் காட்சியளிக்கிறார்கள்- விதவைக் கோலத்துடன்; இவர்கள் துயரைத் துடைக்க வேண்டுமானால்- காலிமுகத்திடலிலும், சத்தியாக்கிரகத்தின் போதும் ஓடிய குருதியைத் துடைக்க வேண்டுமானால்- தமிழரசின் தார்மீகக் கொள்கை வெற்றியுற வேண்டுமானால் படிக்காதே அண்ணா சிங்களம். செந்தமிழர்களுடன்சேர்ந்து அறப்போரில் குதி.

சென்ற கிழமை ஓர் சோதரன் கட்டுரை மூலம் சிங்களம் படிப்பதை- அதனால் ஏற்படும் தீங்கை அழகுறத் தீட்டியிருந்தானே, அதைப் பார்த்த பிறகுமா இம்மடலை எனக்கெழுதியுள்ளாய். இறுதியாக அண்ணா நீ என் உடன் பிறப்பென்றபடியாலும் உன்னைப் போல் சிங்களம் படிக்கும் தமிழ்பேசும் மக்கள் என் சோதரர்கள் என்பதாலும்ஒன்று கூறுகிறேன். பணஉயர்வை வேண்டி சிங்களம் படியாதீர்கள். படித்தாலும் ஆகும் பயன் ஒன்றுமில்லை. உரிமை பெற உயிரைத் துறக்கவுந் தயார் எனச் சபதமெடுங்கள். பிளவுபட்ட ஈழமோ-கூறு போடப்பட்டுள்ள இலங்கையோ நாம் கேட்கவில்லை. மக்கள் விரும்புவது நல்லாட்சி, அதற்காக நாம் கோருகிறோம் கூட்டாட்சி- உன் மடலை எதிர்பார்த்து விடை பெறுகிறேன்.

வாழ்க தமிழ்

"மூத்தூர் அன்ரன்"

## காதலனுடன்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

யத்தைப் போற்றுங்கள். அப்பாடல் இதோ:—

"ஞாயிறு காணாத மாண்
நிழற்படிஇய,
மலைமுதல் சிறுநெறி மணல்
மிகத்தாஅய்,
தண்மழை தலையவாகுக—
நம் நீத்துச்
சுடர்வாய் நெடுவேற் காளை
[...]
மடமா அரிவை போகிய
சுரனே!"
—கயமனார்

## அன்பு மகள்...

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

கச்சேரி வழக்கறிஞர் ஆசீர்வாதம் அவர்களும், வந்தார்கள் கதாகி—. 29-4-61 வெசாக் தினமல்லவா? நாம் பால்புக்கை என க் கூறும், 'கிரிபத்' உணவைக் காலையுணவாகத் தந்தனர்.

நேற்று நானும், பருத்தித்துறைப் பிரதிநிதி துரைரத்தினமும், 'உடுவில் பிரதிநிதி தர்மலிங்கமும், வவுனியா உதவித்தலைவர் சுப்பிரமணியமும், வவுனியா கைலாயபிள்ளையும், கரிகாலனும் சம்பாஷித்துக் கொண்டிருக்கையில், ஒரு பிரச்சினை உண்டாயது. தமிழ்பேசும் மக்கள் மத்தியிலும் உள்ள பிரச்சினையே அது. அப்பிரச்சினையை நாளை வரைவேன். உன் அம்மாவை தினமும் கடிதம் எழுதச்சொல்!

எங்கே...... டாட்டா!

அன்புத்தந்தை
புதுமைலோலன்.

(தொடரும்)

## சங்கப்பலகை

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர் அம்சங்கள் அதிகமாகி விட்டன என்றே கூற வேண்டும்.

சிறிய கையடக்கமான அளவில் வெளிவருவது, அழகாக இருக்கிறது.

மேலும் ஒரு இளம் பெண்மணி இப்படியான ஒரு சிறந்தபத்திரிகையை வெளியிடுவதை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. அவரது துணிச்சலும் நம்பிக்கையும் வரவேற்கத்தக்கவை. தொடர்ந்து முயற்சி செய்தால் 'செந்தாமரைக்கு' நல்ல எதிர்காலம் உண்டு.

—சங்கர்.

## அமரதீபம்

ஆசிரியர்: பி. எஸ். லிங்கம்
வெளியீடு: ஆர். ஜே. ஆர். பிரிண்டர்ஸ்.
விலை: சதம் 15

அமரதீபம் செப்டம்பர் இதழ் கிடைக்கப்பெற்றோம். ஆறு பக்கங்களுடன் அழகான முறையில் வெளியாகியுள்ளது. கலியுகம் தரும் பதில் என்னும் கேள்வி பதில் பகுதி நன்றாக அமைந்துள்ளது. மனச்சுமை, துப்பறியும் திவாகரன் என்னும் இரு தொடர் அம்சங்கள் வெளியாகின்றன.

எழுத்துப் பிழைகள் பரவலாக மலிந்துள்ளன, வரும் இதழ்களில் கவனம் செலுத்தினால் தவிர்க்கலாம்.

கலைப் பகுதியில் படங்களைச் சிறிய அளவில் வெளியிட்டு, செய்திக்கு முக்கியத்துவம் கொடுத்தால் நன்று.

—சங்கர்.

# காணிகள் பற்றிய அறிவித்தல்கள்

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் 21.9.62ந் திகதி வர்த்தமானியில் (பகுதி III, பக்கம்-தமிழ் 575, ஆங்கிலம், 517) ஒரு காணிக் கச்சேரி அறிவித்தல் கொடுத்திருக்கிறார். காணியின் அட்டவணை பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| மாவட்டம் | : | மட்டக்களப்பு |
| காரியாதிகாரியின் பிரிவு | : | கோறளைப்பற்று |
| கிராமம் | : | கதிரவெளி |
| விஸ்திரணம் | : | 1000 ஏக்கர் |
| கொடுக்கப்படும் துண்டுகளின் விஸ்திரணம் | : | 25 ஏக்கர் |
| பிரயோசனம் | : | தென்னைக்குப்-பொருத்தம்; |

வருடமொன்றிற்கு, விவாகமாகாவிட்டால் ரூபாய் 12,000 மேற்படாததும், விவாகமாகினால் ரூபாய் 24,000 மேற்படாததுமான வருமானமுள்ள மத்திய வகுப்பினரிடமிருந்தே விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மட்டக்களப்பு மாவட்ட நிரந்தர வாசிகளுக்கு முதற் சலுகை கொடுக்கப்படும்.

விண்ணப்பங்கள் சேரவேண்டிய கடைசிநாள் 15.10.62 காணிக் கச்சேரி 22. 10. 62ந் திகதி காலை 9 மணியளவில் மட்டக்களப்புக் கச்சேரியில் நடைபெறும் மாதிரிப் படிவம் வர்த்தமானியில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

## வரண்ட வலயத்தில்

வரண்ட வலயத்தில் மிருக வளர்ப்புக்கும் உணவு வர்த்தகப் பயிர்ச் செய்கைக்குமாக காணி பராதீனப்படுத்தல்.

17. 8. 62ந் திகதி வர்த்தமானியின்படி மேற்குறிக்கப்பட்ட காணிகளுக்கு விண்ணப்பங்கள் காணிக் கொமிஷனரிடம் சேரவேண்டிய கடைசி நாள் 14. 9. 62 என்பது முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

கொடுக்கப்பட்ட தவணை போதாதென்றும் இன்னும் ஒரு மாதம் கொடுக்கவேண்டுமென்றும் காணிக் கொமிஷனருக்கு திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் விடுத்த வேண்டுகோளுக்குக் காணிக்கொமிஷனர் அனுப்பிய பதிலின் சாரம் வருமாறு:

"விண்ணப்பங்களை மட்டுப்படுத்துவதற்கே முடிவுதேதி குறிப்பிட்டபடியால் அத்தேதிக்குப் பிந்திய விண்ணப்பங்களை ஏற்க முடியாது.

இத் திட்டத்தின்கீழ் வளங்குறைந்த காணிகளே பராதீனப்படுத்தப்படும். ஆகையால் காணியின் நிலையையறிந்து அதற்கேற்ற முதலீடு செய்ய முன்வருபவர்களின் விண்ணப்பங்களை அவ்வவ் மாவட்ட அதிபர் ஏற்கக் கூடுமென்று கருதுகிறேன். வேறு மாவட்டங்களில் காணி கோரப்படும்பொழுதுதான் நான் தலையிடவேண்டும்.

வேண்டிய முதலீடு செய்ய விரும்புகிறவர்கள், இத்திட்டத்திற்கு வெளியால் நிலங்கள்பற்றி விசாரித்து முடிக்குரிய காணிச் சட்டத்தின்கீழ் குத்தகைக்கு காணிக் கமிஷனருக்கு விண்ணப்பிக்கலாம்.

இக்கடிதத்திற் குறிப்பிட்டபடி விண்ணப்பிக்க விரும்புவோர் காணிக் கமிஷனரிடம் விண்ணப்பிக்கலாம். குத்தகை வருடம் 99 மேற்படாது.

## நம்மிடை...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் என்று பாரதியார்அறை கூவி அழைக்கிறார். காதல் செய்தால் சாவு இல்லை. கவலை இல்லை. இதன் காரணத்தால் மரணம் பொய், என்று அன்று பாடினார் பாரதியார்.

ஆனால் இன்று நம்முன்னே நடைபெறும் காதல்கள் செத்து மடிவதன் காரணமென்ன? முக்கிய காரணமாக விளங்குவது—காதலுக்கு முட்டுக் கட்டையாக இருப்பது—சாதிப் பிளவே.

எனவே தொழில்களினால் ஏற்பட்ட எமது சாதிப்பிளவைத் தொழில்களினுற் போக்கடிப்பதே சாலச் சிறந்தது.

சில தொழில்களைக் குறிப்பிட்ட ஒரு சாராருக்கு மட்டும் என்று ஒதுக்கித் தள்ளாது, "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்ற பாரதியாரின் குரலைப் பின்பற்றி தொழிலுக்கு மகத்துவம் கொடுத்து எத் தொழிலையும் செய்ய நாம் முன் வர வேண்டும்.

எத்தொழிலும் உயர்ந்த தொழில் எனக் கருதி நாம் அவ்வவ் தொழில்களைப் பின்பற்றினால் எம்சமூகத்தினிடையே உள்ள சாதிப் பிளவுகள் அறவே நீங்கி, நம் சமூகம் ஓர் ஒப்பற்ற சமூகமாக மேலும் செழிப்புறும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.






பணக்காரன் முதல் பாட்டாளி வரை
எல்லோரும் புகைப்பது
கமலா பீடி
ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்
கமலா ஸ்டோர்ஸ்,
[...] தாமரை
நிர். 15, செட்டியார் தெரு, கொழும்பு-11.
தொலைபேசி 3597—6522


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




குட்டிக் கதை

# வாழ்வு

"மாவிட்டபுர ஆனந்தன்"

பல வருடங்களாக வளர்ந்து படர்ந்திருந்தது அந்த ஆலமரம். எத்தனை வருடங்களாக உயிரினங்களுக்கு உதவி செய்வதில் திருப்தியடைந்துவாழ்கிறது அது!

அந்த ஆலமரத்தின் அருகிலே தென்னை மரம் ஒன்று முளைத்து வளர்ந்தது. அந்த மரத்தின் வளர்ச்சியின் விரைவுதான் என்னே! சில வருடங்களுக்குள் அது பெரிய மரமாகி கருமுகில்களை அணைத்து நின்றது.

"ஆலமரமே! என்னைப் பார். எத்தனை வருடங்களாக ஒரேயளவு உயரத்திலே நீ இருக்கிறாய்? சீ! உனக்கு வெட்கமில்லையா? உனக்கு எத்தனை வருடங்களுக்குப் பின் நான் பிறந்தேன்? எனது உயரத்தைப் பார்!"—தென்னை மரம் ஆலமரத்தைக்கேலி செய்தது.

தென்னையின் அறியாமையைக் கண்டு தனக்குள்ளே சிரித்துக் கொண்டது ஆலமரம்.

வருடங்கள் சென்றன.

வானளாவ வளர்ந்திருந்த தென்னையில் பல கோணல்கள் ஏற்படலாயின. மொத்தமான ஆலமரத்தைக் குடைந்து கூடு ஏற்படுத்த முடியாமற் போகவே, பறவைகள் தென்னை மரத்தைக் குடைந்தன. தென்னையிலே நாற்புறமும் ஓட்டைகள் உருவாயின. புருவுக்கும், கிளிகளுக்கும் தென்னை மரம் உறைவிடமாயிற்று. கறையான்கள் தென்னம் வேரை உண்பதில் இன்பம் கண்டன.

பாவம்! தென்னை மரம் வேரோடு சாய்ந்தது! அப்பொழுதுதான் அதற்கு அறிவு வந்தது. "அந்த ஆலமரம் எத்தனை வருடங்களாக இருக்கிறது? என்னால் சில வருடங்களுக்குக் கூடச் சீவிக்க முடியவில்லையே!"—தென்னை வருந்தியது.

வேரோடு சாய்ந்த தென்னையை ஆலமரம் தாங்கிக் கொண்டது. நான் கேலி செய்ததையும் பொருட்படுத்தாமல், தன்னைத் தரையில் விழாது தாங்கிக் கொண்ட ஆலமரத்தை எண்ணி வியந்தது—தென்னை மரம்!

## மனிதனும் விஞ்ஞானமும்

(வ. அருணேந்திரன், காத்தான்குடி)

இன்று உலகம் முன்னேறிக் கொண்டிருக்கிறது. முயல் வேகத்திலோ ஆமை வேகத்திலோ அல்ல. இன்றைய உலகம் மின்சார வேகத்தில் முன்னேறிக் கொண்டிருக்கிறது. இதற்கு மூலகாரணம் விஞ்ஞானமாகும்.

மிருகத்தோடு மிருகமாய், பரந்த அறிவற்றபாமரராய், கிணற்றுத் தவளையாய் வாழ்ந்த மனித இனத்தை அறிவுச்சுடர் வீசும் அணையா ஜோதியாக்கிய பெருமை விஞ்ஞானத்தையே சாரும்.

வானவெளியில் வட்டமிடும் வானம்பாடிகளைப் போல நாமும் வானவெளியில் வட்டமிட முடியவில்லையே என்று பெருமூச்சு விட்ட மனிதனை வானம்பாடிகளைப் போல வலம்வர வைத்த பெருமை விஞ்ஞானத்தையே சாரும்.

மனிதன் என்று சிந்திக்க முயன்றானோ அன்றிலிருந்தே சீர்திருந்த ஆரம்பித்தான். ஒரு பொருளை எடுத்துக் கொண்டால் ஏன், எப்படி, எதனால் என வினாக்களின் மூலம் சிந்தனையைச் செலுத்தினான். அதன் முடிவு, மனிதனின் அறிவு வளர்ச்சியடைந்தது.

விஞ்ஞானம் என்ற விந்தையில் உலகத்தையமைத்தான். உலகில் மறைந்திருந்த உண்மைகளைக்கண்டு பிடித்தான். அதை உலக மக்களுக்கு உணர்த்தினான். ஆங்காங்கே பல இயந்திரங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. ஆக்கவேலைகளையும் இயக்க வேலைகளையும் கண்டுபிடித்தான் மனிதன்.

மின்சார வேகத்தில் உலகை முன்னேற்றிவிட்ட பெருமை விஞ்ஞானத்தையே சாரும்.

### மணற் கிணறு

கணடாவில் நீரூற்றுப் போல மணல் பெருகி வரும் அபூர்வ கிணறொன்று இருக்கிறது. இதன் ஆரம்பம் நூறு மைல்களுக்கு அப்பால் அமைந்திருக்கிறது.

## கலப்பு

(தி. வருணகுலசிங்கம், தெல்லிப்பளை)

பாலில் தண்ணீர் கலந்தால் பால் கெட்டுவிடும். மனிதனிடம் தீய பண்புகள் கலந்தால் அவன் கெட்டவனாகிறான். கலப்பினால் தீமைகளே அநேகமாக விளையும். ஆங்கிலத்தில் பிற மொழிச் சொற்கள் கலந்தன; அம்மொழிக்கு அழகைக் கொடுத்தன. காரணம் அஃது தனித்து இயங்க முடியாத ஒரு மொழி. ஆனால் தமிழ் தூய்மையானது; இனிமையானது; தனித்து எப்பொழுதும் கன்னியாக இருக்கக் கூடியது.

ஒரு தாய் பல பிள்ளைகளைப் பெறுதல் நன்றன்று. வடமொழி பல பிள்ளைகளைப் பெற்றாள். அவ்வாறே தமிழ்த் தாயும் சில பிள்ளைகளை ஈன்றாள். பல மொழிகளைப் பெற்ற வடமொழி இறந்துவிட்டாள். ஆனால் தமிழ் இன்றும் கன்னியாக [illegible] மில் கலப்பு ஏற்பட்டால், பல மொழிகள் தமிழில் இருந்து பிறக்கலாம். வடமொழிக்கு ஏற்பட்டது தமிழுக்கும் ஏற்படலாம். ஆதலால் கலப்பு வேண்டாம். சொல்லாக்கம் செய்யும் மொழி வன்மை வேண்டும். தூய தமிழ் நடை வேண்டும்.

### மாபெரும் கால்வாய்

சுமார் ஆறு நூற்றாண்டுகளுக்கு முன்பு சீனாவில் அமைக்கப்பட்டிருந்த, கப்பல் செல்லக்கூடிய கால்வாயின் நீளம் 2100 மைல்களாகும்.

## பச்சைக்கிளி தம்பி பச்சைக்கிளி

(புவனேஸ்வரி அருளம்பலம், கல்வயல்)

பச்சைக்கிளி தம்பி பச்சைக்கிளி—தன்
இச்சையாய் வாழ்ந்திடும் பச்சைக்கிளி!

வானத்தில் பறந்தெங்கும் பவனிவரும்—தம்பி
வண்ணக் கனிவகை தேடிவரும்!
கானகம் சோலைகள் பாடிவரும்—தம்பி
காயையும் கனியையும் கொத்திவரும்!
—பச்சைக்கிளி—

பாடிப் பறந்தது களித்திருக்கும்—தம்பி
பாடுபட்டே தன் உயிர்வளர்க்கும்!
நாடியே பிறரிடம் கெஞ்சிடாது—தம்பி
நாளுமே சோம்பலில் ஆழ்ந்திடாது!
—பச்சைக்கிளி—

தேடியே இனத்துடன் கூடுமடா—தம்பி
தள்ளியே சுற்றத்தை வெறுத்திடாது!
ஆடியே கூட்டமாய் ஓடிவரும்—தம்பி
அன்புடன் பண்பினைக் காட்டுமடா!
—பச்சைக்கிளி—

அழகுறு மழலையும் பேசுமடா—தன்
சிமிழினைப் போல்சிறு வாயாலே!
எழிலுறு குறும்புகள் காட்டுமடா—தம்பி
பழுதறப் பலமொழி பேசுமடா!
—பச்சைக்கிளி—

பவளத்தைப் போலெழில் அதரமடா—தம்பி
பச்சை மரகத மேனியிலே
தவழ்ந்திடும் அழகுறு வர்ணமடா—தம்பி
ஆண்டவன் அற்புதப் படைப்பிதடா!
—பச்சைக்கிளி—

தேடியே பிடித்ததைக் கூண்டினிலே—தம்பி
சிறையது வைத்திடல் பாவமடா
வாடியே தன்னினம் இழந்திடுமே—தம்பி
வாழ்வினில் பெருந்துயர் அடைந்திடுமே!
—பச்சைக்கிளி—

படிப்பினைக் கொடுத்திடும் பச்சைக்கிளி—நீ
பார்த்ததைக் கற்றிட வேண்டுமடா
பிடித்ததைக் கூண்டினில் அடைத்திடாதே—தம்பி
பாபத்தைச் செய்திடத் துணிந்திடாதே!
—பச்சைக்கிளி—

### பூமிக்குள் நகர்

'ரியூனிஸ்ட்' என்னும் நகரில் பூமிக்குள் 3000 மனிதர்கள் வசிக்கும் நகரொன்று இருக்கிறது. மேலே புல்தரை. நிலத்திற்குக் கீழே நகர்.

## தமிழ் மொழியின் சிறப்பு

(தி. மதுரம், அளவெட்டி.)

உலகத்திலே தோன்றிய பல மொழிகளில் தமிழ் மொழியும் ஓர் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. பல பெரியார்கள் அதற்குச் சான்றாகின்றார்கள். "தமிழ்" என்ற சொல்லின் கருத்தே இனிமையெனப் பொருள்படும் அத்தகைய தமிழைக் கற்கும் போது நாம் பெருமைப் படுவதில் வியப்பில்லை.

தமிழ்த்தாய் ஈன்றெடுத்த தவப் புதல்வர் பாரதியார். தமிழருக்குத் தனிப் பெரும் செல்வத்தைத் தந்தார். அமிழ்தினுமினிய அவரது புதுமைக் கவிதைகள் எங்கள் இதயத்தில் இனிமையை யூட்டுகின்றன.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்" என்ற கவிதை எங்களுக்கு உற்சாகமூட்டுகிறது.


தமிழ்த்தாயின் அரும் புதல்வர்களில் கம்பனைப் போலவும், வள்ளுவனைப் போலவும் இளங்கோவடிகளைப் போலவும் இவ்வுலகில் எங்கேயும் காணப்படவில்லை. இவர்கள் பிறந்த இனம் எங்களினம்! இவர்கள் மொழி எங்கள்மொழி! இவர்களது படைப்புக்களும் கற்பனைகளும் தமிழ் மொழிக்குத் தனிப் பெரும் சிறப்பைக்கொடுக்கின்றன. இஃது இவ்வாறிருக்க எம்மிற் சிலர் தமிழைப் புறக்கணிப்பது வருந்தத்தக்கதே! ஆங்கில மோகம் அவர்களைப் பற்றிப் பிடிக்கிறது. செந்தமிழைக் கொடுந் தமிழாக்கின்றனர்.

அவர்கள் ஆங்கிலம் படிக்கலாம் அதனால் அவர்கள் வாழ்க்கைத் தரம் உயரலாம். ஆனால், செந்தமிழைப் புறக்கணிக்க வேண்டாம்.

தமிழராகிய நாமே அதன் சிறப்புக்களை அறியாமல் இருப்பதானால், மற்றவர்கள் எப்படி அறிய முடியும்? தமிழ்ச் செய்யுளின் இனிமையும், தமிழ்ப் பேச்சின் உறுதியும், தமிழ் எழுத்தின் வடிவும் எங்களால் போற்றப்பட்டால் தான் மற்றவர்களும் அதை விரும்புவார்கள். எனவே தமிழைப் பற்றிய சிறப்புக்கள் எவ்வளவோ உண்டு. தமிழைப் புறக்கணித்தால் தமிழ் செத்துவிடும். ஆகவே, அதனை அழிய விடாமல் அதற்குப் புத்துயிர் அளிப்பது தமிழ்த் தாயின் புதல்வராகிய எங்கள் கடமை என்பதை மறக்கக் கூடாது.

### நவீன வேலி

அமெரிக்காவில் மாடுகள் வளர்க்கும் சங்கமொன்று 'மெக்சிக்கன்' எல்லையில் அமைந்துள்ள வேலியின் நீளம் 75 மைல்களாகும்.



கிழக்காபிரிக்காவிலுள்ள, பிரிட்டிஷ் ஆதிக்கத்துக்குட்பட்ட உகாண்டா, ஒக்டோபர் மாதம் 9-ம் திகதியன்று பூரண சுதந்திரம் பெறுகின்றது. அங்கு செம்பு உற்பத்தி அதிகம். மேலே நீங்கள் காண்பது, செம்புச் சுரங்கமொன்று, பாறை முகத்தில், யந்திர மூலம் குடையப்படுவதையே.

# கல்வியே கருந்தனம்

அன்புள்ள மருமக்களே!

வணக்கம். இப் பகுதியில் புதிய அம்சம் ஒன்று ஆரம்பிப்பதாகச் சென்ற வாரம் நான் கூறியிருந்தேனல்லவா? அது என்ன தெரியுமா? நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் கிராமத்தைப் பற்றிச் சுருக்கமாகவும், தெளிவாகவும் சிறிய கட்டுரை ஒன்று எழுதி அனுப்ப வேண்டும். 'எனது கிராமம்' என்ற தலைப்பில், அக் கட்டுரைகள் தொடர்ந்து வெளியாகும். எங்கே எழுதுங்கள் பார்க்கலாம்!

மருமகன் அன்ரனி பெர்னாண்டோ புதுமையான செய்திகள் சிலவற்றைச் சேகரித்து மாமாவுக்கு அனுப்பியுள்ளார். இம்முறை மணற் கிணறு, நவீன வேலி......ஆகியன வெளியாகின்றன. இச் செய்திகள் தொடர்ந்து வாரா வாரம் வெளியாகும்.

மன்னார் மாநாட்டு மலர் கட்டுரை, கவிதைப் பரிசுகள் பெற்ற, முறையே செல்வி சு. கௌரிமணிதேவி, திருகோணமலை, செல்வன் எஸ். ஏ. கையூம், பதுளை, ஆகிய இருவருக்கும் உரிய பரிசுகள் சென்ற வாரம் அனுப்பப்பட்டுள்ளன.

வணக்கம்.

உங்கள் அன்பின்,

வளர்மதி மாமா

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

## மட்டக்களப்பில் பாரதி விழா

'பாரதி நினைவு தின விழா' என்பதை மாற்றி பாரதி விழா என்று சமீபத்தில் மட்டக்களப்பு தமிழ் எழுத்தாளர் சங்கம் கொண்டாடியது மிகப் பொருத்தமானதென்றே கூற வேண்டும். தமிழே தனது பேச்சாக, மூச்சாகக் கொண்டு வாழ்ந்த பாரதியின் நினைவுக்கு எடுக்கும் விழாவுக்கு இதைவிடப் பொருத்தமான பெயர் இருக்க முடியாது.

கடந்த 19-9-62-ல் மட்டக்களப்பு நகரமண்டபத்தில் மட்டக்களப்புத் தமிழ் எழுத்தாளர் சங்கம் நடத்திய பாரதி விழா ஒரு முத்தமிழ் விழாவாக அமைந்திருந்தது. இன்னும் விசேஷம் என்ன வென்ருல், பெண்களின் உரிமைகளுக்காகவும் சுதந்திரத்துக்காகவும், உன்னத ஸ்தானத்துக்காகவும் பாடுபட்ட புதுமைக் கவிஞன் பாரதியின் நினைவுக்கு எடுக்கப்பட்ட இவ் விழாவுக்கு ஒரு பெண்மணியே தலைமை தாங்கினுர்.

விழாவுக்குத் தலைமை தாங்கிய பண்டிதை கங்கேஸ்வரி கந்தையா அவர்கள் பேசுகையில் 'ஆணும் பெண்ணும் நிகரெனவே கொள்வதால், அறிவில் ஓங்கி இவ் வையகம் தழைக்குமாம்'' என்று பாடிய பாரதி பெண்களுக்காக ஆற்றிய சேவையை விரிவாகக் குறிப்பிட்டு, பாரதி கண்ட புதுமைப் பெண்ணுக்கேற்ற பண்புகளுடன் நம் பெண்மணிகள் வாழ்வது ஒன்றே பாரதிக்கு ஏற்ற கெளரவமாக இருக்கும் என்று கூறினுர்.

"பாரதி வந்த பாதை" என்ற தலைப்பில் வித்துவான் சா. இ. கமலநாதன் அவர்கள் அருமையான தொரு ஆராய்ச்சியையே நிகழ்த்தி விட்டார். "கம்பன், வள்ளுவன், இளங்கோ ஆகிய முப் பெரும் புலவர்கள், தமிழில் மும்மணிகளாகத் திகழ்ந்தாலும், இன்று தமிழ் மக்கள் பாரதியைப் போற்றும் அளவு, இந்த முப் பெரும் புலவர்களுக்குக் கிடைக்கக் கூடிய போற்றுதலையும் விட அதிகமானதாகவே இருக்கிறது. அதன் காரணம், வழி, வழி வந்த கபிஞர் மரபில், பாரதி ஒரு புதுமையைப் புகுத்தியது தான். பழங்காலக் கவிஞர்கள் காதலையும் வீரத்தையும் பாடினுர்கள். பாரதி அத்துடன் நில்லாது, சமூக சீர்திருத்தத்தையும் கவிதையில் ஏற்றிப் பாடினுன்.'' என்று அவர் கூறினுர்.

"பாரதி விழாவில் ஒரு பாதிரி பேசுகிறேன்'' என்று சபையோரின் கரகோஷத்துக்கிடையே பேச்சை ஆரம்பித்த வணக்கத்துக்குரிய எம். ஏ. இரத்தினராஜா அவர்கள் "பாரதி கண்ட சமுதாயம்'' என்ற தலைப்பில், தமிழர்களின் இன்றைய சோம்பேறித்தனத்தையும், பொருளாதாரப் பிற்போக்கையும் நாசுக்காக எடுத்துக் காட்டினுர். தமிழர்கள் இன்றுள்ள இக்கட்டான நிலையில் பாரதியின் தாரக மந்திரமான "உழைப்பு, உழைப்பு, உழைப்பு'' என்ற போதனையைச் செயலில் கொண்டாலன்றி, தமிழர்கள் ஒரு போதும் முன்னேற முடியாது, பொருளாதார சுதந்திரம் பெற்று சுபீட்சமாக வாழ முடியாது என்பதை அவர் மிகவும் தெளிவாக எடுத்துரைத்தார்.

செல்வி கண்மணி அருணுசலம் "பெண்மை போற்றிய பெருந்தகை'' என்ற தலைப்பில் பெண்களுக்கேற்ற வகையில் ஒரு அரிய சொல் விருந்தை அளித்தார்.

இவ்விழாவில், திரு. முருகப்பாவின் பாரதி கீதமும், செல்விகள் ஜெயீஸ்வரி, விஜயலட்சுமி ஆகியோரின் நடன விருந்தும் செல்விகள் நளினி ராமச்சந்திரன், நிர்மலா கனகசபாபதி ஆகியோரின் வயலின் இசையும், செல்விகள் நேசமணி, தெரேசா, சபியா ஆகியோரின் தமிழ் வாழ்த்தும், கண்ணுக்கும், கருத்துக்கும், செவிக்கும் இனிய விருந்தாக அமைந்திருந்தன. விழாவின் சிகரமாக அமைந்தது மாஸ்டர் சிவலிங்கம் குழுவினரின் "வருகிருர் பாரதி" என்ற வில்லுப் பாட்டு நிகழ்ச்சி.

விழாவின் ஆரம்பத்தில் வரவேற்புரை கூறிய ம. த. எ. சங்கச் செயலாளர் 'அன்பு மணி' பாரதி விழாவை ஏன் கொண்டாட வேண்டுமென்பதை விளக்கி, பொருளாதாரக் கவிஞனை பாரதியின் பாதையில் திரும்பி உழைப்பு, விடா முயற்சி தன்னம்பிக்கை ஆகிய மூன்று படைக் கலங்களுடனும் தமிழர் முன்னேற வேண்டும் என்று குறிப்பிட்டார்.

கவிஞர்-திமிலை மகாலிங்கம் அவர்களின் நன்றியுரையுடன் விழா இனிது முடிந்தது.

---

### இளங் கவிஞருக்கு "உதய கவி'' பட்டமளிப்பு

15-9-62-ல் அக்கரைப்பற்று பாரதி மன்றத்தில் நடைபெற்ற பாரதி விழாவில் "பரதி நாற்பது'' பாடிய இளங் கவிஞர் திரு. ஐ. பூபாலப்பிள்ளைக்கு "உதய கவி'' எனும் பட்டம் சூட்டப்பட்டது. விழாவுக்குத் தலைமை தாங்கிய துறவி ஸ்ரீமத் சுவாமி நடராஜானந்தா'' பட்டமளித்துப் பாராட்டுப் பத்திரமும் வளங்கினுர்.

---

### பாரதி விழா

செந்தமிழ் வளர்ச்சி மன்றத்தின் பாரதி விழா கிரிலப்பனைத் தமிழ்ப்பாடசாலை மண்டபத்தில் 15-9-62 சனிக்கிழமை மாலை நடைபெற்றது. மன்றத் தலைவர் திரு. டேவிற் ராஸ்சயா தலைமை வகித்தார்.

செந்தமிழ் வளர்ச்சி மன்ற திருக்குறள் பாடசாலை மாணவிகளான செல்வியர் கமலாச்சி, தெரேசா, ஜெயலட்சுமி, பிரேமாவதி, விமலகுமாரி ஆகியோர் பாரதி பாடல்கள் பாடி விழாவைத் தொடக்கி வைத்தனர்.

திருவாளர்கள்: மு. இராசரட்ணம், அந்தனி ஜீவா, அன்ரனி பெர்னுண்டோ ஆகியோர் உரைநிகழ்த்தினர். மன்ற இணைச் செயலாளர் திரு. ஞா. சாமித்தம்பியின் நன்றியுடையோடு விழா முடிவுற்றது.

---

### பிரதமர் சமாதிக்கு நன்கொடை

இலங்கைப் பிரதமர் திரு. பண்டாரநாயக்கா அவர்கள் அகால மரணம் அடைந்தது இலங்கை வாழ்மக்களுக்குப் பெரும் துர்ப்பாக்கியம் என்றே கூறவேண்டும். அந்நியர் ஆதிக்கத்தில் மூழ்கியிருந்த இலங்கை வாழ்மக்களுக்குச் சுதந்திர உணர்ச்சியூட்டி சிங்களம் பேசும் மக்களையும் தமிழ்பேசும் மக்களையும் தன்மானத்துடன் வாழவைத்த பெருமை திரு. பண்டாரநாயக்கா அவர்களுக்கே உரிமையானது. அன்னுரைக் கெளரவிக்கும் முகமாக சாம்பல்தீவுக் கிராமச் சபை நிதியில் இருந்து ரூபா ஐம்பது (ரூபா 50/-) பிரதமர் சமாதிக்கு அன்பளிப்பாக கொடுக்க வேண்டுமெனவும், மேற்படி சமாதியில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளையும் பொறித்ததற்கு சபையின் சார்பாக நன்றியைத் தெரிவிப்பதெனவும் திரு. இ. பேரம்பலம் ஓர் பிரேரணையைக் கொண்டுவந்தார். இதைச் சரியென திரு. ஐ. நாகரெத்தினம் அவர்கள் ஆமோதித்தார். கிராம சபையில் 17-9-62-ம் திகதி தொடக்கம் 30-9-62-ம் திகதி வரையும் கறுத்தக் கொடி பறக்கவைப்பதெனவும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. மேற்படி கூட்டத்துக்கு கிராமசபைத் தலைவர் வ. நா. தம்பிராசா தலைமை வகித்தார்.

---

### அருந்ததிய வா. மு. சங்க அங்குரார்ப்பணம்

சென்ற 16-9-62 ஞாயிறன்று கொம்பனித் தெருகியுலேனிலுள்ள அருந்ததிய வாலிபர் முன்னேற்றச் சங்கக் கிளைக் காரியாலயத்தில் திரு. வி. சந்தனம் அவர்கள் தலைமையில் அ. வா. மு. சங்கக் கொம்பனித்தெருக் கிளையின் அங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெற்றது.

தேர்தல் கூட்டத்திற்கு அ. வா. மு. மத்திய சங்கத் தலைவர் திரு. ஆர். சுப்பிரமணியம், ஆலோசகர் திரு. ஏ. இ. மூர்த்தி, "சமுதாயம்'' பத்திரிகை ஆசிரியர் திரு. க. மனேகரன் ஆகியோர் உட்பட ஏழு பேர் கொண்ட ஓர் குழு சென்றது. சங்கத்தின் நோக்கம் செயல் பட வேண்டிய முறை பற்றி திரு. ஆர். சுப்பிரமணியம், திரு. கே. மனேகரன் மற்றும் பலரும் சொற்பெருக்காற்றினுர்கள். பின் வருவோர் கிளை உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்: தலைவர் வி. எஸ். செல்லையா, உப தலைவர்: மாசானம், செயலாளர்: க. ச. கணபதி, துணைச் செயலாளர்: அழகிரி, பொருளாளர்: வி. சந்தனம், துணைப் பொருளாளர்: வீரன், வட்டாரப் பிரதிநிதி: எஸ். செல்வரட்ணம், "சமுதாயம்'' பத்திரிகை நிருபர்: பி. ராகவன். அத்தோடு 6 பேர் கொண்ட செயற் குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப் பட்டனர்.

---

### மாணவ முத்தமிழ் மன்றம்

எட்டியாந் தோட்டை 'மாணவ முத்தமிழ் மன்ற'த்தின் மூன்ரும் தவணையின் முதலாவது கூட்டம் மன்றத்தின் இயக்குனர் திரு. ஏ. பி. வி. கோமஸ், பி. ஏ. அவர்களின் தலைமையின் கீழ் புனித கபிரியேல் கல்லூரி மண்டபத்தில் ஆரம்பமானது. மூன்ரும் தவணைக்கான உத்தியோகஸ்தர்களாகப் பின் வருவோர் தெரிந்து எடுக்கப்பட்டனர்:

தலைவர்: செல்வன் வி. பி. மகாலிங்கம், செயலாளர்: செல்வன் அ. சலமன் ராஜ், வெளியீட்டாசிரியர்: செல்வன் எஸ். பி. சுப்பையா, துணைத் தலைவர்: செல்வன் ஆர். எஸ். மணி, துணைச் செயலாளர்: செல்வி வி. சிங்கராஜ், துணை வெளியீட்டாசிரியர்: செல்வன் தொட்டான், இயக்குநர்—பொருளாளர்: திரு. ஏ. பி. வி. கோமஸ் பி. ஏ.

மேற்படி மாணவ முத்தமிழ் மன்றத்தின் நாடக நடிகர்களால் நடிக்கப்பட்ட "நேர்மை வென்றது!''என்ற நாடகம் ஹட்டனில் நடைபெற்ற "மலை நாட்டுக் கலை விழா''வில் சிறந்த தெனத் தேர்ந்தெடுக்கப்பட்டு, கண்டியில் இம்மாதம் இருபத்திரண்டாம் திகதி நடக்கவிருக்கும் மலைநாட்டுக் கலை விழாவுக்குச் செல்லவிருக்கிறது.

---

### மலை நாட்டில் கலை விழா

தோட்ட மக்களுக்கு தேயிலை மட்டும் எடுக்கத் தெரியுமென்ற பொதுசன அபிப்பிராயத்தை, அவர்களின் சிறுர்கள் கலைகளிலும் திறமையுள்ளவர்கள் என்று மாற்றி அமைத்துள்ளார்கள் என்று 16-9-62-ல் டீமலை பாடசாலை மண்டபத்தில் நடந்த வத்துகாம வட்டாரத் தோட்டப் பாடசாலைகளின் கலைவிழாவிற்குத் தலைமை தாங்கிப் பேசிய ம. மா. த. ஆ. சங்கத் தலைவர் திரு. த. ச. சண்முகதாசன் கூறினுர்.

அவர் மேலும் பேசியதாவது: தோட்டச் சிறுர்கள் குப்பைக்குள் இருக்கும் மாணிக்கங்கள், அவர்கள் எந்த வகையிலும் மற்றச் சிறுர்களிலும் குறைந்தவர்களல்ல. அவர்களுக்கு மற்றப் பாடசாலைகள் போல் வசதிகள் இருப்பின் அவர்கள் எல்லாத்துறைகளிலும் மேம்பட்டு விளங்குவார்கள் என்பதில் ஐயமே இல்லை. வட்டார வித்தியாதரிசி திரு. ஏ. எம். ஆஉல்வும், கண்டி திருத்துவ கல்லூரி திரு. கே. செல்வத்துரையும் பேசினர்.

திரு. பொன். இராசையா நன்றி உரை கூறினர்.

---

### கலைப் போட்டிகள்

மடுவக் கொல்லையைச் சேர்ந்த டீமலைப் பாடசாலை மண்டபத்தில் ம. மா. த. ஆசிரிய சங்கத் தலைவர் திரு. த. ச. சண்முகதாசன் தலைமையில் வ. ல. தோட்டப் பாடசாலைகளின் கலைவிழா சிறப்பாக நடைபெற்றது.

போட்டிகளுக்கு திரு. கே. செல்வத்துரை, திரு. என். நித்தியானந்தன், சங்கீத பூஷணி திருமதி கமலா விவேகாநந்தன் ஆகிய மூவரும் மத்தியஸ்தம் வகித்தனர்.

#### பரிசு பெற்ருேர் விபரம்

நாடகம்: (1) கல்கீரியா, (2) ஆத்தளை, (3) மாவுசா கீழ் கணக்கு.

இசை நாடகம்: (1) கல்கீரியா, (2) கலாபொக் (3) கோம்பறை.

நாட்டுக் கூத்து: (1) ஆத்தளை (2) கல்கீரியா, (3) கலாபொக்.

வாத்திய சங்கீதம்: (1) ஆத்தளை, (2) கோம்பாறை, (3) கலாபொக்.

கிராமிய பாடல்: (1) கல்கீரியா, (2) ஆத்தளை, (3) கலாபொக்.

கர்நாடக சங்கீதம்: (1) ஆத்தளை, (2) கல்கீரியா, (3) கலாபொக்.

#### நடன அரங்கு

நடனம்: (1) கல்பொட, (2) கலாபொக், (3) கல்கீரியா.

கீழைத் தேய நடனம்: (1) கல்பொட (2) கலாபொக், (3) ஆத்தளை.

கிராமிய நடனம்: (1) கற்றுலோயா, (2) கல்பொட (3) கல்கீரியா.

#### பாடசாலைகளின் நிலை:

(1) கல்கிரியா—கற்றுலோயா, முகாமையாளரின் போட்டிக் கிண்ணத்தை பெற்றது.

---

### பாடசாலை திறப்பு விழா

"இப்பகுதி மக்களுக்குப் பாடசாலையொன்று மிக அவசியம். இதை உணர்ந்து குடியேற்றவாசிகளாகிய நீங்கள் உங்கள் பகுதி கிராம முன்னேற்றச் சங்கம் மூலமாக இப்பாடசாலையைக் கட்டி முடித்ததையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். நான் உங்கள் பிரதிநிதி என்னும் முறையில் என்னுல் இயன்றளவு முயற்சித்து இப் பாடசாலையை அரசாங்கத்திடம் ஒப்படைக்கத் தெண்டிப்பேன். இத்துடன் நீங்கள் உங்கள் பகுதியின் மற்றைய அதிகாரிகளுடனும் தொடர்பு கொண்டு ஆவ்ன செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்'' என்று ஜனுப் எம். ஈ. எச். முகம்மதலி எம். பி. கந்தளாய் வட்டுக்கச்சி குடியேற்ற மக்களால் கட்டிய பாடசாலை திறப்பு விழாவில் கூறினுர்.

ஜனுப் முகம்மதலி மேலும் தொடர்ந்து பேசுகையில், ஒற்றுமையாக எல்லோரும் வாழ வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். குடியேற்ற அதிகாரி திரு. பி. விதானகே பாடசாலையைத் திறந்து வைத்தார். ஜனுப் எம். மெளலானு, ஜனுப் எஸ். அப்துல் காதர், திரு. வி. துரைலிங்கம், செல்வி மேரி நோனு ஆகியோரும் பேசினர்.

---

### ஜின்னு இளைஞர் விவசாயக் கழகம்

மண்டூர் 12-ம் கிராம ஜின்னு இளைஞர் விவசாயக் கழகத்தின் நாலாவது வருடாந்தப் பொதுக்கூட்டம் 10-9-62 திங்கட்கிழமை நடைபெற்ற போது பின் வருவோர் புதிய நிருவாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: ஏ. ஏ. ஜப்பார், உப தலைவர்: டி. ஆதம்பாவா, கெளரவ செயலாளர்: எஸ். எம். எம். ஹனிபா, உபசெயலாளர்: எம். ஐ. எம். முகிதீன், தனுதிகாரி: ஏ. ஆர். மஜீது. பரிசோதகர்கள்: யூ. அவுவக்கர்; எஸ். எம். எம். மன்சூர். சிரேஷ்ட ஆலோசகர்கள் எஸ், செய்னுதீன், ஏ. அப்துல் கரிம், ஏ. எம். ஆதம்பாவா, கமிட்டி அங்கத்தவர்கள்: எம். ஐ. எம். கலந்தர் லெவ்வை, வை. குத்தூஸ், எம். சி. ஏ. பரீத், எஸ். எம். றசீட், ஏ. ஆர். ஜப்பார், ஆகியோர்.

---

### காரை தீவில் கூட்டுப் பிரார்த்தனை

மட்டக்களப்பு காரை தீவு விவேகானந்தா சன சமூக நிலையக் கூட்டுப் பிரார்த்தனைக் குழுவினரால், ஆரம்பிக்கப்பட்டு வெள்ளிவாரம் தோறும் நடைபெற்றுவந்த கூட்டுப் பிரார்த்தனை வகுப்பு ஒரு வருட பூர்த்தியெய்தியதை முன்னிட்டு, சனிக்கிழமை (8—9—62) பி. ப. 6.30 மணியளவில் மட்டக்களப்புக் காரை தீவு விஷ்ணு ஆலய வீதியில் ஓர் விழா நடாத்தப்பட்டது. அவ்வமயம் கூட்டுப் பிரார்த்தனை, சொற்பொழிவுகள், பஜனைப்பாடல்கள், வசந்தன் கூத்து முதலியன இடம் பெற்றன. ஈற்றில் மேற்படி குழுவினரின் சிறப்புத் திருவிழாவுடன், பிரசாதம்வழங்கியதும் விழா முடிவுற்றது.

---

(2) ஆத்தளை, துரையின் போட்டிக் கிண்ணத்தை பெற்றது.

(3) கலாபொக்—காலஞ்சென்ற செல்வி சாரதம்பாள் பொன்னையாவின் ஞாபகார்த்த போட்டிக் கிண்ணத்தைப் பெற்றது.

(4) கல்பொட—மடுல்கெல துரையவர்களின் போட்டிக் கிண்ணத்தை பெற்றது.

(5) கற்றுலோயா—த. ச. சண்முகதாசனின் போட்டிக் கிண்ணத்தைப் பெற்றது.

திரு. வி. எஸ். தர்மலிங்கம் செயலாளராகப் பணி புரிந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7-வது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி [கொழும்பு] பிளாஸா [வெள்ளவத்தை] வெலிங்டன் [யாழ்ப்பாணம்]

ராஜ் [நீர்கொழும்பு] விஜயா [அம்பாரை]

மற்றும் 7 திரைகளில்

தமிழ் நாடு முழுவதும் 100 நாட்களுக்கு மேல் ஓடி வெற்றி விழா கொண்டாடிய படத்தைப் பார்த்தால் பசிதீரும்



எம். ஜி. ராமச்சந்திரன்
பி. சரோஜாதேவி
எம். ஆர். ராதா
எஸ். ஏ. அசோகன்
பி. கண்ணாம்பா
நடித்த

# தாய்சொல்லைத் தட்டாதே

## இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

கெப்பிட்டல் (கொழும்பு)

விஜயா (மட்டக்களப்பு) மொடர்ன் (பதுளை)

ஸ்ரீ கிருஷ்ணா (திருகோணமலை) விஜிதா (ஹட்டன்)

கதையிலே புதுமை, கருத்திலே மலர்ச்சி —அனுதைகள் சூழ்ச்சிக்காரர்களிடம் அகப்பட்டார்கள். முடிவில் அவர்களுக்கு கிடைத்தது அவலமா?.........ஆனந்தமா? .........பாருங்கள்!!



★பி.எஸ். வீரப்பா, சௌகார் ஜானகி,
★டி.எஸ். பாலையா, தாம்பரம் லலிதா
★வனஜா, டி. கே ராமச்சந்திரன்,
★வளையாபதி முத்துகிருஷ்ணன்
★காகா ராதாகிருஷ்ணன்

மற்றும் பலர் நடித்த

அருணா பிலிம்ஸ் **சவுக்கடி சந்திரகாந்தா**

இசை: ஜி. ராமநாதன்

டைரக்ஷன்: எம். ராதா கிருஷ்ணன்


# மகத்தான தீபாவளி வெளியீடு!

## செல்லமஹால்

மற்றும் அநேக சிலோன் தியேட்டர்ஸ் திரைகளில்

- பி. பானுமதி—ஏ. நாகேஸ்வரராவ்
- சௌகார் ஜானகி—ஜாவர் சீதாராமன்
- பி. ஆர். பந்துலு—தேவிகா

முதலியோர் நடித்த



# கானல் நீர்

## சில தினங்களுக்கு மட்டும்

மருதானை **சென்ட்ரல்** திரையில்

பிற்பகல் 3, மாலை 6-15, இரவு 9-30க்கு ஞாயிறு காலை 10-30க்கு

ராஜ்குமார் * மீனு குமாரி * நதீரா * ஜோனிவோக்கர் * ஹெலன்

மற்றும் பலர் நடித்த

# தில் அப்னா அவுர் பிரீத் பராய் (ஹிந்தி)

(புத்தம் புதிய கொப்பி)

காதிற்கினிய பாடல்களும், கண்கவர் நடனங்களும் நிறைந்த இப் படத்தை பல்லாயிரக்கணக்கானோர் மீண்டும் மீண்டும் பார்க்கிறார்கள்!

வருகிறது! **சென்ட்ரல்** மருதானை மற்றும் 6 திரைகளுக்கு!

சிவாஜி கணேசன், எஸ். எஸ். ராஜேந்திரன் எம். எல். ஏ., கே. ஆர் ராமசாமி எம். எல். சி., லலிதா, பத்மினி, ராகினி, தங்கவேலு, சந்திரபாபு, எம். என். கிருஷ்ணன், பி. ஆர். பந்துலு, வி. கே. ராமசாமி மற்றும் பலர் நடித்த

ஏ. எல். எஸ். புரொடக்ஷன்ஸ் அளிக்கும்

# செந்தாமரை

பாடல்கள்: கண்ணதாசன் டைரக்ஷன்: ஏ. பீம்சிங் இசை: விஸ்வநாதன்-ராமமூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு, பண்டாரநாயக்க மாவத்த, 194ஏ, இலக்கத்தில் 1962-ம் வருடம் செப்டம்பர் மாதம் 30-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.